வெளியீடு 10-7-1999 Issued 10-7-1999

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வெள்ளிக்கிழமை, நவம்பர் 27, 1998 - தொகுதி 62 - எண் 1

**Friday the 27th November, 1998—Volume 62 - No. 1**


*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Assembly Secretariat, Fort St. George, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**



D
V2ll,31 N98
N98·62·1
219403

## 27–11–1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் | vii-x |
| Personnel of the Government of Tamil Nadu | xi-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல் | xvii-xviii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| *1.* **இரங்கல் குறிப்பு--** | |
| பஞ்சாப் மாநிலம் லூதியானா அருகில் ஏற்பட்ட இரயில் விபத்தில் பலர் மரணம் | 1-2 |
| *2.* **வினாக்கள்-விடைகள்--** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 2-46 |
| *3.* **விதி 110-ன்கீழ் அறிக்கை--** | |
| உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதியம் அளித்தல் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை | 47-48 |
| *4.* **சிறப்புக் கவன ஈர்ப்பு--** | |
| குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட தாயும் குழந்தையும் மரணம் | 48-56 |

பக்கங்கள்

5. தகவல் கோரல்—

(அ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து விளக்கம் — 58-60, 61-63

(ஆ) காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை தயாரிக்கும் வெடிபொருட்கள் வினியோகத்தைக் கண்காணித்தல் — 60,63-64

(இ) சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு விதிப்படி ஐந்து நாட்கள் முன்னறிவிப்புக் கொடுக்க வலியுறுத்தல் — 67-70

6. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு — 64

(ஆ) பொது நிறுவனங்கள் குழு — 65

7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 65-66

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 66

(இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 66-67

(ஈ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1998 — 70-71

219403



பக்கங்கள்

8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண். 4) சட்டமுன்வடிவு, 1998 — 71-73

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 71-72,73

(ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 73-78

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 73,75,77,78

திரு. பி. வெங்கடசாமி — 74,75-77

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 78-85

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 79,80,82-83, 84,85

திரு. ஆர். சொக்கர் — 79-80,81-82, 83,84

(ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 — 86-87

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 86,87

(உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 — 88-89

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 88,89

(ஊ) தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடைசெய்தல் சட்டமுன்வடிவு, 1998 — 89-125

மாண்புமிகு திரு. ஆலடி அருணா — 89,101,102,115, 120-125

திரு. இரா. தாமரைக்கனி — 90-95, 108,109

டாக்டர் காஞ்சனா கமலநாதன் — 92-93

திரு. வ. அன்பழகன் — 93

83-276—1a

| | பக்கங்கள் |
|---|---|
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஊ) தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடைசெய்தல் சட்டமுன்வடிவு, 1998--தொடர்ச்சி | 89-125 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 95-97,98-99, 101,102 |
| *திரு. செங்கை சிவம் | 97-99 |
| திரு. பி. வெங்கடசாமி | 100-101 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 102-103 |
| திரு. சி. வேலாயுதன் | 103-104 |
| திரு. ஐ. கணேசன் | 104 |
| *திரு. ஜி. நிஜாமுதீன் | 104-106 |
| திரு. ஜி. பழனிசாமி | 106-108 |
| திரு. சி. ஞானசேகரன் | 108-113 |
| மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 111,119 |
| திரு. ம. அப்துல் லத்தீப் | 113-120 |
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 116 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 116,117 |
| (எ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 125-127 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 125,127 |
| (ஏ) தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு. 1998 | 127-135 |
| மாண்புமிகு திரு. ஆலடி அருணா | 127,131-134, 135 |
| திரு. சி. ஞானசேகரன் | 127-130, 132-133 |
| திரு. பி. வெங்கடசாமி | 130-131 |





| | பக்கங்கள் |
|---|---|
| 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)--தொடர்ச்சி | |
| (ஐ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்ச வரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 1998 | 136-137 |
| *மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் | 136,137 |
| (ஒ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 138-140 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 139,140 |
| (ஓ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 140-142 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 141,142 |
| (ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 142-145 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 143,144 |
| திரு. சி. ஞானசேகரன் | 143 |
| (அஅ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 | 145-150 |
| மாண்புமிகு திரு. கோ.சி.மணி | 145,147,148-149,150 |
| டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் | 145-147 |
| திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் | 147-148 |
| (ஆஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு. 1998 | 150-152 |
| மாண்புமிகு திரு. கோ.சி. மணி | 150,152 |

| | | பக்கங்கள் |
|---|---|---|
| 9. | அறிவிப்பு-- | |
| | தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.) | 73 |
| 10. | அரசினர் தீர்மானம்-- | |
| | விதி 32-ஐத் தளர்த்தல் | 138 |
| 11. | பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்-- | 152-153 |



## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர்--நீதிபதி செல்வி மீ. பாத்திமா பீவி

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. **முதலமைச்சர்** : **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி :**
பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, மாவட்ட வருவாய் அதிகாரிகள், உள் துறை, நிதி, திட்டம், தொழில்கள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, சிறுபான்மையினர் நலன், கடவுச் சீட்டு மற்றும் வணிக வரிகள்.

2. **கல்வி அமைச்சர்** : **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :**
தொழிற்கல்வி உள்ளிட்ட கல்வி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணு வியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், விளையாட்டு மற்றும் இளைஞர் பணிப்படை மற்றும் முன்னாள் இராணுவத்தினர்.

3. **மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலம் மற்றும் மின்சாரம்.

4. **வருவாய்த் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :**
வருவாய், வருவாய் வாரியம், மாவட்ட வருவாய் நிருவாகம் மற்றும் மாவட்டத் துணை ஆட்சியாளர்கள்.

5. **ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** : **மாண்புமிகு திரு. கோ.சி. மணி :**
நகராட்சி நிருவாகம், சமுதாய வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் ஊரகக் கடன்கள். நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

19. ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. இ. பெரியசாமி :
கிராமக் குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட ஊரகத் தொழில்கள், பதிவுத் துறை, முத்திரைத் தாள் சட்டம் மற்றும் சத்துணவு.

20. செய்தி, விளம்பரம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன் :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல் மற்றும் திரைப் படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

21. கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் : மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன் :
கால்நடைப் பராமரிப்பு.

22. சமூக நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குண பாண்டியன் :
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உட்பட சமூக நலன், இரவலர் காப்பு இல்லம், அனாதை இல்லங்கள், குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்டம்.

23. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு :
ஆதிதிராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்.

24. சுற்றுலாத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன் :
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

25. கதர்த் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு :
கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

26. மீன் வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன் :
மீன் வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்.



## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

## GOVERNOR—Justice Selvi M. FATHIMA BEEVI

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**
Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Home, Finance, Planning, Industries, Prohibition and Excise, Minorities Welfare, Passports and Commercial Taxes.

2. **Minister for Education** .. **The Hon. Prof. K. Anbazhagan:**
Education including Technical Education, Legislature, Elections, Electronics, Science and Technology, Sports and Youth Service Corps and Ex-Servicemen.

3. **Minister for Health and Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**
Health, Medical Education and Family Welfare and Electricity.

4. **Minister for Revenue** .. **The Hon. Thiru Nanjil K. Manoharan:**
Revenue, Board of Revenue, District Revenue Establishment and Deputy Collectors.

5. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru Ko. Si. Mani:**
Municipal Administration, Community Development, Panchayats, Panchayat Unions and Rural Indebtedness and Urban and Rural Water Supply.

6. வேளாண்மைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்புப் பயிர் மேம்பாடு.

7. பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனத் திட்டம் மற்றும் செயற்திட்டப் பணிகள்.

8. போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி :
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

9. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டினன் :
நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்.

10. தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் : மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை.

11. உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கா.நா. நேரு :
உணவு, விலைக் கட்டுப்பாடு மற்றும் குடிமைப் பொருட்கள் வழங்கல், பொது விநியோக முறை, கூட்டுறவு மற்றும் புள்ளிவிவரங்கள்.

12. பால்வளத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. க. சுந்தரம் :
பால், பால்பண்ணை வளர்ச்சி, குடிசை மாற்றுத் திட்டம் மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு.



13. தொழிலாளர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான் :
தொழிலாளர் நலன், மக்கள்தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, இரும்பு மற்றும் எஃகுக் கட்டுப்பாடு, பத்திரிகை அச்சுக் காகிதக் கட்டுப்பாடு மற்றும் இசுலாமிய அறக்கட்டளை (வக்ஃப்).

14. சட்டத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. ஆலடி அருணா :
சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலைகள், எடைகள் மற்றும் அளவைகள் குறித்த சட்டம், கம்பெனிகள் பதிவு, கடன் வழங்கல் பற்றிய சட்டமியற்றல் உள்பட கடன் நிவாரணம் மற்றும் சீட்டு நிதி பற்றிய சட்டம் இயற்றுதல்.

15. கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி :
கைத்தறி மற்றும் துணித் தொழில்.

16. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் :
பிற்படுத்தப்பட்டோர் நலன், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலன் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர்.

17. வனத் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி :
வனம், சின்கோனா மற்றும் சுற்றுச் சூழல் மாசுக் கட்டுப்பாடு.

18. வீட்டு வசதித் துறை அமைச்சர் : மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி ;
வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி, நகர அமைப்பு திட்டமிடல் மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சி.

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**
Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess and Sugarcane Development.

7. **Minister for Public Works** .. **The Hon. Thiru Duraimurugan:**
Public Works, Irrigation including Minor Irrigation and Programme Works.

8. **Minister for Transport** .. **The Hon. Dr. K. Ponmudi :**
Transport, Nationalised Transport, Motor Vehicles Act and Chennai Metropolitan Development Authority.

9. **Minister for Highways** .. **The Hon. Thiru Pasumpon Tha. Kiruttinan:**
Highways and Ports.

10. **Minister for Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Dr. M. Thamizhkudimagan:**
Tamil Official Language, Tamil Culture and Hindu Religious and Charitable Endowments.

11. **Minister for Food, Public Distribution System and Co-operation** .. **The Hon. Thiru K.N. Nehru:**
Food, Price Control and Civil Supplies, Public Distribution System, Co-operation and Statistics.

12. **Minister for Milk** .. **The Hon. Thiru K. Sundaram:**
Milk and Dairy Development, Slum Clearance and Accommodation Control.



13. **Minister for Labour** .. **The Hon. Thiru A. Rahmankhan:**
Labour, Census, Employment and Training, Iron and Steel Control, Newsprint Control and Wakf.

14. **Minister for Law** .. **The Hon. Thiru Aladi Aruna:**
Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits.

15. **Minister for Handlooms** .. **The Hon. Thiru N.K.K. Periasamy:**
Handlooms and Textiles.

16. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**
Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees:

17. **Minister for Forest** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**
Forest, Cinchona, and Environmental Pollution Control.

18. **Minister for Housing** .. **The Hon. Thiru K. Pitchandi:**
Housing, Rural Housing Development, Town Planning and Urban Development.

19. **Minister for Rural Industries and Registration** .. **The Hon. Thiru I. Periasamy:**
Rural Industries including Village and Cottage Industries, Registration and Stamp Act and Nutritious Meals.

| | |
|---|---|
| **20. Minister for Information, Publicity and Printing** | .. **The Hon. Thiru V. Mullaivendan:** Information and Publicity, Film Technology and Cinematography Act. Stationery and Printing and Government Press. |
| **21. Minister for Animal Husbandry** | .. **The Hon. Pulavar P.M. Senguttuvan:** Animal Husbandry. |
| **22. Minister for Social Welfare** | .. **The Hon. Tmt. S.P. Sarkunapandian:** Social Welfare including Women's and Children's Welfare, Beggars Home, Orphanages and Correctional Administration and Integrated Child Development Services Scheme. |
| **23. Minister for Adi-Dravidar and Tribal Welfare** | .. **The Hon. Thiru Samayanallur S. Selvarasu:** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| **24. Minister for Tourism** | .. **The Hon. Thiru N. Suresh Rajan:** Tourism and Tourism Development Corporation. |
| **25. Minister for Khadi** | .. **The Hon. Thiru Andhiyur P. Selvarasu:** Khadi Board, Bhoodan and Gramdan. |
| **26. Minister for Fisheries** | .. **The Hon. Tmt. S. Jenefer Chandran:** Fisheries and Fisheries Development Corporation. |



# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்

பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. ரா. சேதுநாதன்

திரு. கு. மனோகரன்

திரு. வ. வேலுசாமி

திரு. சி. ஞானசேகரன்

திரு. நா. பெரியசாமி

திரு. முகம்மது கோதர் மைதீன்

செயலாளர்

திரு. டி. சாலமன் ஜெயபால்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் பட்டியல்

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. வெ. இராசாராமன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | கூடுதல் செயலாளர் |
| 2. | திரு. செ.ஏ. துரைபாண்டியன்,<br>பி.ஏ., பி.எல். | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 3. | திருமதி பானுமதி ஆனந்தராஜன்,<br>பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 4. | திரு. கா.ப. இராஜன்,<br>டி.ஆர்.எஸ்., பி.ஜி.எல். | .. | இணைச் செயலாளர் |
| 5. | திரு. இரா. வெங்கடேசன்,<br>எம்.ஏ., எல்.எல்.பி. | .. | இணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 6. | திரு. கி. சாயிநாதன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 7. | திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. | குழு அலுவலர் |
| 8. | திருமதி பவானி சுப்பையா,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 9. | திரு. சா. கணேசன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 10. | திரு. தி. திருமாவளவன்,<br>பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 11. | திரு. வெ. இராமகிருஷ்ணன்,<br>எம்.ஏ., பி.எல். | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்புத் தனிச் செயலர் |
| 12. | திரு. மு. ஆறுமுகப்பெருமாள்,<br>எம்.ஏ., பி.லிட். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 13. | திரு. சு. ராஜகுரு | .. | குழு அலுவலர் |
| 14. | திரு. சௌரி அய்யாத்துரை | .. | பேரவைத் தலைவரின்<br>சிறப்பு நேர்முக<br>உதவியாளர் |
| 15. | திரு. க. சம்பத்ராஜன்,<br>பி.ஏ., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 16. | திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. | துணைச் செயலாளர்<br>(பதிப்பாளர்) |
| 17. | திரு. எம். ஜோபாய்,<br>பி.காம்., பி.ஜி.எல். | .. | துணைச் செயலாளர் |

21. ஆல்பன், டாக்டர் வே. .. திருவட்டாறு

22. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்

23. ஆறுமுகம், திரு. தி.ப. .. திருச்செங்கோடு

24. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்

25. ஆனந்தன், திரு. பால. .. வந்தவாசி (செ.வ.)

26. இரகுமான்கான், திரு. அ. .. இராமநாதபுரம்

27. இராசமாணிக்கம், திரு. க.வெ.வீ. .. மேலூர்

28. இராசமாணிக்கம், திரு. பி. .. ஒரத்தநாடு

29. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)

30. இராசேந்திரன் என்கிற தீரன், திரு. ஆ. .. ஆண்டிமடம்

31. இராமசாமி, டாக்டர் வை. .. பண்ருட்டி

32. இராமசாமி, திரு. கே.ஆர். .. திருவாடனை

33. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்

34. இராமச்சந்திரன், திரு. சி.இரா. .. தொண்டாமுத்தூர்

35. இராமச்சந்திரன், திரு. மா. .. திருவோணம்

36. இராமலிங்கம், திரு. ஏ. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

37. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்

38. இராமன், டாக்டர் இ. எஸ். எஸ். .. பள்ளிப்பட்டு

39. இராமஜெயம், திரு. ந.பூ. .. மயிலாப்பூர்

40. இராஜ ரெட்டி, திரு. ச. .. தளி

41. இராஜேந்தர், திரு. டி. .. பூங்கா நகர்

42. இளங்கோ, திரு. கோ. .. அவினாசி (செ.வ.)

43. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)



44. உதயசூரியன், திரு. தா. .. சங்கராபுரம்

45. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்

46. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி

47. கணேசன், திரு. கே. சி. .. ஜெயங்கொண்டம்

48. கருணாநிதி, கலைஞர் மு. .. சேப்பாக்கம்

49. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செ.வ.)

50. கருப்பண்ண உடையார், திரு. ந. .. பாபநாசம்

51. கருப்புசாமி, திரு. டி. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)

52. கன்னையன், திரு. க. .. தொட்டியம்

53. காஞ்சனா கமலநாதன், டாக்டர் .. கிருஷ்ணகிரி

54. காந்தி, திரு. ஆர். .. இராணிப்பேட்டை

55. கிருஷ்ணசாமி, டாக்டர் க. .. ஒட்டப்பிடாரம் (செ.வ.)

56. கிருஷ்ணன், திரு. எஸ். வி. .. நாங்குநேரி

57. கிருஷ்ணன், திரு. சீ. வெ. .. வேடசந்தூர்

58. குண்டன், திரு. டி. .. உதகமண்டலம்

59. குத்தாலம் பி. கல்யாணம், திரு. .. குத்தாலம்

60. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்

61. கும்மிடிப்பூண்டி கி. வேணு, திரு. .. கும்மிடிப்பூண்டி

62. குழந்தை தமிழரசன், திரு. .. விருத்தாசலம்

63. கோதண்டம், திரு. ஏ. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

64. கோபால், திரு. பா. .. மேட்டூர்

65. கோபு, திரு. சி. .. அணைக்கட்டு

66. கோமதி சீனிவாசன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)

| | | | |
|---|---|---|---|
| 18. | திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்சி., பி.எல். | .. | துணைச் செயலாளர் |
| 19. | திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 20. | திரு. ம. பிலிப், எம்.ஏ., பிஜி.எல். | .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| 21. | திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 22. | திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 23. | திரு. மா. செல்வராஜ், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 24. | திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 25. | திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி. எல். | .. | சார்புச் செயலாளர் |
| 26. | திருமதி என். துளசிபாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 27. | திரு. கோ. ரவீந்திரன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 28. | திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| 29. | திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 30. | திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 31. | திருமதி சி. கனகவல்லி, டி.சி.பி. | .. | தலைமை நிருபர் |
| 32. | திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 33. | திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 34. | திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 35. | திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 36. | திரு. நா. நடராஜன், பி.ஏ. | .. | தலைமை நிருபர் |
| 37. | திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| 38. | திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. | தலைமை நிருபர் |
| 39. | திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. | தலைமை நிருபர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி)

## பெயர்களும் தொகுதிகளும்

| | | | |
|---|---|---|---|
| 1. | அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. | அந்தியூர் ப. செல்வராசு, திரு. | .. | அந்தியூர் (செ.வ.) |
| 3. | அபுல்ஹசன், திரு. எம். எம். எஸ். | .. | மயிலாடுதுறை |
| 4. | அப்துல் நாசர், திரு. அ.வ. | .. | புவனகிரி |
| 5. | அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. | அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. | அமரமூர்த்தி, திரு. டி. | .. | அரியலூர் |
| 8. | அய்யலுசாமி, திரு. லி. | .. | கோவில்பட்டி |
| 9. | அருண்குமார், திரு. பா. | .. | மேட்டுப்பாளையம் |
| 10. | அழகராஜா, திரு. என்.ஆர். | .. | தேனி |
| 11. | அழகிரி, திரு. ச. | .. | சிதம்பரம் |
| 12. | அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13. | அன்பழகன், திரு. வ. | .. | செய்யார் |
| 14. | அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 15. | அன்பில் பொய்யாமொழி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 16. | ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிப்பட்டி |
| 17. | ஆண்டமுத்து, திரு. வெ.அ. | .. | பவானிசாகர் |
| 18. | ஆண்டி அம்பலம், திரு. எம். | .. | நத்தம் |
| 19. | ஆரூண் ரஷீத், திரு. ஜே.எம். | .. | வில்லிவாக்கம் |
| 20. | ஆலடி அருணா, திரு. | .. | ஆலங்குளம் |

67. கோவிந்தன், திரு. ப. .. தாரமங்கலம்
68. கோவிந்தன், திரு. வெ. .. பேரணாம்பட்டு (செ.வ.)
69. சக்ரபாணி, திரு. ஆர். .. ஒட்டன்சத்திரம்
70. சண்முகம், திரு. கோ. .. திருப்பத்தூர்
71. சண்முகம், திரு. சி. .. ஆலந்தூர்
72. சண்முகம், திரு. ம. .. கிணத்துக்கடவு
73. சந்தானம், திரு. லா. .. சோழவந்தான்
74. சந்திரசேகரன், திரு. சி. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)
75. சந்திரசேகரன், திரு. துரை. .. திருவையாறு
76. சமயநல்லூர் எஸ். செல்வராசு, திரு. .. சமயநல்லூர் (செ.வ.)
77. சம்பத், திரு. ஏ.ஜி. .. முகையூர்
78. சரஸ்வதி, திருமதி ஆர். .. தாராபுரம் (செ.வ.)
79. சற்குணபாண்டியன், திருமதி எஸ்.பி. .. டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
80. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
81. சிங்காரவேலு, திரு. வி.பி. .. வால்பாறை (செ.வ.)
82. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி
83. சிவராமன், திரு. ஆர். .. திருப்பத்தூர்
84. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்
85. சிவலிங்கம், திரு. எஸ்.ஆர். .. பனமரத்துப்பட்டி
86. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி
87. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருத்தணி
88. சின்னய்யா, திரு. வெ. .. திருமயம்



89. சீனிவாசன், திரு. ஏ.ஆர்.ஆர். .. விருதுநகர்
90. சுகவனம், திரு. இ.ஜி. .. பர்கூர்
91. சுடலைமுத்து, திரு. அ. .. போடிநாயக்கனூர்
92. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி
93. சுந்தரம், திரு. க. .. பொன்னேரி (செ.வ.)
94. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி
95. சுந்தரம், திரு. பி.ஆர். .. ராசிபுரம்
96. சுந்தர், திரு. கே. .. உத்திரமேரூர்
97. சுப்பராயன், திரு. கே. .. திருப்பூர்
98. சுப்பிரமணி என்கிற சி.சு.மணி, திரு. சி. .. திருவள்ளூர்
99. சுப்பிரமணி, திரு. பி.என். .. ஆற்காடு
100. சுப்பிரமணியன், திரு. அ.லெ. .. திருநெல்வேலி
101. சுப்புலட்சுமி செகதீசன், திருமதி .. மொடக்குறிச்சி
102. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி
103. செங்குட்டுவன், புலவர் பூ.ம. .. மருங்காபுரி
104. செங்கை சிவம், திரு. .. பெரம்பூர் (செ.வ.)
105. செல்லக்குமார், டாக்டர் அ. .. தியாகராய நகர்
106. செல்வம், திரு. ரெ. .. குளித்தலை
107. செல்வராஜ் என்கிற கவிதைப்பித்தன், திரு. .. கொளத்தூர் (செ.வ.)
108. செல்வராஜ், திரு. து. .. உடுமலைப்பேட்டை
109. சேகரன், திரு. ஆர்.ஆர். .. ஓமலூர்
110. சேதுநாதன், திரு. ரா. .. திண்டிவனம்

111. சைதை கா. கிட்டு, திரு. .. சைதாப்பேட்டை
112. சொக்கர், திரு. ஆர். .. சிவகாசி
113. சொக்கலிங்கம், திரு. ஜி. .. திருப்போரூர் (செ.வ.)
114. ஞானசேகரன், டாக்டர் ஆ. .. மேல்மலையனூர்
115. ஞானசேகரன், திரு. சி. .. வேலூர்
116. டேவிட் செல்வின், திரு. எஸ். .. ஸ்ரீவைகுண்டம்
117. தங்கமணி, திரு. கே. .. மானாமதுரை (செ.வ.)
118. தங்கம் தென்னரசு, திரு. .. அருப்புக்கோட்டை
119. தங்கவேலன், திரு. சுப. .. கடலாடி
120. தங்கவேல், திரு. அ. ல. .. சேலம்-2
121. தண்டபாணி, திரு. சி. டி. .. கோயம்புத்தூர் மேற்கு
122. தமிழ்க்குடிமகன், முனைவர் மு. .. இளையான்குடி
123. தமிழ்ச்செல்வன், திரு. ஆர். .. அரக்கோணம் (செ.வ.)
124. தமிழ்மணி, திரு. வீ. .. செங்கல்பட்டு
125. தளபதி, திரு. கோ. .. சேடப்பட்டி
126. தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. .. சேலம்-1
127. தனபால், திரு. வி. ஜி. .. குடியாத்தம்
128. தாமரைக்கனி, திரு. இரா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
129. திசைவீரன், திரு. உ. .. பரமக்குடி (செ.வ.)
130. திருஞானசம்பந்தம், திரு. எஸ். வி. .. பேராவூரணி
131. திருநாவுக்கரசு, திரு. எஸ். .. அறந்தாங்கி
132. திருவேங்கடம், திரு. பெ.சு. .. கலசப்பாக்கம்
133. துரைசாமி, திரு. பா. .. வரகூர் (செ.வ.)
134. துரை, திரு. கே. .. திருவெறும்பூர்



135. துரைமுருகன், திரு. .. காட்பாடி
136. தெய்வநாயகம், திரு. எ. .. மதுரை மத்தி
137. தேவராஜன், டாக்டர் மு. .. பெரம்பலூர் (செ.வ.)
138. நடராசன், திரு. ஆ. .. பேரூர்
139. நடராஜன், திரு. த. .. செஞ்சி
140. நயினா முகமது, திரு. கோ. .. கடையநல்லூர்
141. நன்னன், திரு. கொ.வீ. .. செங்கம் (செ.வ.)
142. நாகரத்தினம், திரு. ச. .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
143. நாஞ்சில் கி. மனோகரன், திரு. .. திருவல்லிக்கேணி
144. நிஜாமுதீன், திரு. ஜி. .. நாகப்பட்டினம்
145. நெல்லிக்குப்பம் அ. மணி, திரு. .. நெல்லிக்குப்பம்
146. நேரு, திரு. கா.நா. .. லால்குடி
147. பசும்பொன் தா. கிருட்டிணன், திரு. .. சிவகங்கை
148. பத்மா, டாக்டர் .. நன்னிலம (செ.வ.)
149. பரணிகுமார், திரு. பா. .. திருச்சிராப்பள்ளி-1
150. பரிதி இளம்வழுதி, திரு. .. எழும்பூர் (செ.வ.)
151. பழனிசாமி, திரு. ஜி. .. திருத்துறைப்பூண்டி (செ.வ.)
152. பழனிவேல் ராஜன், திரு. பி.டி.ஆர். .. மதுரை மேற்கு
153. பன்னீர்செல்வம், திரு. எம். ஆர்.கே. .. குறிஞ்சிப்பாடி
154. பன்னீர்செல்வம், திரு. மு. .. சீர்காழி (செ.வ.)
155. பாண்டுரங்கன், திரு. ந. .. பெரணமல்லூர்
156. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. முதுகுளத்தூர்
157. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.என்... பவானி

| | | |
|---|---|---|
| 203. ரவி அருணன், திரு. கே. | .. | தென்காசி |
| 204. ரவிசங்கர், திரு. கு. | .. | விளாத்திகுளம் |
| 205. ராசேந்திரன், திரு. ஏ. | .. | போளூர் |
| 206. ராணி, செல்வி க. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 207. ராமசாமி, திரு. ஏ.எம். | .. | ஆத்தூர் |
| 208. ராமச்சந்திரன், திரு. செ. | .. | திருப்பரங்குன்றம் |
| 209. ராஜு, திரு. எஸ். | .. | பொள்ளாச்சி |
| 210. ராஜேந்திரன், திரு. எஸ்.கே. | .. | சத்தியமங்கலம் |
| 211. ராஜ்குமார் மன்றாடியார், திரு. என்.எஸ். | .. | காங்கேயம் |
| 212. லட்சுமணன், திரு. வி.கே. | .. | கோயம்புத்தூர் (கிழக்கு) |
| 213. வல்லரசு, திரு. பி.என். | .. | உசிலம்பட்டி |
| 214. வாசுகி முருகேசன், திருமதி | .. | கரூர் |
| 215. விஜயகுமார், திரு. கே.எம். | .. | சாத்தூர் |
| 216. விஜயன், திரு. டி.சி. | .. | திருவொற்றியூர் |
| 217. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. | .. | வீரபாண்டி |
| 218. வீரப்பன், திரு. கே.கே. | .. | கபிலர்மலை |
| 219. வெங்கடசாமி, திரு. பி. | .. | ஓசூர் |
| 220. வெங்கடாசலம், திரு. அ. | .. | ஆலங்குடி |
| 221. வெங்கடாசலம், திரு. ஜி.எல். | .. | பாலக்கோடு |
| 222. வெங்கடேசன், திரு. ச. க. | .. | மதுராந்தகம் |
| 223. வெங்கடேசன், திரு. பி.வி.எஸ். | .. | காவேரிப்பட்டினம் |
| 224. வெங்கிடு, திரு. ஜி. பி. | .. | கோபிச்செட்டிப் பாளையம் |



| | | |
|---|---|---|
| 225. வேடம்மாள், திருமதி ஏ.ஆர். | .. | அரூர் (செ.வ.) |
| 226. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 227. வேலாயுதன், திரு. சி. | .. | பத்மநாபபுரம் |
| 228. வேலுசாமி, திரு. வ. | .. | மதுரை கிழக்கு |
| 229. வேல்சாமி, திரு. க. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 230. வேல்துரை, திரு. பா. | .. | சேரன்மகாதேவி |
| 231. வைதியலிங்கம், திரு. மீ.அ. | .. | தாம்பரம் |
| 232. ஜெனிபர் சந்திரன், திருமதி எஸ். | .. | திருச்செந்தூர் |
| 233. ஜோதிகண்ணன், திரு. மு.ந. | .. | முசிறி |
| 234. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 235. ஆன் டி' மான்டி, திருமதி | .. | நியமனம் |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. கே.வி. வெங்கடபதி .. அரசு தலைமை வழக்கறிஞர்

158. பாலசுப்பிரமணியன், திரு. ப. .. பட்டுக்கோட்டை
159. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
160. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
161. புரட்சிமணி, திரு.ச. .. மங்களூர் (செ.வ.)
162. பூவேந்தன், திரு. த. .. பழனி (செ.வ.)
163. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
164. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
165. பெரியசாமி, திரு. என்.கே.கே. .. ஈரோடு
166. பெரியசாமி, திரு. நா. .. பெருந்துறை
167. பெருமாள், திரு. வி. .. ஏற்காடு (ஆ.வா.)
168. பெர்னார்டு, திரு. இரா. .. குளச்சல்
169. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. சிங்காநல்லூர்
170. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
171. பொன்முடி, திரு. எஸ்.எஸ். .. பல்லடம்
172. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். .. நிலக்கோட்டை (செ.வ.)
173. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
174. மணிக்கண்ணன், திரு. ஆ.செ. .. திருநாவலூர்
175. மணி, டாக்டர் அ. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
176. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
177. மணி, திரு. டி. .. விளவங்கோடு
178. மணி, திரு. ஜி.கே. .. பென்னாகரம்
179. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்



180. மணிமாறன், திரு. இரா. .. திண்டுக்கல்
181. மணிவர்மா, திரு. க. .. தண்டராம்பட்டு
182. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
183. மதிவாணன், திரு. செ. .. அச்சரப்பாக்கம் (செ.வ.)
184. மனோகரன், திரு. கு. .. தர்மபுரி
185. மாயவன், திரு. தி.ப. .. ஸ்ரீரங்கம்
186. மாரி அய்யா, திரு. பே. .. புதுக்கோட்டை
187. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)
188. முகம்மது இஸ்மாயில், திரு. எஸ்.எஸ். .. அரவக்குறிச்சி
189. முகம்மது கோதர் மைதீன், திரு. .. பாளையங்கோட்டை
190. முத்து, திரு. வி. .. சங்கரி (செ.வ.)
191. முத்துராமலிங்கம், திரு. ம. .. திருமங்கலம்
192. முபாரக், திரு. பா.மு. .. கூடலூர்
193. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
194. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
195. முனிரத்தினம், திரு. ஆ.மு. .. சோளிங்கர்
196. மூக்கப்பன், திரு. இரா. .. சின்னசேலம்
197. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
198. மோகனதாசன், திரு. கோ. .. பூம்புகார்
199. மோகன் கந்தசாமி, திரு. ப. .. பொங்கலூர்
200. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்
201. ரங்கநாதன், திரு. எம். .. குன்னூர் (செ.வ.)
202. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்

[பேரவைத் தலைவர்] [1998 நவம்பர் 27

இரங்கலையும், அனுதாபத்தையும் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இச்சம்பவம் குறித்து தன்னுடைய ஆழ்ந்த அனுதாபத்தையும், இரங்கலையும் பஞ்சாப் முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இச்சம்பவத்தில் உயிர் இழந்தவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் இப்பேரவையின் உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, சிறிது நேரம் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, சிறிது நேரம் அமைதி காத்தனர்.)

## 2. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 61, திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

61—

**அயல்நாட்டு நிறுவனங்களின் பல்கலைக்கழக மையங்கள்**

***8441—திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் அயல்நாட்டு நிறுவனங்கள் பல்கலைக்கழக மையங்கள் நிறுவ அரசு அனுமதியளிக்குமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது இதுபோன்ற கருத்துரு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகச் சிறந்த சிந்தனையின் அடிப்படையிலே இந்தக் கேள்வி



1998 நவம்பர் 27]

எழுப்பப்பட்டுள்ளது என்று நான் உணர்கின்றேன். இந்தியாவிலே வெளிநாடுகளின் உதவியோடு I.I.T. என்ற ஒரு கல்வி ஸ்தாபனம் 5 இடங்களில் ஆரம்பிக்கப்பட்டு மிகச் சிறப்பாக நடைபெறுகின்றன. இங்கு உயர் கல்வி பெற்றவர்கள் வெளிநாடுகளில் படித்தால் இன்னும் சிறப்பாக கல்வி கற்கலாமே என்ற ஆசையில் பலர் செல்கின்றனர். பலருக்கு அந்த வாய்ப்பு கிடைப்பதில்லை. என்னுடைய சகோதரியின் மகன் அமெரிக்காவிலே டாக்டரேட் பட்டம் பெற்றார். அந்தப் பல்கலைக்கழகத்தை நேரில் சென்று பார்க்கும் வாய்ப்பை நான் பெற்றேன். மிகச் சிறந்த நிறுவனமாக அது இருக்கிறது. இங்கு பயிலக்கூடிய எண்ணற்ற ஏழை மாணவர்களும், மாணவிகளும் சிறந்த முறையில் கல்வி பயில வெளிநாட்டினுடைய சிறந்த கல்வி நிறுவனங்களின் பல்கலைக்கழக மையங்களை இங்கே ஆரம்பித்தால் நம்நாட்டிலுள்ள அத்தனை ஏழை மாணவ, மாணவியர்களும் சிறந்த கல்வி பெற வாய்ப்பு இருக்கும். ஆகவே, இதுபோன்று ஏதாவது கருத்துரு வருமேயானால், ஆதரவாக அரசு பரிசீலிக்கும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டால் பலர் நம் அரசை அணுகக் கூடும். இதை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பல்கலைக்கழக மையம் வருகிற காரணத்தினாலேயே அனைத்து ஏழைகளுக்கும் அனைத்து பின்தங்கிய மக்களுக்கும், எல்லோருக்கும் அந்த வாய்ப்புக் கிடைக்கும் என்ற ஒரு தவறான கண்ணோட்டம் இருக்கக் கூடாது. ஆயிரத்திலே ஒருவர்தான் பல்கலைக்கழகத்திலே டாக்டர் பட்டம் பெறக்கூடிய நிலை இன்றைக்கும் இருக்கிறது. எனவே, உயர்தர அறிவு பெறுகிறவர்களுக்கு, ஆய்வு நடத்துகிறவர்களுக்கு ஒரு வாய்ப்பாக அது அமையக்கூடும். ஆனால், வெளிநாட்டிலுள்ள ஒரு பல்கலைக்கழகம், இங்கே ஒரு பல்கலைக்கழக மையம் ஏற்படுத்துவதாக இருந்தால் அவர்கள் விரும்பி ஏற்படுத்த வேண்டும். இல்லையானால், இங்குள்ள ஒரு பல்கலைக்கழகத்திற்கும் ஓர் அந்நிய நாட்டுப் பல்கலைக்கழகத்திற்கும் உறவு முறை, தொடர்பு முறை கொண்டு சில திட்டங்களில், அந்தப் பல்கலைககழகங்கள் சில தமிழ்நாட்டிலுள்ள பல்கலைக்கழகத்தோடு தொடர்பு கொண்டு, சில குறிப்பிட்ட வளர்ச்சிப் பணிகளில் ஆர்வம் காட்டி ஒத்துழைக்கின்றன. அதற்குமேல் மையம் ஏற்படுத்த வேண்டுமானால் அவர்கள் அந்தக் கருத்தைத் தெரிவித்தால மத்திய அரசு உடன்பட்டால் நாம் அதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**கார்த்திகை 12, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029,**
**1998 நவம்பர் 27, வெள்ளிக்கிழமை**

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. பிடிஆர். பழனிவேல் ராஜன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"கருமஞ் சிதையாமல் கண்ணோட வல்லார்க்(கு)*
*உரிமை உடைத்திவ் வுலகு"*

*கடமை தவறாமையிலும், கருணை பொழிவதிலும் முதன்மையாக இருப்போருக்கு இந்த உலகமே உரிமையுடையதாகும்.*

## 1. இரங்கல் குறிப்பு

### பஞ்சாப் மாநிலம் லூதியானா அருகில் ஏற்பட்ட இரயில் விபத்தில் பலர் மரணம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மும்பையிலிருந்து அமிர்தசரஸ் நோக்கிச் சென்று கொண்டிருந்த பொற்கோயில் விரைவு இரயில் வண்டி, பஞ்சாப் மாநிலம் லூதியானா அருகில் 26-11-1998 வியாழக்கிழமை அதிகாலையில் ஜம்முதாவி - கல்கத்தா - சியால்டா விரைவு வண்டியுடன் மோதிக் கொண்ட நேர்வில் 150 பேர் உயிர் இழக்கநேரிட்டதைக் குறித்தும், குறிப்பாக, தமிழகத்தைச் சேர்ந்த நீர்வளவியல் விஞ்ஞானி டாக்டர் ஏ.பி. பழனியப்பன், அவரது மனைவி ஆகியோர் இவ்விபத்தில் உயிர் இழந்தது குறித்தும், சுமார் 250 பேர் காயமுற்றது குறித்தும் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளது என்பதை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். இவ்விபத்தில் காயமுற்றவர்கள் விரைவில் நலமடைய பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் விழைவைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இச்சம்பவத்தில் உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த*

[1998 நவம்பர் 27

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அயல்நாட்டு நிறுவனங்கள் பல்கலைக்கழகத்தினுடைய மையங்களை அமைக்க சாத்தியக்கூறு இல்லை என்பதை இங்கே தெரிவித்தார்கள். எங்களுடைய வேலூரில் சென்னைப் பல்கலைக்கழகத்தினுடைய விரிவாக்க மையம் கடந்த 18 ஆண்டுகாலமாக இயங்கி வருகிறது. ஆனால், அங்கே அடிப்படை வசதிகள் சரியாக இல்லாமல், அதைப் பல்கலைக்கழகமாக மாற்ற வேண்டும் என்ற கோரிக்கையை நாங்கள் பலமுறை வலியுறுத்தி வந்திருக்கிறோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட பவளவிழா முடிவதற்குள் வேலூரில் பல்கலைக்கழகத்தை.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக்கேள்வி அயல்நாட்டு நிறுவனங்கள் பல்கலைக்கழக மையம் நிறுவுவது பற்றியதாகும். உங்கள் கேள்வி இதிலே எழாது. நீங்கள் எந்த வினாவை எடுத்தாலும் உங்கள் வேலூர் தொகுதிக்காகப் பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இது மூல வினாவிற்குத் தொடர்பு இல்லாதது, உட்காருங்கள் நான் அனுமதிக்க முடியாது. (குறுக்கீடு) இது அயல்நாட்டு நிறுவனங்கள் பல்கலைக்கழக மையங்கள் நிறுவுவது பற்றியது; அது சுயாட்சி பெற்ற பல்கலைக்கழகம். அமைச்சரிடம் கேட்டுப் பிரயோசனம் இல்லை, உட்காருங்கள். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல்நாட்டு நிறுவனங்கள் இங்கே பல்கலைக்கழக மையங்கள் அமைப்பதிலே அரசுக்கு உள்ள reservations பற்றிய ஒரு தயக்கத்தை நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அயல்நாட்டு நிறுவனங்கள் இங்கே வந்து நம்முடைய மாணவர்களுக்கு அல்லது நம் நிபுணர்களுக்குப் பயிற்சி அளிப்பது மிகவும் உகந்ததாக இருக்கிறது. குறிப்பாக போரூரில் இருக்கின்ற ராமச்சந்திரா மருத்துவக் கல்லூரி ஹார்வார்டு யூனிவர்ஸிட்டியோடு இணைந்து செயல்பட எத்தனித்து இருக்கிறது. அதற்குண்டான விழாவிலே நம்முடைய முதலமைச்சர் அவர்களும் மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களும் கலந்து கொண்டார்கள். அத்தகைய நிறுவனங்கள் அப்படி பயிற்சி அளிக்கின்றபோது நிச்சயமாக மேம்பாடு என்பது நம்முடைய மக்களிடையே ஏற்படும், நம்முடைய



1998 நவம்பர் 27]

மாணவர்களிடையே ஏற்படும் என்பதை நான் கூற விரும்புகிறேன். ஆகவே அத்தகைய அயல்நாட்டு நிறுவனங்கள் அல்லது அயல்நாட்டு பல்கலைக்கழகங்கள் நம்முடைய பல்கலைக்கழகங்களோடு இணைந்து செயல்பட வந்தால் அரசு அதை ஏற்று செயல்படுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் என்னுடைய விடையிலேயே தெரிவித்திருக்கிறேன். தமிழ்நாட்டிலே உள்ள பல்கலைக்கழகங்களோடு வெளிநாடுகளிலே உள்ள பல்கலைக்கழகங்கள் இணைப்பு கொண்டு, தொடர்பு கொண்டு எந்த வளர்ச்சிப் பணியோ அல்லது ஆக்கப் பணியோ ஆற்றக்கூடிய நிலைமை இருக்குமானால் அது ஏற்கெனவே ஏற்கப்பட்டு செயல்படுகிறது. அப்படி வருவதுபற்றிக் கேள்வி அல்ல. இந்தக் கேள்வி வெளிநாட்டிலே உள்ள பல்கலைக்கழகம், தனியாக ஒரு மையம் ஏற்படுத்துவதற்கு முன்வந்தால் என்ன செய்யப்படும் என்பது. யாரும் முன்வரவில்லை. வந்தால் ஆராயப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நான் ரஷ்யா போன்ற நாடுகளுக்குச் சென்றிருந்தேன். அப்போது அங்கே பல்கலைக்கழகத்தில் படிக்கின்ற, ஆராய்ச்சி படிப்பு படிக்கின்ற மாணவர்கள் தமிழ் சம்பந்தப்பட்ட புத்தகங்கள் தமிழ் வரலாறு சம்பந்தப்பட்ட புத்தகங்கள் எங்களுக்குக் கிடைப்பதில்லை; தமிழக அரசிடம் நீங்கள் சொல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டார்கள். நாங்கள் கேட்கிறோம்; எங்களுக்கு உடனுக்குடன் வரமாட்டேன் என்கிறது என்றும் சொன்னார்கள். ரஷ்யா போன்ற பல்கலைக்கழகம் மற்றும் உலகத்தில் உள்ள பல்கலைக்கழக ஆராய்ச்சி மாணவர்களுக்கு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரனுக்குச் சொன்ன பதில்தான் உங்களுக்கும். மூல வினாவிற்கும், உங்கள் துணை வினாவிற்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது?

**திரு. இரா. தாமரைக்கனி:** தமிழ் வரலாறு சம்பந்தப்பட்ட புத்தகங்கள் எல்லாம் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அங்கிருந்து ஒரு கடிதம் வாங்கிக்கொண்டு வந்து மாண்புமிகு அமைச்சரிடம் கொடுங்கள்.

[1998 நவம்பர் 27

**திரு. இரா. தாமரைக்கனி:** என்னிடம் ரஷ்ய பல்கலைக்கழக மாணவர்கள் சொன்னார்கள். பிற நாட்டுக்குப் போகும்போது அங்குள்ள மாணவர்களும் சொன்னார்கள். புத்தகங்கள் கேட்டிருக்கிறோம். தமிழ் வரலாறு சம்பந்தப்பட்ட புத்தகங்கள் வரவில்லை; நாங்கள் ஆய்வு நடத்துகிறோம் என்று சொன்னார்கள். அந்த மாதிரி கோரிக்கைகள் வந்துள்ளதா?. அந்த மாதிரி புத்தகங்கள் அனுப்புவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் போய் வந்தவுடனே சொல்லாமல் இவ்வளவு நாள் எதற்காகத் தாமதப்படுத்தினார்? அதிலே ஏதாவது அரசியல் இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன். அப்படி எந்தக் கடிதம் வெளிநாட்டிலேயிருந்து வந்தாலும், வெளி மாநிலத்திலிருந்து வந்தாலும் உடனடியாகக் கவனித்து அவர்கள் விரும்பக்கூடிய வகையில் எந்தவகைப் புத்தகங்கள் தேவைப்படுகின்றனவோ அவற்றை அனுப்புவதற்குத் தமிழக அரசு என்றைக்கும் தயாராக இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் ஏற்கெனவே முதலமைச்சர் அலுவலகத்தில் எழுதிக் கொடுத்திருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படியென்றால் உட்காருங்கள். அதை நேரில் போய்ச் சொல்லுங்கள். தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது தொடர்பாக மேலும் ஒரு விளக்கம். ஏற்கெனவே தமிழக அரசினுடைய தமிழ் வளர்ச்சித் துறை இதற்காக ரூபாய் 5 இலட்சம் ஒதுக்கி ஒரு நாட்டுக்கு 133 நூல்கள் என்ற அளவில் 22 நாடுகளுக்கு நூல்கள் வழங்கப்பட்டு வருகின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரஷியாவில் இருக்கிற அந்தத் தொடர்பு முகவரியை எங்களுக்குக் கொடுத்தால், உறுதியாக அந்தப் பல்கலைக்கழகத்திற்கு அந்த நூல்கள் அனுப்பப்பெறும். எங்களுடைய செலவிலேயே அனுப்பி வைக்கப்படும்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.



1998 நவம்பர் 27]

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அயல்நாட்டு நிறுவனங்கள் தமிழகத்திலே பல்கலைக்கழகம் தோற்றுவித்தால் அது ஊக்குவிக்கப்படும் என்று நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலிலே கூறியிருக்கிறார்கள். குறிப்பாக மின் துறை மற்றும் பல்வேறு துறைகளின்கீழ் வரும் தொழில்களை தனியார் மயமாக்குவது போன்றவற்றில் தமிழக அரசு BOT (Build, Operate and Transfer) என்ற முறையைப் பின்பற்றி எல்லோருக்கும் வாய்ப்பு அளிக்கிறது, அயல்நாட்டுக்காரர்களுக்கும் வாய்ப்பு அளிக்கிறது. அதைப்போல பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள் முன்வந்தால் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழக மையம் என்பது ஒன்று; பல்கலைக்கழகம் என்பது மற்றொன்று. பல்கலைக்கழகங்களை ஏற்படுத்துவதற்கு இந்த நாட்டில் வெளிநாட்டுக்கு அனுமதி வழங்குவது என்பது அவ்வளவு இயல்பும் அல்ல, நியாயமும் அல்ல. மையங்களை ஏற்படுத்துவதாக இருந்தால், அது பற்றியும் வெளிநாடு என்ற காரணத்தால் மைய அரசினுடைய இசைவோடுதான் கருதப்பட வேண்டும். மேலும், வேறுவிதமான அறிவியல வளர்ச்சிக்குத் தேவையான தொடர்புகொள்ளக்கூடிய முறையில் எந்தக் கருத்துக்களையும் எந்தச் சிந்தனையையும் நாம் எந்த நேரத்திலேயும் பெற முடியும். அதற்கு அந்தப் பல்கலைக்கழகங்கள் பெரும்பாலும் ஒத்துக்கொள்கிற நிலையிலேதான் இன்றைக்கு இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 62, திரு. ஆர்.ஆர். சேகரன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

62—

**கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்துதல்**

***14674—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியப் பகுதியில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியிலே ஓமலூர், காடையாம்பட்டி, மேச்சேரி, தாரமங்கலம், நங்கவள்ளி, மேட்டூர் போன்ற பகுதிகளிலேயிருந்து பள்ளிக்கல்வி முடித்த ஏராளமான மாணவர்கள் மேற்படிப்பு படிக்க வழியில்லாமல் தவிக்கின்றார்கள். சேலம் நகரிலேயுள்ள அரசினர் கலைக் கல்லூரிக்குத்தான் அவர்கள் வரவேண்டியிருக்கிறது. சென்ற வாரம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட அந்தக் கல்லூரியிலே நடந்த விழாவிலே பங்கேற்றார்கள். சுமார் 40, 50 கிலோ மீட்டர் தூரம் அந்த மாணவர்கள் அங்கே வந்து பயில வேண்டிய சூழ்நிலை இருக்கின்றது. எல்லா மாணவர்களுக்கும் அங்கே போதிய இடம் கிடைப்பதில்லை. ஆகவே, பின்தங்கிய பகுதியாகிய இந்தப் பகுதியிலேயுள்ள மாணவர்களுடைய நலனைக் கருத்தில் கொண்டு அங்கே ஒரு கலைக் கல்லூரி தொடங்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி என்று எடுத்துக்கொண்டால், தொடக்கக் கல்வி, பள்ளிக்கூடக் கல்வி என்ற அந்த அளவுக்குத்தான் அரசு எல்லா வட்டாரத்திலேயும் கல்வி நிலையங்கள் இருக்க வேண்டுமென்று கருதி, திட்டமிட்டுச் செயல்பட முடியும். மேல்நிலைக் கல்வியைப் பொறுத்தவரையில் இன்றைக்கு கல்லூரிக் கல்விதான் மாணவர்களுடைய எதிர்கால வாழ்வுக்கு ஆக்கம் அளிக்க வல்லதா? அல்லது பல்தொழில் பயிலகம் என்று சொல்லப்படுகிற polytechnic இருப்பது நல்லதா? என்ற ஒரு கேள்விகூட எழுந்திருக்கிறது. தொழில் கல்வியாகக் கல்லூரிக் கல்வியையும் ஓரளவுக்கு மாற்ற வேண்டுமென்றும் கருதப்படுகிறது. இந்த நிலையில் அதிக முதலீடு செய்து ஆண்டுதோறும் அதிகம் செலவு செய்து அரசு கலைக் கல்லூரியை மேலும் தொடங்குவதற்கு வாய்ப்பில்லை என்பது ஏற்கெனவே கொள்கை முடிவாக எடுக்கப்பட்டு இருக்கிறது. எனவேதான் சுயநிதிக் கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு விரும்பினால், அவர்களுடைய வேண்டுகோள் நியாயமாக இருந்தால் ஏற்று அதையும் வரன்முறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை அரசு சிந்தித்துக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓமலூரைப் பற்றியானால் கேளுங்கள்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கலை, அறிவியல், கல்லூரி தொடங்குவதில்லை என்ற ஒரு கொள்கை முடிவை அரசு எடுத்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். பெரும் பகுதியும் ஏழைகள் நிறைந்த நாடு இந்தியா. ஏழைகள் நிறைந்த இந்த நாட்டில், ஏழை வீடுகளிலே பிறந்த, இன்றைய சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்குத் தீர்வளிக்கிற ஆற்றலுள்ள குழந்தைகள், கல்லூரிக் கல்வியைப் பெறுவதற்குரிய வாய்ப்பு அரசின் கொள்கை முடிவால் பாதிக்கப்படுகிறது என்று கருதுகிறேன். எனவே, ஏழைகள் கல்வி பெறுவதற்காகத் தன்னுடைய கொள்கை முடிவை மறுபரிசீலனை செய்து, கலை, அறிவியல், கல்லூரிகளை அரசே தொடங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. சுப்பராயன் அவர்கள் இந்தக் கேள்வியை எழுப்புகிறபோது எனக்கு ஒரு ஐயம் ஏற்படுகிறது. போதுமான அளவுக்கு தகுந்த அளவுக்கு தொடக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி, மேல்நிலைப்பள்ளிகளுக்கான கட்டடங்கள், Infrastructure, ஆசிரியர்கள், தகுந்த பயிற்சி முறை இவ்வளவும் வழங்குகிறபோதுதான் அடித்தட்டு ஏழை மக்களுக்கு, கல்வியினுடைய பயன் அவர்தம் அறியாமை நீங்குகிற அளவுக்குக் கிடைக்கும். அதற்கு மேற்பட்ட கல்வி அறிவைப் பெறுவது என்பது மேலை நாடுகளிலேகூட தனிப்பட்டவர்களுடைய வசதிகள், விருப்பங்கள், சூழ்நிலைகளைப் பொறுத்துத்தான் அமைகிறதே தவிர, அனைவருக்கும் உயர் கல்வி தருவதற்கு மேல் நாட்டிலேயே தேவையான ஏற்பாடுகள் கிடையாது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 65, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

65—

**தனி வட்டமாகப் பிரித்தல்**

***15992—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 27

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்திலிருந்து கொள்ளிடத்தைத் தனியாகப் பிரித்து, தனி வட்டமாக உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்திலிருந்து கொள்ளிடத்தைத் தனியாகப் பிரித்து தனி வட்டமாக உருவாக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நான்காவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு தமிழகத்திலே எத்தனை வட்டங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன? அந்தப் பட்டியலிலே இடம் பெறுகிற வகையிலே, பவளவிழா கண்டுகொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய ஆட்சியிலே சீர்காழி தொகுதியிலே கொள்ளிடத்தைத் தனி வட்டமாக உருவாக்குவதற்கு மறுபரிசீலனை செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பன்னீர்செல்வம் அவர்கள் கேட்ட கேள்விக்கு விளக்கமாக நான் தெரிவிக்க விரும்புவது இதுதான். மாவட்ட நிர்வாகம் திறம்படச் செயல்படவும், நலத் திட்டங்கள் மக்களை எளிதில் சென்றடையவும், சட்டம்-ஒழுங்குப் பிரச்சினைகள் தோன்றும்போதும், இயற்கைச் சீற்றங்களின்போதும், மக்களுக்குத் தேவையான நிவாரணப் பணிகளை விரைந்து ஆற்றிடவும். அளவில் பெரிதான மாவட்டங்கள், கோட்டங்கள் மற்றும் வட்டங்கள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

1991 முதல் 1996 வரை 4 மாவட்டங்கள், 5 கோட்டங்கள், 9 வட்டங்கள் மட்டுமே உருவாக்கப்பட்டன. நான் குறிப்பிட்டது 1991 முதல் 1996 வரை. ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றது முதல் நாளதுவரை 2½ ஆண்டு காலத்திற்குள்ளாக 4 மாவட்டங்கள், 8 கோட்டங்கள், 24 வட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இதிலேயும், இந்த ஆண்டு ஆகஸ்ட் திங்களில் மட்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களால் அறிவிக்கப்பட்டு 10 வட்டங்கள் உருவாக்கப்பட்டு இயங்கி வருகின்றன. நிர்வாக அமைப்புகள் இந்த அரசால் மட்டுமே இவ்வளவு அதிக அளவில் உருவாக்கப்பட்டிருக்கின்றன. பொதுமக்களின்



1998 நவம்பர் 27]

வசதியையும், நிர்வாக மேம்பாட்டினையும் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த நிர்வாகச் சீரமைப்புகளை உருவாக்கியிருக்கிறார்கள். இதன் விளைவாக தற்போது வருவாய் நிர்வாகத்தின் அமைப்புகள் பின்வருமாறு:—

(1) மாவட்டங்கள் 29. கோட்டங்கள் 73. வட்டங்கள் 206.

(2) நாகப்பட்டினம் மாவட்டத்தில் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:—

1. மயிலாடுதுறை, 2. தரங்கம்பாடி, 3. சீர்காழி. 4. நாகப்பட்டினம், 5. வேதாரண்யம், 6. கீழ்வேலூர், 7. திருக்குவளை. இதில் சீர்காழி வட்டத்தைப் பிரித்து கொள்ளிடம் வட்டம் உருவாக்க வேண்டும் என தற்போது கோரப்பட்டுள்ளது. புதிய நிர்வாக அமைப்பை உருவாக்குவதில் நிதிநிலையும் ஒரு முக்கிய அம்சம் ஆகும். எனவே, நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி வட்டத்திலிருந்து கொள்ளிடத்தைத் தனியாகப் பிரித்து தனி வட்டமாக உருவாக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லையென்றாலும், நிதிநிலையைக் கருத்திற்கொண்டு கொள்ளிடம் வட்டம் உருவாக்குவதைப் பற்றி பின்னர் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு தெளிவாக விளக்கம் சொன்ன பிறகும் என்ன கேட்கப் போகிறீர்கள்? (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டங்கள் பிரிப்பது சம்பந்தமாக மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்ததைப்பற்றி ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருக்குவளை தாலூகாவாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. சரியாக சர்வே செய்யாமல் அவசரக் கோலத்திலே அந்த தாலுகா தொடங்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக, திருத்துறைப்பூண்டி நகரத்தின் அருகில் இருக்கக்கூடிய பேரூராட்சிகள்கூட அதிலே இணைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, அதை மீண்டும் பரிசீலனை செய்து அந்த தாலுகா பிரித்ததிலே இருக்கக்கூடிய முரண்பாடுகளை நீக்கி தாலுகா செயல்படுத்தப்படுமா என தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

[1998 நவம்பர் 27

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்குவளை வட்டத்தைத் திறந்து வைக்கின்ற வாய்ப்பினைப் பெற்றவன் நான். இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் ஒருசில வேண்டுகோள்களை அல்லது ஒருசில வினாக்களை முன்வைத்து ஒருசில தெளிவுகளைத் தரவேண்டுமென்று கேட்கிறார்கள். எல்லாமே தெளிவாக இருக்கிறது. திரு. பழனிசாமி அவர்கள்கூட ஒருமுறை சிந்தித்துச் செயல்பட வேண்டுமென்று அவரைக் கேட்டுக்கொள்கிறேன். அவர் இதைச் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 66, திரு. எஸ்.எஸ். மணி நாடார், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

**66—**

**சாத்தான்குளம் தொகுதியில் வாய்க்கால் கட்டுதல்**

***6772—திரு. எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார்திருநகரி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியான கடையனோடையிலிருந்து புறையூர் வரை சுமார் 10 கி.மீ. தூரத்திற்கு வெட்டப்பட்ட வாய்க்கால் கட்டி முடிக்கப்படாமலும் அதற்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்குப் பணம் கொடுக்கப்படாமலும் உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்த வினாவிற்கான விடையைக் கொஞ்சம் திருத்தி அளிப்பதற்காக மாண்புமிகு பேரவைத் தலைவருடைய அனுமதியைக் கோருகிறேன். வினாக்களில் குறிப்பிட்டுள்ள பணி கடம்பா புறவழி வாய்க்கால் வெட்டும் பணியைப் பற்றியதாகும்.



1998 நவம்பர் 27]

இந்தத் திட்டத்திற்கு நிதி உதவி அளித்த தேசிய நீர் மேலாண்மைத் திட்டம் 1995 ஆம் ஆண்டோடு நிறுத்தப்பட்டதால் பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. மீதிப் பணியைத் தொடர உலக வங்கி உதவியுடன் இந்த அரசு செயல்படுகிறது. இதற்காக ஒப்பந்தப்புள்ளிபெற 11-12-1998 ஆம் நாள் கடைசி நாள் ஆகும்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தொகுதியிலே கடம்பா குளத்திலேயிருந்து கடையனோடை, (வழி) புறையூர் 18 கிலோ மீட்டர் தூரம் 1991-1996-லே ஆண்ட ஆட்சியாளர்கள் அங்கே ஒரு கால்வாய்ப் பணியை 13 கோடி ரூபாய்த் திட்டத்திலே ஆரம்பித்து 3 கோடி ரூபாய்கூட அதற்குச் செலவு செய்யவில்லை. அந்தத் திட்டத்தை அப்படியே விட்டுவிட்டார்கள். ஆக, குண்டும் குழியுமாகக் கால்வாயை வெட்டிப்போட்டு.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதிலைக் கேட்டீர்களா? அவர்கள் சொன்ன பதிலை வைத்துத்தான் நீங்கள் துணை வினா கேட்க வேண்டுமேயொழிய, நீங்கள் ஏற்கெனவே கேட்க வேண்டுமென்று கருதிய வினாவை அமைச்சர் சொன்ன பதிலையும் மீறிக் கேட்கக் கூடாது இப்பொழுது அந்த வேலையைச் செய்வதற்கு ஒப்பந்தம் கேட்கப்பட்டிருக்கிறது. 11ஆம் தேதி கடைசி நாள் என்று சொன்னார்கள். அதற்கு மேலே நீங்கள் ஏதாவது கேட்பது என்றால் கேளுங்கள்.

**திரு. எஸ்.எஸ். மணி நாடார்:** அந்தப் பணிகளைக் கூடிய விரைவில் செய்து தருவார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** தலைவரவர்களே, கால்வாயின் நீளம் 18 கிலோ மீட்டர் என்றார்கள். இல்லை., 8 கிலோ மீட்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப்போல இது கடந்த காலத்திலே பொதுப்பணித் துறையிலே ஏற்பட்ட மிகப் பெரிய களங்கம். தாமிரபரணியினுடைய கடைசி அணைக்கட்டு ஸ்ரீவைகுண்டம் அணைக்கட்டு. அந்த அணைக்கட்டிலிருந்து கடம்பா குளத்திற்குப் போகும், அது கோர்வைக் குளங்கள். ஒரு குளம் நிறைந்தால் அடுத்த குளம், அடுத்த குளம் நிரம்பும். அப்படிக் கடம்பா குளம் மிகப் பெரிய ஒன்று. 334 மில்லியன் கன அடி கொண்டது. 2,700 ஏக்கர் பாசனத்தைக் கொண்டது. கடம்பா பாதி, கடல் பாதி என்பார்கள் அந்த ஊர்ப் பக்கம். எனவே, அந்தப் பகுதியிலேயிருந்து கீழே

இருக்கிற 12 குளங்கள். ஆறுமுகநேரி வரையில், அம்மண்புர குளம், சீனிவாடி குளம், காணாங் குளம், நத்தை குளம், வண்ணான் குளம், துலுக்கன் குளம், நாயுடு குளம், செல்லப்ப நாயுடு குளம், நல்லூர் மேல குளம், கீழக் குளம், ஆறுமுகநேரி குளம், இந்தக் குளங்களுக்கெல்லாம் தண்ணீர் எடுத்துச் செல்வது அதன் வேலை. கடந்த காலத்திலே ஒரு பொதுப்பணித் துறை இன்ஜினீயரையே அடித்துக் கொன்றுவிட்ட கதையெல்லாம் அங்கே நடந்திருக்கிறது. அது மிகப் பெரிய ஊழல்; இன்னும் விசாரணையிலே இருக்கிறது. இருந்தாலும் இந்த அரசு அதற்காக - கலைஞர் அரசு விடவில்லை - மீண்டும் உலக வங்கியினுடைய உதவியைப் பெற்றிருக்கிறது. அடுத்த மாதம் 11ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிபெற கடைசி நாள் என்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்த வேலையை நானே நேரில் போய் முழுவதும் பார்த்தேன். நிச்சயமாகக் கலைஞர் அரசு அந்த வேலையை முடித்துக் கொடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி. மூல வினா தூத்துக்குடி மாவட்டம் பற்றியது.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்க்கால் பிரச்சினைதான். தர்மபுரி மாவட்டம், பெண்ணாகரம் வட்டத்தைச் சேர்ந்த பாப்பாரப்பட்டியைச் சுற்றிலும் 16 ஏரிகள் இருக்கின்றன. நம்முடைய அமைச்சரவர்கள் சொன்னமாதிரி ஒரு வாய்க்காலுக்கு நீர் வரத்து தொடங்கி விடுவோம் என்று சொன்னால் எல்லா ஏரிகளும் நிரம்பக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால் சமீபத்திலே பலமான மழை பெய்தும்கூட அந்த ஏரிகளெல்லாம் நிரம்பவில்லை. காரணம் என்னவென்று சொன்னால் அந்த வாய்க்கால்களெல்லாம் திருப்பிவிடப்பட்டு விட்டன. இப்படிக் கனத்த மழை பெய்யக்கூடிய காலத்திலேகூட நிரம்பாத காரணத்தினாலே, அருகிலே இருக்கக்கூடிய பஞ்சப்பள்ளி வாய்க்காலை 4 கிலோ மீட்டர் நீட்டிவிட்டால் அந்த 16 ஏரிகளும் நிரம்பிவிடும், ஓரே வாய்க்காலை இணைத்துவிட்டால். இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் பலமுறை சட்டமன்றத்திலே உறுதியளித்திருக்கிறார்கள். ஆகவே, கூடியவிரைவிலே நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அனுமதி அளித்தால் பொதுமக்களேகூட வெட்டிக் கொள்வதற்குத் தயாராக இருக்கிறார்கள்; அனுமதி வழங்குவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.



*முற்பகல் 9-55*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** இந்தப் பஞ்சம்பள்ளி வாய்க்காலை ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் திரு. முல்லைவேந்தன் அவர்கள், ஒரு நிகழ்ச்சிக்கு வந்தபோது, இதை எடுத்துச் செய்யுங்கள் என்று சொல்லி, நானும் அதை எடுத்துக்கொள்வதாக இருக்கிறேன். திடீரென்று ஒரு வாய்க்காலை, ஓர் ஏரியை எடுத்துக்கொள்ள முடியாது. அதற்கென்று காலகட்டம் இருக்கிறது. நிதி ஒதுக்கிற நேரம் இருக்கிறது. நிதிநிலை அறிக்கை இருக்கிறது. ஆகையினால் பொறுத்துக் கொள்ளலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டம், வள்ளியூருக்கு அருகே கொடுமுடியாறு அணைத் திட்டம் என்பது திராவிட முன்னேற்றக் கழக அரசின் சார்பிலே 1971 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டு, அதற்குரிய நடவடிக்கைகளெல்லாம் எடுக்கப்பட்டு, அங்கு அந்த வேலையைத் தொடங்குவதற்குரிய பணிமனைகளெல்லாம் கட்டப்பட்டும், தடைபட்டு நிற்கிறதே, இதை மீண்டும் செயல்படுத்த அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்திருப்பது கொடுமுடியாறு திட்டம். கொடுமுடியாறு திட்டத்திற்கு, அங்கே நிலத்தை ஆர்ஜிதம் செய்ய வேண்டும். தனியார்களிடம் நிலம் இருக்கிறது. ஆனால் அணை கட்டுகிற திட்டத்திற்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்யாமலேயே கால்வாய் வெட்டுவதற்கு மட்டும் பழைய ஆட்சியிலே பணத்தை ஒதுக்கி, 16 கோடியிலே 8 கோடி ரூபாய் இருக்கிற இடம் தெரியாமல் போய்விட்டது. ஆக 8 கோடியும் இல்லை; கால்வாயும் இல்லாமல், அங்கே ஒரு வழக்கு நடந்து கொண்டிருக்கிறது. ஆனால் கலைஞருடைய அரசு வந்த பிறகுதான் இதுகுறித்து முயற்சி எடுத்து, இப்போது நிலத்தினுடைய உரிமையாளர்கள் எல்லாம் நீங்கள் நட்ட ஈட்டுத் தொகையை அதிகமாகத் தர வேண்டும்; அதுகுறித்து நாங்கள் நீதி மன்றத்தில் பார்த்துக்கொள்கிறோம். எனவே பொதுப்பணித் துறையினர் உள்ளே நுழைந்து அணைகட்டுகிற பணிக்கு நாங்கள் தடங்கல் சொல்லவில்லை என்று சென்ற வாரம் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற வாரம் கூட்டிய தலைமைப் பொறியாளர்கள் கூட்டத்திலே இது தெரிவிக்கப்பட்டு, இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தெரிவித்திருக்கிறேன்.

[1998 நவம்பர் 27.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு தற்போது நிலுவையிலுள்ள அனைத்து ஏரிகளிலும் தூர் வாரும் பணியை மேற்கொண்டதால், அண்மையில் பெய்த மழையின் காரணமாக ஏரிகளின் நீர்நிலை உயர்த்தியிருக்கிறது. ஆனால் கடந்த காலங்களில் அந்த ஏரிகளில் இருந்த ஆக்கிரமிப்பாளர்கள், அந்த ஏரிகளில் நிரம்பியுள்ள தண்ணீரை வெட்டிவிட்டு, அவர்களுடைய நிலத்தில் விவசாயம் செய்து கொண்டு, ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த ஆக்கிரமிப்புகள் மீது அரசு கடுமையான நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** அப்படிச் செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்து இருக்கிறேன். எந்தெந்த ஏரிகளில் அப்படிச் செய்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன் நானும் மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலே தனித்தனியாகச் சொல்லியிருக்கிறேன். ஆக்கிரமித்த பகுதிகளிலே உள்ள பயிர் சேதம் அடைகிறது என்பதற்காக, பல பேருக்குப் பயன்படுகிற ஏரியினுடைய கரையை உடைப்பது மிகமிகப் பெரிய சமுதாயத் துரோகம். அப்படிப்பட்ட சமூக விரோதிகளை நீங்கள் அடையாளம் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீராதாரத்தைப் பெருக்குவதற்காகப் பொதுப்பணித் துறை நிறைய வேலைகளைச் செய்து கொண்டிருக்கிறது, பாராட்டுகிறோம். அதேநேரத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள குடகனாற்றில், திருக்குண்ணம் என்ற இடத்தில் இருக்கக்கூடிய ஆற்றிலே 3 அடிதான் மணல் எடுக்க வேண்டும் என்று ஏலம் விட்டிருந்தும்கூட, 16 அடி, 20 அடி என்றெல்லாம் வெட்டி, அங்கே நீராதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்களே, அது அமைச்சருடைய பார்வைக்கு வந்திருக்கிறதா? அந்த ஏலததையே இரத்து செய்வதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? காரணம், பலபேர், ஊர் மக்கள் எல்லாம் போராடி இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் அந்த contractor அடியாட்களை வைத்து அடித்து, பொய் வழக்குப்



1998 நவம்பர் 27]

போட்டு, 20 அடிக்குக் குழி தோண்டி மணலை எடுக்கிறார். ஆகவே. பொதுப்பணித் துறை இதைக் கண்காணிப்பதோடு, நீராதாரத்தைக் கெடுத்துக் கொண்டிருக்கிற இந்த நிலையை வருவாய்த் துறைக்கு எழுதி.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது வினாவா? இது ஓர் உரை. சுருக்கமாகக் கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** ஆகவே, பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் வருவாய்த் துறைக்கு எழுதி இந்த ஏலத்தை இரத்து செய்வதற்கு உடனடியாக நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணல் எடுப்பதற்கு அனுமதி வழங்குவது பொதுப்பணித் துறையின்பாற்பட்டதன்று. பொதுப்பணித் துறை சுட்டிக்காட்டுகிற இடத்தில்தான் மணல் எடுக்கலாம். ஆனால் அதை அவர்கள் செய்வதில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொன்ன குடகனாற்றுப் பிரச்சினை என் கவனத்திற்கு வந்து, உடனடியாக தலைமைப் பொறியாளரையே அந்த இடத்திற்கு அனுப்பி இருக்கிறேன். இன்றைக்கு அல்லது நாளைக்கு முழு விவரமும் எனக்குத் தெரியும். மாவட்ட ஆட்சித் தலைவரோடு கலந்துகொண்டு அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு கடும் நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று மனு கொடுக்கும்போது, அரசு அளந்துதான் தர முடியும், நீங்களேதான் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே. அதற்கான நிதியை ஒதுக்கி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். ஆகவே (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆக்கிரமிப்பு அகற்றுதலை. பொது மக்கள்தான் எடுத்துச் செய்ய வேண்டும். அரசிலிருந்து செலவு செய்ய மாட்டார்கள் என்று சொல்கிறார்கள் என உறுப்பினர் சொல்கிறார்.

**திரு. சி. வேலாயுதன்:** அளந்து மட்டும்தான் தர முடியும். ஆக்கிரமிப்புகளை அகற்ற ஒன்றும் பண்ண முடியாது என்றும் அதற்கான நிதி இல்லை என்றும சொல்கிறார்கள். அரசாங்கம் இதற்கென நிதியொதுக்கி ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு பொதுப்பணித் துறையினர் நடவடிக்கை எடுப்பார்கள். அதிலே ஏதாவது சர்ச்சை இருக்குமானால், மாவட்ட ஆட்சித் தலைவரின் உதவியை நாடுவார்கள்; காவல் துறையின் உதவியை நாடுவார்கள். ஆக்கிரமிப்புகளை நீங்களே அகற்றிக் கொள்ளுங்கள் என்று யாராவது அவருக்குச் சொல்லி இருந்தால், அது தவறான தகவல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 67, திரு. எஸ். டேவிட் செல்வின், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

67—

## பாசனக் கால்வாய்களைப் பராமரிப்பு செய்தல்

***7345—திரு. எஸ். டேவிட் செல்வின்:**

மாண்புமிகு பொதுபபணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தூத்துக்குடி மாவட்டம், திருவைகுண்டம் மற்றும் மருதூர் பாசனக் கால்வாய்களில் வளர்ந்துள்ள அமளைக் கொடி, பூவரசுச் செடிகளை அகறற நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மருதூர் கீழக்கால் மற்றும் மேலக்காலில் சென்ற ஆண்டு புல்டோசர் வைத்து பாசனக் கால்வாய்களில் வளர்ந்திருந்த செடிகளை அகற்றும் பணி செய்யப்பட்டுள்ளது.

**திரு. எஸ். டேவிட் செல்வின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி மாவட்டத்தில், திருவைகுண்டம் வடகால், தென்கால் மற்றும் மருதூர் கீழக்கால், மேலக்கால் ஆகிய பகுதிகளில்





வாய்க்கால்கள் எல்லாம் தூர்ந்துபோய் அமளை. காட்டாமணக்கு, வேலிக்காத்தான், மல்லக்கொடி போன்ற செடிகளால் நீர்ப் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டு இருக்கிறது. இதனை மாண்புமிகு அமைச்சர் அவர்களே, ஆறுமுகமங்கலம் பகுதியிலே நேரடியாகப் பார்த்தார்கள். இவற்றையெல்லாம் தூர்வாரி, செடிகளை அகற்றித் தருவதற்கு வரும் நிதி ஆண்டிலாவது நீங்கள் நிதி ஒதுக்கி தூர் வாரும் பணியை தாமிரபரணியிலே மேற்கொள்ள ஆவன செய்வீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கால்வாய்களிலே தூர் வாருவது பற்றியது. மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகமங்கலம் பற்றித் தெரிவித்து இருக்கிறார். அதுகுறித்து அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல இல்லை. கீழக்கால்வாயிலே தூர் எடுப்பதற்காக 5 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது; கொற்கைகுளம், அதிலே தூர் எடுப்பதற்காக 4 இலட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது. தூத்துக்குடி மாவட்ட வளர்ச்சி நிதியிலிருந்து முக்தமர்கிளை மேலக்காலில் ரூ. 2 இலட்சம், கீழக்கால் பெருங்குளம் வடிகால் கொடிகளை அகற்றுவதற்காக ரூ. 5 இலட்சம், தென்கால் சேதுக்குவாய்த்தான்குளம் வரையிலே ரூ. 4 இலட்சம், தென்கால் ஆத்தூருக்கு ரூ. 5 இலட்சம், — பாராளுமன்ற நிதியிலிருந்து ரூ. 25 இலட்சம் வரை அந்தப் பகுதிகளிலே செலவு செய்து இருக்கிறோம்; செலவு செய்து கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியை ஒட்டி P.W.D. கண்மாய்கள் இருக்கின்றன. அந்தக் கண்மாய்கள் நிறைந்து நகராட்சிப் பகுதி வழியாக இன்னொரு tank-க்கு தண்ணீர் போகிறது. ஆனால் அந்தக் கால்வாய்கள் பூராவும் மணல் மூடி இருக்கின்றன. செடி கொடிகள் வளர்ந்து இருக்கின்றன. அந்தக் கால்வாய்கள் மூடிப்போய் இருப்பதனால், தண்ணீர் வந்து குடிசைப் பகுதிகளுக்குள்ளே, ஊருக்குள்ளே புகுந்து விடுகிறது. இதுசம்பந்தமாக மாவட்ட ஆட்சித் தலைவர், P.W.D. அதிகாரிகளிடம் போய்ச் சொல்லி, அதை அப்புறப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அது நகராட்சி எல்லைக்குள் இருக்கிறது; அதனால் நகராட்சிதான் அப்புறப்படுத்த வேண்டும் என்கிறார்கள். ஆனால் அது P.W.D.

Channel அதனால் ஊர்தான் பாதிக்கப்படுகிறது. இதுகுறித்து நகராட்சியில் பல தடவை தீர்மானங்கள் போட்டு இருக்கிறோம்; கலெக்டரிடம் சொல்லி இருக்கிறோம். எனவே, அருள்கூர்ந்து மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் — அது ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில்தான் இருக்கிறது. — நீங்கள் அதில் கொஞ்சம் கருணைகூர்ந்து special நடவடிக்கை எடுத்து, மணல் குப்பைகளை எல்லாம் அகற்ற வேண்டும். அவை அங்கு மூடிப்போய் இருப்பதால், மழை பெய்தால் ஊர் மூழ்கிவிடுகிறது. ஊர் மூழ்காமல் இருக்க வேண்டுமானால், அது மாண்புமிகு அமைச்சர் கையில்தான் இருக்கிறது. ஆக, நீங்கள் ஊரைக் காப்பாற்றுவீர்களா, மணலை எடுப்பீர்களா, ஆக்கிரமிப்பை அப்புறப்படுத்துவீர்களா, செடி கொடிகளை வெட்டுவீர்களா என்று கேட்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊரிலே ஊடே ஊடே போகிற கால்வாய்கள் முழுவதும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமாக இருக்க முடியாது. தூத்துக்குடியிலே பக்ளின் கால்வாய், சேலத்திலே மணிமுத்தா கால்வாய், விழுப்புரத்திலே கோலியனூர் கால்வாய், திருச்சியிலே உய்யகொண்டான் கால்வாய் இப்படி ஒவ்வொரு ஊரிலும் ஒரு கால்வாய் ஓடிக்கொண்டுதான் இருக்கிறது. ஆனால், அந்தக் கால்வாய் மூலம் பாசனம் பெறுவதற்காகத் தண்ணீர் ஓடிக்கொண்டிருந்தால், அந்தக் கால்வாயை எங்கள் பராமரிப்பில் எடுத்துக்கொள்வோம். நேற்றுகூட விழுப்புரத்தில் கோலியனூர் வாய்க்கால், அந்த வழியாகப் போகிற காரணத்தினால்; 10 ஆயிரம் ஏக்கருக்கு மேல் பாசனம் இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கால்வாயைச் சீர் செய்வதற்காக 82 இலட்சம் ரூபாய் ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அப்படிப் பாசனக் கால்வாயாக இருக்குமானால், அதைப் பொதுப்பணித் துறை எடுத்துக்கொள்ளும். அதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.கே. ராஜேந்திரன்.

**திரு. எஸ்.கே. ராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்பவானி பாசனத் திட்டத்தின் பிரதான வாய்க்காலிலே உலக வங்கியின் கடன் பெற்று மேம்படுத்தும் கருத்துரு அரசிடம் உள்ளதா? ஆம் எனில், எப்போது அது தொடங்கப்படும் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக வங்கியினுடைய நிதி இருக்கிறது. ஆனால், பவானி, காவிரி ஆற்றினுடைய உப நதி என்கிற காரணத்தினால், அதில் ஒரு பிரச்சினை இவ்வளவு நாட்கள் இருந்த காரணத்தினால், அதைச் செய்ய முடியாமல் இருந்திருக்கிறோம். இப்போது உலக வங்கி நம்முடைய பணிகளை ஆய்வு செய்து கொண்டிருக்கிறது. 4 ஆம் தேதி மீண்டும் அவர்களைச் சந்தித்துப் பேசுவேன். அப்பொழுது, இந்தக் கால்வாய்களைத் தூர் வாருவதற்கு, நாங்கள் காவிரியில் ஒரு சுமுகமான முடிவு எடுத்து இருக்கிற காரணத்தினால், இருக்கிற பணத்தை கீழ்பவானி பகுதியிலே செலவு செய்வதற்கு அனுமதிக்க வேண்டும்' என்று கேட்பதாக இருக்கிறேன். அது நியாயமான பிரச்சினையும்கூட. ஏனென்று கேட்டால், கீழ்பவானிக் கால்வாய்கள் பல ஆண்டுகளாகத் தூர்ந்து போய்க் கிடக்கின்றன என்பதை நானே நேரிலே பார்த்து இருக்கிறேன். எனவே, அரசு அது குறித்து முயற்சிகளை மேற்கொள்ளும்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப்பணித் துறையைச் சேர்ந்த இந்தக் கண்மாய்களில் ஆக்கிரமிப்புகள் மிக மோசமாக இருந்துகொண்டு இருக்கின்றன. ஏற்கெனவே சுதந்திரம் அடைவதற்கு முன்பு 100 ஏக்கர் நிலம் அந்தக் கண்மாய்க்கு இருந்தது என்றால், இப்பொழுது 25 ஏக்கர்கூட இல்லாமல் போய்விட்டது. அதிலே கரும்பு, வாழை, தென்னை போன்றவற்றையெல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால், என்னுடைய வேண்டுகோளாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சொல்கிறேன், எந்த அளவுக்கு ஏற்கெனவே கண்மாய்கள் இருந்தனவோ அந்த அளவுக்கு, யாரையும் கேட்காமல், புல்டோசர் வைத்து அத்தனையையும் அரசு எடுதது, கண்மாய்களுக்காக இருக்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? அப்படி நடவடிக்கை எடுத்தால்தான் குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்கவோ, பாசன வசதி செய்து கொடுக்கக்கூடிய நிலைமையையோ சரியான முறையில் செய்ய முடியும் என்பதை அறிந்து, இந்தப் பொதுப்பணித் துறைக் கண்மாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் அத்தனையையும் அகற்றுவதற்கான முயற்சிகளை அமைச்சர் அவர்கள் எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே எல்லோரும் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டுமென்று பேசுகிறார்கள். அது எனக்கு ஒத்த கருத்துதான். நான் வரவேற்கிறேன். ஆனால் ஆக்கிரமிப்புகளை அகற்றுகிறபோது, இரண்டு பிரச்சினைகள் வருகின்றன. முதலாவது திடீரென்று நீதிமன்றத்திற்குப் போய்விடுகிறார்கள். நீதிமன்றத்திற்குப் போனால் பல ஆண்டுகள் அதிலே இழுத்தடிக்கப்படுகின்றன. இரண்டாவது, யார் யார் வேகமாகப் பேசுகிறார்களோ அவர்களே திடீரென்று வந்து 'அவர்கள் ரொம்ப ஏழை-பாழைகள், கொஞ்சம் விட்டுவிடுங்கள்' என்று மறுபடியும் அவர்களே சொல்கிறார்கள். நான் அவர்கள் பெயரையெல்லாம் இப்பொழுது சொல்ல விரும்பவில்லை. ஆகையால், மாண்புமிகு உறுப்பினர்கள் இதிலே பெரிதும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி.

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பக்கிளின் கால்வாய் பற்றிச் சொன்னார்கள். பக்கிளின் கால்வாய் பற்றி நீண்ட நாட்களாக 1989-லிருந்து நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். மழைக்காலங்களில் காட்டிலிருந்து மரங்கள் எல்லாம் வெள்ளத்தில் அடித்து வரப்பட்டு ஊரையே அழிக்கக்கூடிய அளவுக்கு அங்கே அபாயம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இது ஆண்டாண்டுதோறும் நடந்து கொண்டிருக்கிறது. அதுபற்றி உள்ளாட்சித் துறையில் கேட்டால், எங்களுக்குச் சொந்தமில்லை என்று சொல்கிறார்கள். பொதுப்பணித் துறையிலும் சொந்தமில்லை என்று சொல்கிறார்கள். இப்பொழுது அமைச்சர் அவர்கள், அங்கே பயிர் விளையக்கூடிய அளவுக்கு வாய்ப்புகளை உருவாக்கினால் அதற்கு நாங்கள் ஒத்துழைப்பு தருகிறோம் என்கிறார்கள். எனவே, மக்களுடைய பாதுகாப்பிற்கு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதைப் போல தூத்துக்குடி நகரத்தில் ஓடுகிற பக்கிளின் கால்வாய் பாசனக் கால்வாய் அல்ல. அது ஒரு சாக்கடைக் கால்வாய். (சிரிப்பு) மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியசாமி என்னை இருமுறை அழைத்துக்கொண்டு போய்க் காண்பித்தார். அது பொதுப்பணித் துறைக்கு எந்தவகையிலும்



1998 நவம்பர் 27]

சம்பந்தமில்லாதது. ஆனால் சீர்செய்யப்பட வேண்டியது. அது பொதுப்பணித் துறைக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கலாம். அல்லது உள்ளாட்சித் துறைக்குச் சம்பந்தமில்லாமல் இருக்கலாம். ஆனால் எல்லா இலாகாக்களும் முதலமைச்சர் அவர்களுடைய கையில் இருக்கிறது. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கனிவாகக் கவனிப்பார் என்று நான் அவர் சார்பாக சொல்லிக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 63, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**63—**

### இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்துதல்

***8374—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அனைத்து வட்டத் தலைமைப் பொது மருத்துவமனைகளிலும் இரத்த சேமிப்பு வங்கி ஏற்படுத்த அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது தமிழ்நாட்டில் மொத்தம் 157 அரசு வட்டத் தலைமை மருத்துவமனைகள் உள்ளன. அவற்றில், தற்போது 52 வட்டத் தலைமை மருத்துவமனைகளில் இரத்த வங்கிகள் செயல்படுகின்றன. மீதமுள்ள 105 வட்டத் தலைமை மருத்துவமனைகளில், இனிவரும் ஆண்டுகளில் தேவையின் அடிப்படையில், படிப்படியாக இரத்த சேமிப்பு வங்கிகளை ஏற்படுத்த இந்த அரசு நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்பதைத்' தன் உயிர் மூச்சாகக் கொண்டு, பசிப்பிணி மருத்துவர் டாக்டர் கலைஞர் ஆட்சியில், வட்டார அளவில் மருத்துவ உதவிகள் அனைத்துத் துறைகளிலும் மகோன்னதமான நிலைக்கு வளரவேண்டுமென்று விழைகிறோம். அதற்காக அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர், இந்த இரத்த சேமிப்பு வங்கியை அமைக்கிறபோது ஒரு Blood Bank என்ற அளவிலே

[1998 நவம்பர் 27

நிறுத்திவிடுகிறார்கள். அதிகாரிகளும் Blood Bank இருக்கிறதா என்று கேட்டால், இருக்கிறது என்று விடையைக் கொடுத்துவிடுகிறார்கள். ஆனால், ஒரு Blood Bank என்பதில் ஒரு Fridge, ஒரு Generator, அதற்காக முறையாக இரத்தத்தை எடுக்கவும், கொடுக்கவும் பயிற்சி பெற்ற ஒரு செவிலியர் அல்லது ஆய்வுக்கூட ஆய்வாளர் என்ற அளவில் இருந்து அது இயங்கவேண்டுமென்ற விருப்பத்தை இந்த அவையிலே சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். வருங்காலங்களில், அவர்கள் பதில் அளித்ததைப்போல, வட்ட தலைமை மருத்துவமனைகளில் அல்லது மாவட்டத் தலைமை மருத்துவமனைகளில் இந்த Blood Bank ஒரு Unit என்ற அளவில் இதனை அமைத்துக் கொடுக்க ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்தக் கருத்துக்களை உச்ச நீதிமன்றமும் தெரிவித்து, இந்தியா முழுவதும் இரத்த சேமிப்பு வங்கிகளை அமைப்பதில் சில கொள்கைகளை, சில வரைமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறது. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்திருக்கிறார். அவருடைய யோசனையை இந்த அரசு நூற்றுக்கு நூறு செயல்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் ஆ. ஞானசேகரன்.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் இரத்த சேமிப்பு வங்கிகளில் சரியாகப் பரிசோதனை செய்யப்படாத இரத்தத்தைச் சேகரித்து, சமுதாயத்தைக் கெடுக்கும் வகையில் வியாபார நோக்குடன் விற்பனை செய்து வருகிறார்கள் என்ற கருத்து இருக்கிறது. எனவே, அரசு முழுவதுமாக அத்தகைய தனியார் இரத்த சேமிப்பு வங்கிகளைக் கண்டறிந்து அவற்றை தடை செய்வதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன். அல்லது அத்தகைய இரத்த வங்கிகளைக் கண்காணிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது மாதிரி கடந்த காலத்தில் இருந்திருக்கலாம். ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பு இரத்த வங்கிகள் அமைக்க வேண்டுமென்று சொன்னால் அரசின் அனுமதியைப் பெற்றுத்தான் அமைக்க வேண்டுமென்று உச்ச



1998 நவம்பர் 27]

நீதிமன்றத்தில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. எங்கேயாவது அரசாங்கத்திற்குத் தெரியாமல் இரத்த வங்கிகள் இருக்குமானால், அவற்றின்மீது நடவடிக்கை எடுக்க எப்போதும் அரசு தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம்கூட நம்முடைய சபை தொடங்குகிறபோது, ஒரு கோர ரயில் விபத்தில் பலியானவர்களுக்கு நாம் அனுதாபம் தெரிவித்தோம். இப்படிப் பல்வேறு நேரங்களில் பல்வேறு எதிர்பாராத நிகழ்வுகளும் விபத்துகளும் ஏற்பட்டுவிடும்போது தேவைப்படுவனவற்றில் முக்கியமானது இரத்தம். இரத்த சேமிப்பு வங்கிகளை நகரங்களில் மட்டுமல்லாது கிராமங்களிலும் அமைப்பது மிகவும் அவசியம். அப்படி அமைக்கிறபோது, அவற்றைத் தனியார் சார்பிலும் அமைக்க ஊக்குவிப்பது என்பது முக்கியமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்த முன்னுரையெல்லாம் வேண்டாம். வரி போடுகிறார்கள், அதை நீக்க முடியுமா என்று மட்டும் கேளுங்கள்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** முக்கியமாக Voluntary Sector-ல் இருக்கிற இரத்த சேமிப்பு வங்கிகளை ஊக்கப்படுத்த வேண்டும். தற்போது இரத்தம் சேமிப்புக்குப் பயன்படும் பிளாஸ்டிக் பைகளுக்கு 5 சதவீத வரியையும் சர்சார்ஜையும் போடுகிறார்கள். உயிர்காக்கக்கூடிய இரத்தத்தைச் சேமிக்கிற நல்ல காரியத்திற்கு வரி விலக்கு அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, அதைச் செயல்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 5 சதவீத வரி விதிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கிறார்கள். நம்முடைய அரசின் வரிக் கொள்கையிலே 5 சதவீத வரி விதித்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை. இருந்தாலுங்கூட, அதைப்பற்றி அரசு பரிசீலிக்கும். இதிலே முக்கியமான பிரச்சினை என்னவென்றால், அரசு மருத்துவமனைகளுக்கும் இரத்தம் வேண்டும். அந்த இரத்தத்தைப் பலர் இன்றைக்கு வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் இரத்தம் கொடுப்பதனால் உடல் நலம் பாதிக்குமோ என்றுகூட சிலருக்கு அச்சம் இருக்கிறது. இந்த ஆண்டு இரத்தம் வழங்குகிற ஒரு விழாவில்

[1998 நவம்பர் 27

நான் கலந்துகொண்டபோது, ஒருவர் தொடர்ந்து 86 முறை இரத்தம் வழங்கியதற்காக அவருக்குப் பரிசுகூட கொடுத்தேன். எனவே, அப்படிச் சாதாரண ஏழை எளியவர்கள்தான் இரத்தம் கொடுக்கவேண்டும் என்றில்லாமல், மாண்புமிகு அமைச்சர்களிலிருந்து, சட்டமன்ற உறுப்பினர்களிலிருந்து அனைவருமே இரத்தம் வழங்கலாம். அப்படி இரத்தம் வழங்கினால் பரிசோதிக்கப்பட்டு, வங்கிகளில் சேமித்து வைக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 64, திரு. நா. பெரியசாமி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**64—**

### ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக்குதல்

***14909—திரு. நா. பெரியசாமி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) திங்களூர் ஆரம்ப சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழக அரசின் நிதிநிலையைக் கருத்தில் கொண்டு, இத்தகைய செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டத் தலைநகர்களில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையங்களை மருத்துவமனைகளாக உயர்த்துவது என்ற அரசின் கொள்கை முடிவுப்படி, பெருந்துறையில் அரசு மருத்துவமனை ஒன்று அமைக்கப்பட்டதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வினாவில் கேட்கப்பட்ட திங்களூர் கிராம ஆரம்ப சுகாதார நிலையம் என்பது முற்றிலும் கிராமப்புறத்தில் அமைந்திருக்கக்கூடிய ஒரு நிலையம் ஆகும். அதைச் சுற்றியுள்ள ஏறத்தாழ 30 ஊராட்சிகளுக்குக் குறைந்த அளவுக்கு மட்டுமே போக்குவரத்து வசதி இருக்கிறது. திங்களூர் ஆரம்ப சுகாதார



1998 நவம்பர் 27]

நிலையத்தில் படுக்கைகள், அறுவை சிகிச்சை அரங்கு போன்ற அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளும் உள்ளன. இவற்றைக் கருத்தில் கொண்டு, கிராமம் சார்ந்த பகுதியான திங்களூர்ப் பகுதி மக்கள், சிறந்த மருத்துவ வசதியைப் பெறுகிற வகையில் ஒரு சிறப்பு இனமாகக் கருதி, வருகிற ஆண்டில் திங்களூர் ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக நிலை உயர்த்திக் கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தாலுகாக்களின் தலைநகரங்களிலே அரசு பொது மருத்துவமனை கட்டுவது என்ற ஒரு திட்டம் அமலிலே இருக்கிறது. இருந்தாலும்கூட 1997-98 ஆம் ஆண்டு பகுதி இரண்டு திட்டத்தில் 23 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 23-6-1998 நாளிட்ட சுகாதாரத் துறை ஆணை எண் 311-ல் அரசு மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன. அதற்குக் காரணம் அந்த இடங்களில் எல்லாம் புதிதாகத் தாலுகாக்கள் தோற்றுவிக்கப்பட்டதுதான். அப்படி ஒரு நிலை மாண்புமிகு உறுப்பினர் இங்கே தெரிவித்த அந்தத் திங்களூருக்கு வருமானால், அது தாலுகா மருத்துவமனையானால், தாலுகா அளவுக்கு அது உயர்த்தப்பட்டால், அங்கே அரசு மருத்துவமனை வர இயலும். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த இந்தக் கருத்தை மனதிலே வைத்துக்கொண்டு அதை 24 மணிநேர மருத்துவமனையாக ஆக்கித் தரமுடியுமா என்பது குறித்து அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 68, திரு. டி. சுதர்சனம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**68—**

### போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துக்களைத் தடுத்தல்

***10099—திரு. டி. சுதர்சனம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் கோயம்பேட்டிலிருந்து திருமழிசை கூட்டு சாலை வரை ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துக்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் கோயம்பேட்டிலிருந்து திருமழிசை கூட்டு சாலை வரை ஏற்படும் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துக்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயம்பேட்டிலிருந்து திருமழிசை வரை இருக்கிற சாலை மிகவும் குறுகலான சாலையாக இருக்கிறது. கோயம்பேட்டிலே மொத்த அங்காடி வந்திருக்கிற காரணத்தாலே இப்போது அங்கே அதிகமான வாகனங்கள் வந்துகொண்டிருக்கின்றன. பூவிருந்தவல்லியிலிருந்து சென்னைக்கு வரவேண்டுமென்றால், சிலநேரங்களில் இரண்டு மணி நேரம் ஆகிறது. தினமும் 4 அல்லது 5 விபத்துக்கள் அங்கே நடைபெறுகின்றன. இதைத் தடுக்க அரசு என்ன முயற்சி எடுத்திருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை 4-ல், கிலோ மீட்டர் 9-லிருந்து 25 வரை ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு வருகின்றன. மேலும் அந்தப் பகுதியிலே உள்ள இருவழித்தடத்தை நான்கு வழித்தடமாக மாற்றுவதற்காக தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழு உறுப்பினர் அவர்களால் 14-11-1998 அன்று ஸ்தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. விரைவில் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணிகள் தேசிய நெடுஞ்சாலை ஆணைக் குழுமத்தினால் ஆரம்பிக்கப்பட உள்ளது.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் தேசிய நெடுஞ்சாலையிலே வணிக வரி சோதனைச் சாவடி இருக்கிறது. அங்கே வாகனங்கள் நிறுத்தப்படுகின்றன. அந்த வாகனங்கள் அந்த இடத்தைக் கடப்பதற்கு இரண்டு மணி நேரம் கூட ஆகின்றது. எனவே அந்த சோதனைச் சாவடிக்குத் தனி வழி ஏற்படுத்தப்படுமா? பக்கத்தில் உள்ள நிலத்தை ஆர்ஜிதம் செய்து, தனி வழி ஏற்படுத்தி, போக்குவரத்துக்கு இடையூறு இல்லாமல் செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு தாம்பரம் பகுதியிலே



1998 நவம்பர் 27]

இதுபோன்ற பிரச்சினை இருந்தது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் அடிப்படையில் வணிக வரித் துறையின் மூலமாக அங்கிருந்த சோதனைச் சாவடி அகற்றப்பட்டு அங்கே ஓரளவுக்கு சாலை வசதி செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய அந்தப் பகுதியிலே மாற்றுப் பாதை அமைத்து சுங்க வரி வசூலிப்பதற்காக நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக வணிக வரித் துறைக்கு எழுதப்பட்டிருக்கிறது. விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 69. திரு. இ. புகழேந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**69—**

### விரைவுப் பேருந்து அலுவலகத்தை விரிவுபடுத்துதல்

***14064—திரு. இ. புகழேந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கடலூரில் 1964இல் இருந்து இயங்கிவரும் தமிழ்நாடு விரைவுப் பேருந்து அலுவலகத்தை மேலும் விரிவுபடுத்தும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் விரைவுப் பேருந்து நிலையத்திலிருந்து கடலூர்-மதுரை, கடலூர்-கன்னியாகுமரி, கடலூர்-கோவை, கடலூர்-பெங்களூர் ஆகிய பகுதிகளுக்குச் நல்லவிதமாக இயங்கிக் கொண்டிருந்த பேருந்துத் தடங்கள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. கடந்த ஆட்சியினர் எடுத்த தவறான நடவடிக்கையின் காரணமாக அது புதுவை மாநிலத்திலே இணைக்கப்பட்டு, கடலூரிலே இருந்த பதிவு அலுவலகம் கூட, இப்போது இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. கடலூரில் அந்த விரைவுப் பேருந்து நிலையத்திற்கான ஒரு தனிக் கட்டடமும், பேருந்துகளை நிறுத்தக்கூடிய அளவுக்குத் தகுதியான நிலமும்

[1998 நவம்பர் 27

இப்போதும் இருக்கின்ற காரணத்தாலே—கட்டடமும் இருக்கிறது. பேருந்துகள் நிறுத்துவதற்கான இடமும் இருக்கிறது—ஏற்கெனவே நம்முடைய ஆட்சிக் காலத்திலே, நல்ல விதமாக இயங்கிக் கொண்டிருந்த அந்த விரைவு, நெடுந்தூரப் போக்குவரத்துத் தடங்களை, மீண்டும் கடலூரிருந்து இயக்கவும், பதிவு அலுவலகத்தை மீண்டும் கடலூரிலே இயங்க வைக்கவும் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள், அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் இப்போது பல்வேறு நிர்வாகச் சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, 400 கிலோ மீட்டர் தொலைவிற்கு மேலுள்ள பேருந்துகளை மட்டுமே அரசு விரைவுப பேருந்துகள் மூலம் இயக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டு, மற்ற பேருந்துகளை ஆங்காங்கே இருக்கின்ற போக்குவரத்துக் கழகங்களின் மூலமாக இயக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கருத்துக்கள் கவனத்திலே கொள்ளப்பட்டு, அங்கே இயங்குகின்ற போக்குவரத்துக் கழகத்தின் மூலமாகப் பல்வேறு பகுதிகளுக்குப் பேருந்துகளை இயக்குவதற்குரிய ஏற்பாடுகள் குறித்து அரசு பரிசிலிக்கும். அந்தப் பகுதியிலே இப்போது 13 பேருந்துகள் மட்டும்தான் அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் மூலமாக இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அந்தப் பணிமனையை விஸ்தரிக்கிற அல்லது அதிகப்படுத்துகின்ற வாய்ப்புகள் ஏதும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 70, திரு. எஸ்.வி. கிருஷ்ணன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**70—**

**நாங்குநேரி தொகுதியில் போக்குவரத்து விபத்துக்களைத் தடுத்தல்**

***8044—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 நவம்பர் 27]

நாங்குநேரி தொகுதி. நாங்குநேரி அருகே தேசிய நெடுஞ்சாலையில் Petrol Bunk அருகே அடிக்கடி விபத்து ஏற்படுவதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மத்திய அரசு தரைவழிப் போக்குவரத்துத் துறையின் வடிவமைப்புப்படி (Type Design) போக்குவரத்துத் தீவு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், எச்சரிக்கைப் பலகை வைக்கப்பட்டுள்ளது.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்குநேரி அருகே தேசிய நெடுஞ்சாலையில், நாங்குநேரிக்குத் தெற்குப் பக்கத்தில் bunk இருக்கின்றது. அந்த bunk-கிற்கு அருகில், சாலையில் ஒரு வளைவு இருக்கின்றது. அந்த வளைவிற்குப் பக்கத்தில் வரும் வரைக்கும் வளைவு இருப்பதே தெரியாது அந்த இடத்திற்கு வருகின்ற பேருந்து மற்றும் வாகனங்களுக்கு அடிக்கடி விபத்து ஏற்படுகின்றது. அங்கே பலமுறை எச்சரிக்கைப் பலகை போடப்பட்டும் விபத்துக்களைத் தடுக்க முடியவில்லை. எனவே, அந்த இடத்தில் மாற்றுப் பாதை அமைத்தாவது அல்லது ஒரு Round-tana அமைத்தாவது விபத்துகளைத் தடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அந்த இடத்தில் ஒரு Round-tana அமைக்கப்பட்டிருக்கிறது. மத்திய தரைவழிப் போக்குவரத்துத் துறையுடைய வடிவமைப்பின் படி அந்தத் தீவு அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடம், அடிக்கடி விபத்து ஏற்படக்கூடிய இடம் என்ற காரணத்தினாலேதான் இந்த ஏற்பாடு செய்யப்பட்டது. என்றாலும், இன்னும் அங்கு விபத்து ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்கின்றார்கள். அந்தக் கணக்கும் எடுக்கப்படுகின்றது. வருங்காலத்தில், இந்தச் சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றுவதற்குரிய வகையில், அண்மையில் பிரதமர் அவர்கள் ஓர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். கன்னியாகுமரியிலேயிருந்து காஷ்மீர் வரையிலே அந்தச் சாலையை விரைவுச் சாலையாக அகலப்படுத்துவது

இப்போது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதேபோல், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே அறிவிக்கின்றபோது திருநெல்வேலி மாவட்டத்தில் 700 கோடி ரூபாய் திட்டச் செலவில் உயர் தொழில்நுட்பத் தொழிற் பூங்கா அமைக்கப்படும்; அந்தத் தொழிற் பூங்காவிற்குள் நிறுவப்பட இருக்கும் புதிய தொழிற்சாலைகளில் எதிர்பார்க்கப்படும் 7,000 கோடி ரூபாய் முதலீடு திருநெல்வேலி மாவட்டத்தைத் தொழில் வளர்ச்சி மையமாக மாற்றும்; இதற்காக நிலம் கையகப்படுத்தும் பணி நடைபெற்று வருகிறது என்று அறிவித்திருக்கிறார்கள். இது நாங்குநேரியில்தான் வருகிறது; இந்தத் தேசிய நெடுஞ்சாலையின் அருகிலேதான் வருகிறது. எனவே, அந்தத் தொழிற் பூங்கா வருகின்றபோது இந்தச் சாலை விரிவுபடுத்தப்பட இருக்கிறது என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மாண்புமிகு திரு. தா. கிருட்டிணன் அவர்களுடைய சொந்த ஊரான மானாமதுரையில், நகருக்குள் போகின்ற ஒரு பாதை, மிக நெருக்கடியான ஒரு பாதை. அவர்கூட ஏற்கெனவே ஒரு சிறிய கடை வைத்திருந்தார்கள். அந்தக் கடை கூட ஒரு தடவை, பேருந்து ஒன்றினால் இடிந்து சேதப்படுத்தப்பட்டது. அந்த இடத்தில் இதுவரை Traffic Police நிறுத்தப்படாமல் இருந்ததைப் பார்த்து, ஓர் ஓய்வு பெற்ற இராணுவ வீரர் எஸ்.எஸ். தேவர் என்பவர் அந்த இடத்திலேயே நின்று 12 மணி நேரமும் போக்குவரத்தை ஒழுங்குபடுத்திக் கொண்டிருக்கிறார்கள். அவரை நான் நான்கு தினங்களுக்கு முன்பு நேரில் பார்த்து, பாராட்டு தெரிவித்துவிட்டு, நம்முடைய முதலமைச்சர் அவர்களிடமும், சம்பந்தப்பட்ட அமைச்சரிடமும் சொல்லி, ஏதாவதொரு பரிசோ அல்லது வெகுமதியோ கிடைப்பதற்கு ஆவன செய்வதாகச் சொல்லிவிட்டு வந்தேன். நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு அந்த இடம் மிக நன்றாகத் தெரியும். 1,500 ரூபாய்தான் Pension என்கிறார். நான்கு, ஐந்து குழந்தைகள் உள்ளவர். எந்தவிதமான பலனையும் எதிர்பார்க்காமல் சேவை செய்து கொண்டிருக்கின்ற அந்த எஸ்.எஸ். தேவர் அவர்களுக்கு, அவரைப் பாராட்டுகின்ற வகையில், நம்முடைய முதலமைச்சர் அவர்களும், அமைச்சர் அவர்களும் ஏதாவது நன்மை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



முற்பகல் 10-25

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், காருண்யமிக்க நல்ல யோசனைகளையெல்லாம் தெரிவிக்கிறார்கள். ஆனால், அதைச் செயல்படுத்த முடியுமா என்பது ஐயத்திற்குரியது. அவர் சொல்கிற அந்தச் சாலை நெருக்கடியாக அமைந்துவிட்டது. அதை அகலப்படுத்த முடியாது என்ற காரணத்தினால், தேசிய நெடுஞ்சாலைத் துறையின் மூலமாக மாற்றுவழிப் பாதை, புறவழிச் சாலை மானாமதுரையிலே அமைக்கப்பட்டு, அது அகலமான சாலையாக உள்ளது. பெரும்பாலான போக்குவரத்து அங்கேதான் நடைபெறுகிறது. இருந்தாலும் நகரத்திற்குள்ளே போய் வருகிற பேருந்துகள், மற்ற வாகனங்கள் இந்தக் குறுகிய சாலை வழியாகத்தான் செல்கின்றன. எனவே, பொது நன்மையைக் கருதி, அந்த இராணுவ வீரர், அந்தப் பணியைச் செய்வதற்கு நம்முடைய பாராட்டுகளை இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிவிக்கலாம். தேவைப்பட்டால் நானும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் சேர்ந்து அவருக்கு ஏதாவது ஓர் ஊதியத்தை வழங்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (சிரிப்பு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 71, திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன். மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**71—**

### மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் நூற்றாண்டு விழா

***15603—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட அரசு முன்வருமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். அரசு முன்வரும்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் மொழியிலே பிற மொழி கலப்பது என்பது நல்லுணவிலே நஞ்சு கலப்பது போன்றது என்று சொல்லி, தமிழால் தனித்து இயங்க முடியும் என்று நிரூபித்தவர் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்கள். சொற்பிறப்பு ஆராய்ச்சியை மிகச் சிறந்த அளவில் நடத்திக் காட்டியவர். உலகத்திலுள்ள மொழிகளில் எல்லாம் தமிழ் மொழியே மிகவும் தொன்மை வாய்ந்தது என்று நிரூபித்துக் காட்டியவர்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர்தான் விழா எடுக்கப்போகிறோம் என்று சொல்லிவிட்டாரே, பிறகு எதற்குப் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். நன்றியை மட்டும் சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** அத்தகைய சிறப்பு வாய்ந்த தமிழ் அறிஞருக்கு, இந்த ஆண்டு நூற்றாண்டு விழா கொண்டாட, கலைஞர் அவர்களுடைய தமிழக அரசு முன்வந்திருப்பதை நான் மனதாரப் பாராட்டி, தமிழ் அறிஞர்களுடைய சார்பிலும், என்னுடைய சார்பிலும் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ் மொழி வரலாறு, தமிழ்ச் சமுதாய வரலாறு குறித்து சுமார் 100 நூல்களை அவர் எழுதியிருக்கிறார். இந்த நூல்களுடைய கருத்துக்கள் ஒரு மாறுபட்ட, ஒரு மிகச் சிறந்த கருத்துக்களாக இருக்கின்ற காரணத்தினால், பொது மக்களிடையே வரவேற்பு இருக்கிறது. அந்த வரவேற்பு ஆராய்ச்சி மாணவர்களிடையேயும் பரவுவதற்கு, அவருடைய நூல்கள் குறித்து தொடர்ந்து ஆய்வு நடத்த பல்கலைக்கழகங்களிலே பேராசிரியர் ஒருவரைக்கொண்டு ஆராய்ச்சி இருக்கை—டாக்டர் இராதாகிருஷ்ணன் ஆராய்ச்சி இருக்கைபோல— பாவாணர் பெயரில் தமிழகத்திலுடைய பல்கலைக்கழகங்களிலே தனியே ஆராய்ச்சி இருக்கையை அமைக்க அரசு முன்வருமா? பாவாணருடைய நூற்றாண்டு விழாவை நடத்துவதற்கு அரசு என்னென்ன திட்டங்களை வைத்திருக்கிறது. எவ்வளவு நிதி ஒதுக்கியிருக்கிறது என்பதைப் பற்றியும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாவாணருடைய பிறந்த நாள் 7-2-1902. எனவே நூற்றாண்டு விழா இன்னும் மூன்று ஆண்டுகள் கழித்துதான்



வரப்போகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அப்போதுதான் எப்படிக் கொண்டாடப்படும், எந்த அளவு நிதி ஒதுக்கப்படும் என்பதைத் தெரிவிக்க முடியும்.

இரண்டாவதாக, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் மீது எந்த அளவிற்குப் பேரன்பு படைத்தவர் என்பதை நாடு நன்றாக உணரும். 1974 ஆம் ஆண்டு, நம்முடைய தலைவர் அவர்கள், அப்போது முதல்வராக இருந்தபோது, தேவநேயப் பாவாணருடைய மொழித்திறன் குறித்து நுணுகி ஆராய்ந்து, அவற்றை ஏற்று, செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் 'அ'கரமுதலி இயக்ககம் என்பதை அன்றைக்கே அவர்கள் நிறுவினார்கள். அதனுடைய சார்பில் மூன்று தொகுதிகள் வந்திருக்கின்றன. இப்போது 'க'கர முதலான தொகுப்பை அச்சடித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்போது இந்த ஆட்சி, பொறுப்பேற்ற பிறகு, நம்முடைய தனித் தமிழ்த் தந்தையாகிய மறைமலையடிகள் அவர்களுடைய நூல்களையும், மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுடைய நூல்களையும் நாட்டுடைமையாக்கி, தேவநேயப் பாவாணருடைய குடும்பத்திற்குப் பரிவுத் தொகையாக ரூ. 20 இலட்சம் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த நிலையில், நாட்டுடைமையாக்குவது என்பதை இன்னும் நம்முடைய நண்பர்கள் தவறான பொருளில் உணர்ந்திருக்கிறார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, நாட்டுடைமையாக்கப்பட்டது என்று சொன்னாலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தீரன் போன்றவர்கள் அந்த நூல்களை, அவர்களே தாராளமாக அச்சிட்டு நாட்டுக்கு வழங்கலாம் என்ற உறுதியும் வழங்கப்படுகிறது என்று பொருள். எனவே, அந்த நூல்களை அச்சிட்டு வழங்குவதற்கு அவரும் ஏற்பாடு செய்யலாம். ஏற்கெனவே, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகங்கள் போன்ற அமைப்புகள் வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே, அவர்களுடைய பெயரிலே ஓர் இயக்ககம் இயங்குகிற காரணத்தினாலும், பல்கலைக்கழகங்களில் ஏற்கெனவே 'ஆய்வு நிறைஞர்' என்ற M.Phil. பட்டம் பெற்றவர்களும், முனைவர் பட்டம் பெற்றவர்களும நிறையத் தலைப்புகளை எடுத்துக்கொண்டு ஆய்வு செய்திருக்கிறார்கள் என்பதாலும், தனித் தமிழ் இயக்ககம் தொடர்பாக இரண்டு, மூன்று ஆய்வேடுகள் வந்திருக்கின்றன என்ற முறையிலும், பல்வேறு துறை இயக்ககங்கள் அவற்றைக் கவனத்தில் கொள்கின்றன என்ற முறையிலும் அவர்களுடைய பணிகள் சிறப்பாகத் தமிழர்களால் உணரப்படுகின்றன என்பதை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

[1998 நவம்பர் 27

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 72, திரு. உ. திசைவீரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

72—

**வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தொலைபேசி இணைப்பு**

***10118—திரு. உ. திசைவீரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இவ்வாண்டு, இராமநாதபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்குத் தொலைபேசி இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இராமநாதபுரம் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு இவ்வாண்டு தொலைபேசி இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 73, திரு. இரா மகேந்திரன், மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

73—

**தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை**

***16902—திரு. இரா. மகேந்திரன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நாட்ராம்பள்ளியில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருத்துவமனை தொடங்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?



1998 நவம்பர் 27]

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**திரு. இரா. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளி, திருப்பத்தூர், வாணியம்பாடி போன்ற நகரங்களில் பீடித் தொழிலாளர்கள் மிக அதிக அளவில் இருக்கிறார்கள். அதேபோல், வேளாண்மை, தோட்டக் கலையைச் சார்ந்த தொழிலாளர்களும் நிறைய பேர் இருக்கிறார்கள். சர்க்கரை ஆலை இருக்கிறது; சந்தன எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலையும் இருக்கிறது. தொழிலாளர்கள் நலனில் அக்கறை கொண்டிருக்கும் நம்முடைய அரசு, வருகிற காலகட்டத்தில், E.S.I. மருத்துவமனையை எங்கள் பகுதியில் ஆரம்பிக்க ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்ராம்பள்ளிக்கு அருகிலே இருக்கக்கூடிய வேலூர், குடியாத்தம், ஆம்பூர் ஆகிய ஊர்களில் தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகம் (E.S.I. Dispensary) இருக்கிறது. வேலூரிலும் நோயாளிகளுக்குச் சிறப்புச் சிகிச்சைக்கென 50 படுக்கை வசதிகளுடன் கூடிய E.S.I. Hospital இருக்கிறது. இருப்பினும், நாட்ராம்பள்ளியைப் பொறுத்தமட்டிலே, 8 மைல் சுற்றளவிலே எத்தனை தொழிற்சாலைகள் இருக்கின்றன; எவ்வளவு பேர் அதிலே பணியாற்றுகிறார்கள் என்ற விவரத்திற்கான ஆய்வறிக்கை அரசுக்கு வரவேண்டும். இப்போதுதான் ஆய்வு செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இதற்கென்று சில விதிமுறைகள் இருக்கின்றன. ஆயிரம் பேர் மக்கள் தொகை இருக்க வேண்டும். பத்துக்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் மின் சக்தியைப் பயன்படுத்தி பணியாற்றினால் அங்கு E.S.I. Scheme applicable ஆகும். மின் சக்தி இல்லாமல் 20 தொழிலாளர்கள் இருப்பார்களேயானாலும் இது அவர்களுக்கு முறையாகும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஊரைப் பற்றிய தகவல் வந்த பிறகு, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 74, திரு. சீ.வெ. கிருஷ்ணன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

74—

## நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டுதல்

***15068—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேடசந்தூர் நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேடசந்தூரில் நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்காக ரூ.83 இலட்சம் நிதி ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. உரிய இடம் தேர்வு செய்வது குறித்து நீண்ட ஆய்வுக்குப் பின்னர், ஏற்கெனவே நீதித் துறையின் வசம் உள்ள இடத்தில் நீதிமன்றம் கட்டுவதற்குச் சென்னை உயர் நீதிமன்றம் தற்போது இசைவு அளித்துள்ளது. உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ள இடத்தில் கட்டடம் கட்டுவதற்கான பணிகளை மேற்கொள்ளுமாறு பொதுப்பணித் துறையினை அரசு அறிவுறுத்தியுள்ளது.

**திரு. சீ.வெ. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதலமைச்சர் அவர்களுக்கும், சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஐந்தாண்டுகளுக்கு முன்பு நீதிமன்றக் கட்டடம் கட்டுவதற்கு ரூ.75 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு, பொதுப்பணித் துறையின் மூலமாக இடத்தைத் தேர்வு செய்வதிலே தாமதம் ஏற்பட்டு, இப்போதும் அந்த நிலை இருக்கிறது. இடம் தேர்வு செய்வதிலே, நிலையான நிலையை எடுத்து, நம்முடைய சட்டத் துறை அமைச்சர் அவர்கள் நீதிமன்றக் கட்டடம் கட்டித்தர ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த இடத்தைத் தேர்வு செய்யலாம் என்று ஏற்கெனவே ஆய்ந்தபோது முதலிலே பொதுப்பணித் துறையால் ஆற்றோரத்தில் மிகவும் தாழ்வான ஓர் இடம் சொல்லப்பட்டது. அது பொருத்தமான இடம் இல்லை என்று நீதித் துறையால் கருதப்பட்டது. எனவே, இப்போது இருக்கின்ற நீதிமன்ற வளாகத்திற்குள்ளேயே நீதிமன்றக் கட்டடத்தைக் கட்டலாம் என்று இறுதியாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இது ஐந்தாண்டுகளுக்கு முன்னால் ஒதுக்கப்பட்ட தொகையல்ல. மூன்றாண்டுகளுக்கு முன்னால்தான் ஒதுக்கப்பட்ட தொகை. எனவே, இப்போது தேர்தெடுக்கப்பட்ட இடத்தில் புதிதாக நீதிமன்றக் கட்டடம் கட்டப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 75, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

75—

## திண்டிவனத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம்

***16804—திரு. ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் ஆறு நீதிமன்றங்களுக்கு ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழாது.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனத்தில் ஒரு சார்பு நீதிமன்றமும், 2 குற்றவியல் நீதிமன்றங்களும், 2 உரிமையியல் நீதிமன்றங்களும் இருக்கின்றன. ஒரு கூடுதல் சார்பு நீதிமன்றம் வரவிருக்கிறது. மொத்தத்தில் 6 நீதிமன்றங்கள் அங்கேயிருக்கிற காரணத்தால் இடப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது. அதேசமயத்தில் திண்டிவனத்தில் உள்ள சார்பு நீதிமன்றம் 1892 ஆம் ஆண்டு பிறந்த நீதிமன்றம். மிக மூத்த நீதிமன்றம். அந்த அடிப்படையிலே அதற்குக் கட்டடம், கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களைக் கேட்டதற்கிணங்க பொதுப்பணித் துறை 3.68 கோடி ரூபாயில் மதிப்பீடு தயார் செய்து அது உயர் நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறது. உயர் நீதிமன்ற நீதிபதிகள் கூட்டம் இன்றைக்கு நடைபெறவிருக்கிறது. அதில் ஒப்புதல் அளிக்கப்படவிருக்கிறது. அது உள் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டால் மறுபரிசீலனை செய்யப்படுமா, திண்டிவனத்தில் வழக்கறிஞர்கள் படும் துன்பத்தைக் குறைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனத்தில் இருக்கின்ற நீதிமன்றங்களில் ஒரே ஒரு நீதிமன்றம்தான் சுமார் 3500 ரூபாய் வாடகையில் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. மற்ற எல்லா நீதிமன்றங்களுமே சொந்தக் கட்டடத்தில்தான் இருக்கின்றன. ஏற்கெனவே உயர் நீதிமன்றத்திலேயிருந்து எங்களுக்கு 52 கோடியே 20 இலட்சத்து 44 ஆயிரம் ரூபாய்க்குத் திட்டம் வந்திருக்கிறது. அவற்றிலேகூட திண்டிவனம் இடம்பெறவில்லை. என்றாலும் மீண்டும் உயர் நீதிமன்றம் பரிந்துரை செய்யுமானால் அதுபற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 76, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.





76—

## சந்தன மரக்கன்றுகள் வளர்த்தல்

***19150—திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா.—

(அ) ஒட்டு சந்தன மரக்கன்றுகளை வளர்க்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அவற்றை விவசாயிகளின் சொந்த நிலத்தில் வளர்க்க அரசு அனுமதி வழங்குமா?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனத்துறை அமைச்சர்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விவசாயிகள் சொந்த நிலத்தில் சந்தனமரம் வளர்க்கத் தடையேதுமில்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படித் தடையில்லை என்றால் அவை எப்போது அமலுக்கு வரும்? வைக்கின்ற மரக்கன்றுகள் மரமாகி, அவை மணமாகிப் பலன் தர எத்தனை ஆண்டுகள் பிடிக்கும்? அதை விவசாயிகள் வளர்க்க முன்வந்தால் அதற்கு மானியம் உண்டா? இவையனைத்தும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டுமுறை மூலம் தரமான சந்தன மர நாற்றுகளை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத்தைத் தமிழ்நாடு வனத் துறை ஆராய்ச்சிப் பிரிவு தற்போது பெற்றுள்ளது. இக்கலையில் சுமார் 50 மாலிகளுக்கு ஆராய்ச்சித் துறையினரால் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1998-99 ஆம் ஆண்டில் ஒட்டுமுறை மூலம் 50 ஆயிரம் எண்ணிக்கையில் சந்தன மரக்கன்றுகள் வனத் துறை ஆராய்ச்சிப் பிரிவு மூலம் வளர்க்கப்படவுள்ளன. அடுத்த ஆண்டிலிருந்து ஒரு

[1998 நவம்பர் 27

இலட்சம் மரக்கன்றுகள் வளர்க்க ஏற்பாடு செய்யப்படும். சந்தன மரம் 25 ஆண்டு காலத்திற்குப் பின்னால்தான் பலன் தரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 77, திரு. மு. அப்பாவு, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

77—

### திருநெல்வேலி மாவட்டத்தில் மகளிர் மன்றங்கள்

***17954—திரு. மு. அப்பாவு:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம், வள்ளியூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்களில் எத்தனை மகளிர் மன்றங்கள் செயல்படுகின்றன?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் 30 மகளிர் மன்றங்களும், வள்ளியூர் ஊராட்சி ஒன்றியத்தில் 30 மகளிர் மன்றங்களும், மொத்தம் 60 மகளிர் மன்றங்கள் இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த 60 மகளிர் மன்றங்களின் மூலம் என்னென்ன சேவைகள் செய்யப்படுகின்றன? அந்த 60 மன்றங்களின் பெயர்களையும் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் தனியாகப் போய் வாங்கிக்கொள்ள வேண்டும். பட்டியலைப் படிக்க நான் அனுமதி கொடுக்க மாட்டேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை சார்பாக ஊரக மகளிர்களை



1998 நவம்பர் 27]

ஒன்றாகக் கொண்டுவா ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்தின் கீழும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் தமிழ்நாடு முழுவதும் 11,520 மகளிர் மன்றங்கள் தேர்வு செய்யப்பட்டு convenor மூலமாக அவற்றை வழி நடத்தும் செயல் திட்டம் நடைபெற்று வருகிறது. மகளிர் மன்றங்கள் ஊரகப் பெண்களிடையே கல்வியைப் பரப்பவும், பெண்களைக் காக்கும் சட்டங்கள் குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவும், அவர்களது பொழுதுபோக்கு நேரத்தைப் பயிற்சி நேரமாக மாற்றி, அவர்களது பொருளாதாரத்தை உயர்த்தவும் பாடுபட்டு வருகிறது. முகாம்கள் நடத்தவும், பெண்களுக்கு உணவு வகைகளை எப்படிப் பதப்படுத்துவது என்பது குறித்தும், குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுற்றுப்புறச் சுகாதாரம், சத்துணவு ஆகியவற்றில் பயிற்சி அளிக்கவும், கல்விச் சுற்றுலாவுக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லவும், சமூகக் கல்வியின்கீழ் புத்தகங்கள் வாங்கி அவர்களுக்கு வழங்குவதுமான பணிகளைச் செய்து வருகின்றன. ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் இதற்காக பதிமூன்றாயிரம் ரூபாய் செலவிடப்படுகிறது. ஆண்டுதோறும் சிறந்த மகளிர் மன்றங்கள் என்று தேர்வு செய்து, 75 மகளிர் மன்றங்களுக்கு இரண்டாயிரம் ரூபாய் என்ற அளவிலே வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர் தன்னுடைய ஒன்றியத்தில் இயங்குகின்ற 60 மகளிர் மன்றங்களினுடைய பெயர்ப் பட்டியலைக் கேட்டார்கள். அந்தப் பட்டியல் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 78, திரு ந. பாண்டுரங்கன், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

78—

### ஆதிதிராவிடர் பெண்கள் விடுதி கட்டுதல்

***11742—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 நவம்பர் 27

(அ) திருவண்ணாமலை மாவட்டம். பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு ஒன்றியம், வடமாதிமங்கலத்தில் ஆதிதிராவிடர் பெண்கள் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்போது?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): இக்கேள்விக்கு இடமில்லை. வடமாதிமங்கலத்தில் ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதி இதுவரை தொடங்கப்படவில்லை. விடுதி தொடங்கப்பட்ட பின்னர்தான், கட்டுவது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டிருக்கிற வடமாதிமங்கலம் கிராமம் ஒரு தீவு போன்று, ஆதிதிராவிடர்கள் வசிக்கின்ற பகுதியாகும். எனவே, வருகின்ற நிதியாண்டிலாவது ஆதிதிராவிடர் பெண்கள் விடுதி தொடங்குவதற்கு அரசு அனுமதி வழங்குமா, பரிசீலனை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடமாதிமங்கலத்தில் மகளிர் விடுதி ஒன்று தொடங்கிட ஏற்கெனவே அரசிடம் செயற்குறிப்பு உள்ளது. மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று, வருகின்ற ஆண்டில், ஏற்கெனவே திருவண்ணாமலை மாவட்டத்திலே 39 மாணவ, மாணவியர் விடுதிகள் இயங்கி வருகின்றன. அவற்றுடன் சேர்த்து இனி இவை 40 ஆக ஆக்கப்படும் என்பதைத் தங்கள் மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 79, திரு. கோ. தளபதி, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.



1998 நவம்பர் 27]

79—

### திருப்பரங்குன்றத்திற்கு அனைத்து வசதிகள்

***11435—திரு. கோ. தளபதி:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுற்றுலாத் தலமான திருப்பரங்குன்றத்திற்கு சுற்றுலாத் துறையின் மூலம் அனைத்து வசதிகளையும் செய்துதர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரைக்கு அருகிலுள்ள சுற்றுலாத் தலமான திருப்பரங்குன்றத்தில் சுற்றுலாத் துறையின் மூலமாக வசதிகள் செய்ய தற்போது செயற்குறிப்பு இல்லை.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றத்திற்கு தினந்தோறும் ஆயிரக்கணக்கான மக்களும், திருவிழா நேரங்களிலே இலட்சக்கணக்கான மக்களும் வருகின்றார்கள். அங்கே, தங்குமிடம், குளியலறை, கழிப்பறை போன்ற வசதிகள் கிடையாது. சுற்றுலாப் பயணிகள் தினந்தோறும் அங்கு இரவு நேரங்களிலே தங்குகின்றார்கள். ஆகையால், சுற்றுலாத் துறையின் மூலம் இந்த வசதிகளையெல்லாம் கட்டண முறையிலே செய்து தருவதற்கு அமைச்சரவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் திருக்கோயில் நிர்வாகத்தின் மூலமாக 24 அறைகளும் மற்றும் அங்கே தனியார் விடுதிகளும், தனியார் அறக்கட்டளை சத்திரங்களும், கல்யாண மண்டபங்களும் உள்ளன. இவைதவிர, மதுரையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலமாக சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு ஏதுவாக இரண்டு விடுதிகளும் இயங்குகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 80, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர்.

[1998 நவம்பர் 27

80—

## கலங்கரை விளக்கம் ஏற்படுத்துதல்

***14946—திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதி, மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகப் பகுதியில் கலங்கரை விளக்கம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் மல்லிப்பட்டினம் வளர்ந்துவரும் ஒரு மீன்பிடித் துறைமுகமாகும். அந்தப் பகுதியிலே மிக அதிகமான எண்ணிக்கையிலே விசைப் படகு மீனவர்களும், நாட்டுப் படகு மீனவர்களும் மீன்பிடித் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த மீனவர்களுக்குப் பயன்படுகின்ற வகையிலே மல்லிப்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்தில் கலங்கரை விளக்கம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் மறுபரிசீலனை செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ். ஜெனிபர் சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலங்கரை விளக்கம் எங்கள் துறையால் அமைக்கப்படுவதில்லை. துறைமுகத் துறையால் அமைக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மல்லிப்பட்டினத்தில் வழிகாட்டி விளக்குகள் எங்கள் துறையால் அமைக்கப்பட்டு, சிறப்பாக இயங்கி வருகின்றன என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



1998 நவம்பர் 27]

## 3. விதி 110-ன்கீழ் அறிக்கை

### உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்குத் தனி ஊதியம் அளித்தல் பற்றி மாண்புமிகு கல்வி அமைச்சரின் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை. மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் உங்களுக்குப் பேசுகின்ற வாய்ப்புக் கொடுக்கும்போது எழுந்து நிற்கலாம். இது முடிந்த பிறகு உங்களைக் கூப்பிடுவேன், உட்காருங்கள். இப்போது விதி 110-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் ஊதியக் குழுவின் பரிந்துரைப்படி மைய அரசு அறிவித்த ஊதிய உயர்வுக்கு இணையாக ஊதியம் தங்களுக்கு அரசு வழங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அவர்களது கோரிக்கையை அரசு பரிசீலித்தது. உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், மைய அரசு அறிவித்த ஊதிய விகிதத்தை நடைமுறைப்படுத்துவதில் நிர்வாகச் சிக்கல் இருப்பதைத் தலைமை ஆசிரியர் சங்கங்களுக்கு அரசின் தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. இதுபற்றி நான் 25-11-1998 26-11-1998 அன்று தலைமைச் செயலகத்தில் மூன்று சுற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினேன். ஊதிய விகிதத்தை மாற்றுவதில் நிர்வாகச் சிக்கல் இருப்பதால் அதை மாற்றியமைக்க இயலாது என்று தெரிவிக்கப்பட்டது. தலைமை ஆசிரியர்கள் ஆசிரியப் பணியுடன் பல நிர்வாகப் பொறுப்புக்களையும் வகிப்பதால், தலைமை ஆசிரியர்கள் பணிக்கு ஏற்ற ஊதியம் வழங்க அரசு இசைவு தெரிவித்தது. அவர்களுக்கு அதற்காகத் தனி ஊதியம் (Personal Pay) வழங்கலாம்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 நவம்பர் 27

என அரசு ஏற்றுக் கொண்டது. உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.500-ம், மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு ரூ.600-ம் தனி ஊதியமாக Personal Pay என்ற முறையில் 1-9-1998 முதல் வழங்க இவ்வரசு முடிவு செய்துள்ளது. இவ்வூதியம் அரசு நடைமுறைப்படுத்தும் இதர படிகளும் சேர்த்து வழங்கப்பட ஏதுவாகும். இதனை நல்லெண்ணத்துடன் ஏற்று தலைமை ஆசிரியர்கள் போராட்டத்தைக் கைவிடவும் இசைந்துள்ளனர் என்பதையும் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட தாயும் குழந்தையும் மரணம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, சிறப்புக் கவன ஈர்ப்பு. (குறுக்கீடுகள்) நான் இதைப் பேசி முடித்த பிறகு உங்களைக் கூப்பிடுகிறேன் (குறுக்கீடுகள்) திரு. இரா. தாமரைக்கனி மற்றும் டாக்டர் க. கிருஷ்ணசாமி ஆகிய இருவரும் உட்கார வேண்டும். எந்தப் பிரச்சினையாக இருந்தாலும், நான் பேசி முடித்த பிறகு உங்களுக்கு அனுமதி கொடுக்கிறேன். அதுவரைக்கும் அமைதியாக உட்காருங்கள். இல்லாவிட்டால் உங்களுக்கு அனுமதி மறுக்கப்படும்.

திருச்செங்கோடு வட்டம், குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் பிரசவத்திற்காக அனுமதிக்கப்பட்ட இன்பகுமாரி மற்றும் அவர் குழந்தை இறந்தது குறித்து திரு. சி. ஞானசேகரன், திரு. ஐ. கணேசன் மற்றும் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் ஆகியோர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில், முதலில் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன் அவர்களைப் பேச அழைக்கிறேன். டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமாரபாளையம் நகரிலே, இந்திரா நகரைச் சேர்ந்த கைத்தறித் தொழிலாளி மாதேஸ்வரன் என்பவரது மனைவி இன்பகுமாரி பிரசவத்திற்காக அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கே மரணம் உற்றதால், அங்கே பெரும் அமளி ஏற்பட்டு ஏறக்குறைய 2,000-க்கும் மேற்பட்டோர் சாலை மறியலில் ஈடுபட்டதாகச் செய்திகள்



1998 நவம்பர் 27] [டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்]

வந்திருக்கின்றன. குறிப்பாக அரசு மருத்துவமனையிலே சிகிச்சை என்கிறபோது பிரசவ காலங்களில் சகமருத்துவருடைய ஒத்துழைப்பு. அங்கு இருக்கிற மருத்துவருக்கு முக்கியமாகத் தேவைப்படுகிறது. மயக்க மருந்து கொடுக்கின்ற மருத்துவருடைய உதவி, கடமையில் இருக்கின்ற மருத்துவருக்கு அவசியம் தேவைப்படுகின்றது. அரசு மருத்துவமனையில் போதிய அளவில் டாக்டர்கள் இருக்க வேண்டும். டாக்டர்களுடைய உதாசீனத்தால் மரணம் அடைந்ததாகக் கூறி ஒரு முடிவிற்கு வந்துவிடக்கூடாது என்பதற்காகக் குறிப்பிட விரும்புகிறேன். அங்கே, மருத்துவமனையில் உதாசீனம் நடந்திருந்தால், அத்தகைய மருத்துவர்களைத் தண்டிக்க வேண்டியது மிக அவசியம். அதேநேரத்தில் அவர்களுக்குப் போதிய வசதி இல்லாமல், போதிய உபகரணங்கள் இல்லாமல் அங்கே மருத்துவ சிகிச்சையில் குறைபாடுகள் இருக்குமேயானால், அதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவை எல்லாம் தேவையில்லாதது. குமாரபாளையம் பிரச்சினை குறித்துத்தான் நீங்கள் பேச வேண்டும். அதற்குமேல் பேசியதைக் குறிப்பேட்டில் ஏற்ற மாட்டேன். அடுத்து. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமாரபாளையம், இந்திரா நகரைச் சேர்ந்த விசைத்தறி தொழிலாளி மாதேஸ்வரன், வயது 25, அவருடைய மனைவி இன்பகுமாரி, வயது 19, பிரசவத்திற்காக 18-11-1998 அன்று காலை 8-20 மணிக்கு குமாரபாளையம் அரசு பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இரவு 7-10 மணியளவில் இன்பகுமாரி பிரசவ வேதனையில் துடிதுடித்தபோது அங்கே டாக்டர்கள் இல்லை. அங்கே இருக்கக்கூடிய ஊழியர்கள் அந்தப் பெண்ணைத் தனியாக ஒரு அறைக்கு அழைத்துச் சென்று ஊசி போட்டிருக்கிறார்கள். 7-20 மணிக்கு அந்தப் பெண்ணுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்ததாகச் சொல்லப்பட்டது. அந்தக் குழந்தையைப் பார்க்க வேண்டுமென்று உறவினர்கள் மற்றும் அவருடைய கணவர் கேட்ட நேரத்தில் குழந்தை இன்னும கத்தவில்லை, குழந்தை கத்தியதும், டாக்டர் வந்தவுடன் காட்டப்படும் என்று சொல்லிவிட்டார்கள். சுமார் 1 மணி நேரம் குழந்தையைப் பார்க்க அவர்களை அனுமதிக்காமல் இருந்திருக்கிறார்கள. உற்றாரும், உறவினரும் பதைபதைத்து டாக்டரிடத்திலே, தொலைபேசியில் சிலரும், டாக்டர் வீட்டுக்குப் பலரும் ஒடி--கேட்ட நேரத்தில், அங்கிருந்த மருத்துவ--

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஊழியர்களையும் சிலர் அழைத்துச் சென்று டாக்டரை 9 மணியளவிற்கு மருத்துவமனைக்கு அழைத்து வந்திருக்கிறார்கள். 9 மணிக்கு வந்த டாக்டர் இந்தப் பெண்ணுக்கு விலை உயர்ந்த ஊசிகள் போடவேண்டும், ஆகவே, நீங்கள் பணம் கொடுக்க வேண்டுமென்று அந்த ஏழைத் தொழிலாளியிடத்திலே கேட்டிருக்கிறார். அந்த ஏழைத் தொழிலாளி தன்னால் முடியாத நிலைமையை எடுத்துச் சொல்லி ஓரளவிற்கு அக்கம் பக்கம் இருந்தவர்களிடத்திலே பணம் திரட்டி கொடுக்கும்போது, உடனடியாக டாக்டர்கள் அந்த ஏழைத் தொழிலாளி மாதேஸ்வரனை அழைத்து வெள்ளைத் தாளிலே கையொப்பம் வாங்கியிருக்கிறார்கள். வெள்ளைத் தாளிலே கையொப்பம் வாங்கிவிட்டு, மருத்துவச் சான்றிதழ்களில் கையொப்பம் பெற்றுக்கொண்டு ஆஸ்பத்திரிக்குள்ளே சென்று ஆபரேஷன் செய்வதுபோல நடித்துவிட்டு, 10 நிமிடங்கள் கழித்து வெளியே வந்து, இரத்தப்போக்கு அதிகமாக இருப்பதினால் அந்தப் பெண் மரணம் அடைந்துவிட்டாள், அதுபோல குழந்தையும் மரணம் அடைந்துவிட்டது என்று அந்த ஏழையைப் பார்த்து, அந்த டாக்டர்கள் மிகக் கேவலமான முறையிலே சொல்லியிருக்கிறார்கள்.

முற்பகல் 10-50

நான் தமிழக முதல்வரைக் கேட்க ஆசைப்படுகிறேன். கோடிக்கணக்கான ஏழைகள் தங்களை நம்பியிருக்கிறார்கள். அரசு மருத்துவமனைக்கு உங்கள் ஒருவரை நம்பித்தான் தாய்மார்கள் பேறுகாலத்திற்கு வருகிறார்கள். ஆனால், குழந்தைகளைப் பெற வேண்டுமானால், டாக்டர்கள் போட்டிருக்கக்கூடிய கட்டணம், ஆண் குழந்தையா, 500 ரூபாய், பெண் குழந்தையா 300 ரூபாய்., குளுக்கோஸ் ஏற்றவேண்டுமா 30 ரூபாய். இது நியாயமா? தர்மமா? தமிழக அரசே, தமிழக முதல்வரே, கருணை உள்ளத்தோடு சிந்தித்துப் பாருங்கள். இப்படித்தான் அரசு மருத்துவமனைகளிலே நடந்து கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அச்சடித்து வைத்துப் படிக்கிறீர்களா? "அப்படிச் சொல்கிறார்கள்" என்று சொல்லுங்கள். ஏதோ பேப்பரிலேயிருந்து படிப்பதைப் பார்ததால், அச்சடித்து எல்லோருக்கும் விநியோகம் பண்ணுவது மாதிரிச் சொல்கிறீர்களே, 500 ரூபாய், 300 ரூபாய் என்று. மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**திரு. ஐ. கணேசன்:** நான் இன்னும் முடிக்கவில்லை.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதுதான் முடித்துவிட்டீர்களே. இன்னும் என்ன இருக்கிறது?

**திரு. ஐ. கணேசன்:** ஒரு நிமிடம். பிறகு அந்தக் குழந்தை மற்றும் தாயின் சடலங்களை அந்தத் தொழிலாளி பெற்றுக்கொண்டு, வீட்டிலே இருக்கும்போது துக்கம் விசாரிக்க வந்தவர்கள் அங்கே நடந்ததைக் கேள்விப்பட்டு மறுநாள் காலை டாக்டர்களை விசாரிக்க, பெண்கள் சுமார் 50, 60 பேர் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருக்கிறார்கள். ஆஸ்பத்திரியிலே டாக்டர்களிடம் விசாரிக்கும்போது சரியான தகவல் இல்லாமல் வார்த்தைகள் தடிக்கும்போது, ஊர் மக்கள் அங்கே கூடி, எங்களுக்கு நியாயம் வேண்டும், ஏழைகளுக்காக இந்த ஆஸ்பத்திரியா அல்லது மருத்துவமனையிலே பணிபுரிகின்றவர்களுக்காக இந்த ஆஸ்பத்திரியா என்று கேட்ட நேரத்தில், தடிப்பு மிகப் பலமாகியதனால், நீதி கேட்டு அவர்கள் சாலையில் அமர்ந்திருக்கிறார்கள். கிட்டத்தட்ட 2 ஆயிரம் பேருக்கு மேலே அங்கே கூடி சாலை மறியல் செய்திருக்கிறார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் வர வேண்டும், உயர் மருத்துவ அதிகாரி வர வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். போலீஸ் அவர்களைத் தடுத்து, தடியடி நடத்திய பிறகு, ஒருசிலர் மருத்துவமனைக்குச் சென்றதால் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. இதன் காரணமாக அங்கு நூற்றுக்கணக்கான தொழிலாளிகள், தறி நெசவுக்குச் சென்றவர்களை, டீ குடிக்கச் சென்றவர்களையெல்லாம், காவல் துறை கைது செய்து வைத்திருக்கிறது. ஆகவே, அவர்களை எந்த விதமான நிபந்தனையும் இன்றி இந்த அரசு விடுதலை செய்ய வேண்டும். அந்த ஏழை விசைத்தறி தொழிலாளி, அவர் குடும்பத்தைப் பறிகொடுத்ததன் காரணமாக, அரசு அந்தத் தொழிலாளிக்குக் குறைந்தது 5 இலட்சம் ரூபாய் வரை நஷ்டஈடு வழங்க வேண்டும்.

மேலும் இந்தச் சம்பவம் தமிழ்நாட்டில் எந்த மூலை முடுக்கிலும் நடக்காத அளவிற்கு ஒரு நீதி விசாரணை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, ஒன்றை மட்டும் சொல்லி முடிக்கிறேன். சபாநாயகர் அவர்களே, கருவறையிலே இருக்கும் குழந்தையைக் கொண்டு வர சில்லறை கேட்ட காரணத்தினால் தாயும், சேயும் கல்லறை வரை செல்ல வேண்டிய அவல நிலை ஏற்பட்டது. கருவறையிலிருந்து கல்லறை வரை சில்லறை தேவையென்ற நிலை உருவாகக் காரணமாக இருந்தவர்கள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்களும் இங்கே எடுத்துச் சொன்ன அந்தக் கருத்துக்களை இந்த அரசு நூற்றுக்குநூறு ஏற்றுக்கொண்டு, இந்த அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10-55

பொதுவாக அரசு மருத்துவமனைகளிலே பிரசவத்திற்கு வருகின்ற தாய்மார்களை நல்லமுறையிலே பாதுகாத்து அவர்களுக்கு சிகிச்சையளித்து, தாயும், சேயும் வீடு திரும்ப வேண்டுமென்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையிலேதான் தமிழ்நாட்டிலுள்ள தாலுகா மருத்துவமனைகளிலேயும் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக நான்காவது முறையாக பொறுப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகு, Ultra sound scanner Baby warmer போன்ற நவீன கருவிகளை எல்லாம் வாங்கித் தந்து, மிகச் சிறந்த முறையிலே மருத்துவமனைகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இருந்தாலும், குமாரப்பாளையத்திலே நடந்துவிட்ட இந்தச் சம்பவம் நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

குமாரப்பாளையத்தைச் சேர்ந்த மாதேஸ்வரன் என்பவரது மனைவி திருமதி இன்பகுமாரி என்பவர் பிரசவத்திற்காக 18-11-1998 அன்று அரசு மருத்துவமனையிலே அனுமதிக்கப்பட்டார். குறை பிரசவத்தில் பிறந்த பெண் மகவு பிறந்த 8 நிமிடங்களில் இறந்துவிட்டது. அதற்குப் பின்னால் நோயாளி திருமதி இன்பகுமாரிக்கு மார்பு வலியும், மயக்கமும் ஏற்பட்டு 9 மணி 45 நிமிட அளவில் உயிர் துறந்தார். மருத்துவர்களின் கவனக்குறைவினால் ஏற்பட்ட சம்பவம் எனக் கருதப்படுவதால், அரசு பூர்வாங்க விசாரணைக்கு உத்தரவிட்டது.

குமாரபாளையம் அரசு மருத்துவமனையில் பிரசவத்தின்போது ஏற்பட்ட இந்த இறப்புகள் குறித்து துறை விசாரணை ஒன்று நடத்தவும், அது தொடர்பான அறிக்கை ஒன்றினை அனுப்பி வைக்க வேண்டும் என்றும், மருத்துவம் மற்றும் ஊரக நல்வாழ்வுப் பணிகளின் கூடுதல் இயக்குநர் டாக்டர் பி. சுசீலா கிருஷ்ணாராம் அவர்களுக்கு அரசு



1998 நவம்பர் 27] [திரு. ஆற்காடு நா. வீராசாமி]

உத்தரவிட்டது. அரசு உத்தரவை ஏற்று, டாக்டர் பி. சுசீலா கிருஷ்ணராம் அவர்கள் ஓர் அறிக்கையை அரசுக்குத் தந்திருக்கிறார்கள். மாதேஸ்வரன் மனைவி திருமதி இன்பகுமாரி, அந்த நோயாளியின் எண் 2880, அனுமதிக்கப்பட்ட தேதி 18-11-1998; அன்று இரவு சுமார் 8-30 மணிக்கு புறநோயாளியாக டாக்டர் சுந்தரியால் கவனிக்கப்பட்டார். பிரசவ சோதனை நடத்தப்பட்ட பின்னர் நோயாளி பிரசவத்திற்காக சேர்க்கப்பட்டார். சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னர் நோயாளியை அவர் சோதனை செய்யவேயில்லை.

இரண்டாம் முறை மாற்றுப் பணியிலிருந்த தலைமை செவிலியர், மூன்றாம் முறை மாற்றுப் பணியில் இருந்த தலைமை செவிலியர் உதவியுடன் பிரசவத்தைக் கவனித்தார். அப்போது பிரசவத்திற்கு என்று சேர்க்கப்பட்டவர் மூச்சு விடுவதற்கு மிகவும் சிரமப்படும் நிலையிலுள்ள பெண் குழந்தை ஒன்றை ஈன்றெடுத்தார். பிரசவத்தின் போதும், பிரசவத்திற்குப் பின்னரும் நோயாளியின் உடல்நிலை சாதாரணமாகவே இருந்தது. இரண்டாம் முறை மாற்றுப் பணியில் இருந்த தலைமைச் செவிலியர் நோயாளியை மூன்றாம் முறை மாற்றுப் பணிக்குவந்த தலைமைச் செவிலியர் பொறுப்பிலே விட்டுவிட்டு வீட்டிற்குச் சென்று விட்டார். குழந்தைக்கு உணர்வை ஏற்படுத்த மூன்றாம் முறை தலைமைச் செவிலியர் முயற்சித்தார். ஆண் செவிலி உதவியாளர் (Male Nursing Assistant) மூலம் பணியிலுள்ள மருத்துவ அதிகாரிக்குத் தகவல் அனுப்பினார். ஆனால், அவர் வரவேயில்லை. இரவு சுமார் 7-30 மணிக்கு குழந்தை இறந்துவிட்டது. இரவு சுமார் 8-00 மணிக்கு, மூன்றாம் முறைப்பணித் தலைமைச் செவிலியர், நோயாளிக்கு இரத்தப்போக்கு ஏற்பட்டு, மூச்சு திணறுவதையும், பதட்டமுடன் அலறுவதையும் (Bleeding P.V.) கண்டார். அவர், Syntocinon கரைசலையும், Decadran ஊசி மருந்தையும் நோயாளிக்கு ஏற்றிவிட்டு, பணியிலுள்ள மருத்துவ அதிகாரிக்கு எம்.என்.ஏ. மூலம் நோயாளியின் நிலைமைக் குறித்துத் தகவலளித்தார். இரவு சுமார் 8-20 மணிக்கு இருவரும் வந்து நோயாளியைச் சோதனையிட்டு, சிகிச்சையளிக்கத் தொடங்கினர். இரவு 8-20 மணி முதல் அவர்கள் தீவிர சிகிச்சை அளித்துள்ளனர். இருப்பினும் இரவு சுமார் 9-45 மணிக்கு நோயாளி இறந்துவிட்டார்.

பிரேத பரிசோதனையில் அம்னியோடிக் திரவப் பெருக்கினால் இறந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. டாக்டர் சுந்தரி மற்றும் டாக்டர் ஆறுமுகம் இறப்பிற்குச் சான்றளித்துள்ளனர். இரண்டாம்முறை மாற்றுப்

பணித் தலைமைச் செவிலியரின் கூற்றுப்படி, நோயாளி இறந்த பின்னர் மட்டுமே, நோய்க்குறி குறிப்பேடு எழுதப்பட்டது என்று அவர் தெரிவித்துள்ளார். தாம் நோயாளியைப் புற நோயாளியாகச் சோதித்து பிரசவ வார்டில், நோய்க்குறி குறிப்பேட்டை முற்பகல் சுமார் 11-30 மணிக்கு எழுதினார் என்றும் மீண்டும் அவர் நோயாளியை மாலை 4-00 மணிக்குச் சோதித்து, அவரைப்பற்றிய குறிப்புகளை நோய்க்குறி குறிப்பேட்டில் பதிவு செய்ததாகவும் பெண் மருத்துவ அதிகாரி கூறியுள்ளார். ஆனால், அவர் அன்று மாலையில் பணியில் இல்லை என்றும், எனவே, அன்று மாலையில் புற நோயாளிகளை அவர் கவனிக்கவில்லையென்றும் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார். எனவே பதிவு செய்யப்பட்டவையும், மாலை 4 மணிக்குத் தெரிவிக்கப்பட்டவையும் பொய்யானவை என்பதையே இது காட்டுகிறது. M.N.A.. விடமிருந்து நோயாளியின் மோசமான நிலை குறித்த தகவலைப் பெற்ற பின்னர், இரவு 8.20 மணியளவில் மட்டுமே, அவர் நோயாளியைப் பார்த்துள்ளார். அதன் பின்னரே, அவர் அவருடைய கணவருடன் மருத்துவமனைக்கு வந்து நோயாளியைச் சோதித்து, மேற்சொன்ன சிகிச்சையையும் அளித்து, இறப்பு குறித்தும் சான்றிதழ் அளித்துள்ளார். மருத்துவ அதிகாரி டாக்டர் ஆறுமுகத்தின் கூற்றுப்படி, அவர் நோயாளியுடன் நோயாளியைக் கவனிக்க வந்தவர்களிடம் நோயாளியைக் காப்பாற்றுவதற்கான ஊசி, கார்போபிரோஸ்ட் ஊசி, டோபாமின் ஆகியவற்றை வெளியிலிருந்து வாங்கி வர வேண்டுமென்று கூறியதாகத் தெரிவித்திருப்பதை ஏற்பதற்கில்லை. வெளியிலிருந்து மருத்துகளை வாங்க வேண்டுமென்று மருந்துச் சீட்டுக் கொடுக்கக்கூடாது என்று அரசாங்கத்தினுடைய நிரந்தர ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மருத்துவ அதிகாரி மட்டுமே அவசரம் ஏற்பட்டால், அங்கேயிருக்கின்ற மருத்துவமனை நிதியிலேயிருந்து மருந்துகளை வாங்க வேண்டுமென்றும் அரசு ஆணை இருக்கிறது. இவ்வாறு இருக்க இதெல்லாம் எனக்குத் தெரியாது என்று மருத்துவ அதிகாரி கூறியிருக்கிறார். மருத்துவ அதிகாரியின் பொறுப்பின்மையையும், நிர்வாகம் பற்றி அவர் தெரிந்து கொள்ளாததையும் இது சுட்டிக்காட்டுகிறது

முற்பகல் 11-00

நோயாளி மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர், அவர் குழந்தையை ஈன்றெடுக்கும் வரையிலும் டாக்டர் சுந்தரி அவரைக் கவனிக்காமல் விட்டுவிட்டதன் மூலம் அவர் தன்னுடைய கடமையை





ஆற்றத் தவறிவிட்டார் என்ற முடிவிற்கு இவர் வந்திருக்கிறார். விசாரணை அதிகாரியான கூடுதல் இயக்குநர், நோயாளி இறக்கும் தருவாயில் மட்டுமே அவர் நோயாளியைக் கவனித்துள்ளார் மற்றும் இறந்ததற்கான சான்றிதழ் அளித்துள்ளார். அன்று மருத்துவராகப் பணிப் பொறுப்பிலிருந்த மருத்துவ அதிகாரி டாக்டர் ஆறுமுகம், நோயாளியைப் பரிசோதனை செய்வதற்கும், தேவையான சிகிச்சை அளிப்பதற்கும் தவறிவிட்டார் என்றும் தெரிவித்திருக்கிறார். மேலும் வெளியிலிருந்து மருந்துகளை வாங்குவதற்காக மருந்துச் சீட்டு எழுதிக் கொடுத்திருப்பது தனக்குத் தெரியாது என்று சொல்லியிருப்பது ஏற்க முடியாது. எனவே மேற்சொன்ன மருத்துவர்கள் இருவருக்கும் எதிராக தேவையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று விசாரணை அதிகாரி, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநருக்கு பரிந்துரை செய்துள்ளார்.

விசாரணை அதிகாரியின், விசாரணை அறிக்கையைக் கூர்ந்து ஆய்வு செய்த பின்னர், இந்நிகழ்வில் தொடர்புள்ள இரு மருத்துவர்களும் மற்றும் சார்நிலைப் பணியாளர்களும் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். மேலும் அவர்களின் மீது, மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் துறை இயக்குநர் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளார் என்று அறிக்கை தரப்பட்டிருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே தெரிவித்ததைப் போல மனிதாபிமானமின்றி, கொஞ்சமும் கடமையுணர்ச்சியின்றி நடந்து கொண்ட இந்த இரண்டு மருத்துவர்களையும் இந்த அரசு இன்றே தற்காலிக வேலைநீக்கம் செய்கிறது. அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும். முழு விசாரணை நடந்ததற்குப் பிறகு, அந்த அறிக்கையைப் பெற்றதற்குப் பிறகு அவர்களை நிரந்தரமாகவே பணிநீக்கம் செய்ய வேண்டுமென்று அரசு கருதினால், நிச்சயமாகச் செய்யும். இதன் மூலம் தமிழகத்திலே பணியாற்றக்கூடிய பல்லாயிரக்கணக்கான டாக்டர்களுக்கு இது ஒரு பாடமாக இருக்குமென்று தெரிவித்து, இந்த அளவிலே முடிக்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நஷ்ட ஈடு........

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நஷ்ட ஈடு எல்லாம் நீங்கள் தனியாகக் கேட்டுக் கொள்ளுங்கள். ஒவ்வொரு ஆஸ்பத்திரி இறப்புக்கும் நஷ்ட ஈடு கொடுக்க முடியாது. (குறுக்கீடு) நன்றியா, சரி.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். நஷ்ட ஈடு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவ்வளவுதான், நஷ்ட ஈடு எல்லாம் தனியாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.

## 5. தகவல் கோரல்

### (அ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து விளக்கம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாஞ்சோலை எஸ்டேட்டில் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் கடந்த மூன்று மாத காலமாகத் தாங்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதை எதிர்த்தும், எந்தத் தொழிலாளர் நலச் சட்டமும் முறையாக அமலாக்கப்படாததைக் கண்டித்தும் போராட்டம் நடத்தி வருகிறார்கள். அந்தத் தொழிலாளர்களுடைய எந்தவிதமான பிரச்சினைகளும் தீர்க்கப்படாத இந்த நிலையில் கடந்த மூன்று தினங்களாக திருநெல்வேலி மாவட்ட காவல் துறையினர் அந்த தொழிலாளர்களிடம் வீடு வீடாகச் சென்று துப்பாக்கியைக் காட்டி வேலைக்குச் செல்ல வற்புறுத்துகிறார்கள். அந்தத் தொழிலாளர்கள் தங்களுடைய அன்றாட உணவிற்குப் பயன்படுத்தும் அரிசி, பருப்பு, காய்கறிகளைக்கூட கீழேயிருந்து கொண்டுசெல்ல மறுக்கப்படுகிறார்கள். வீட்டைக் காலி செய்யவும் வற்புறுத்தப்படுகிறார்கள்.

முற்பகல் 11-05

கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு, இதே மன்றத்திலே இந்தப் பிரச்சினை வந்தபொழுது தமிழக முதலமைச்சர் அவர்கள் நேரிடையாகத் தலையிட்டு, அந்தத் தொழிலாளர்களுக்கு மட்டுமல்ல, தமிழகத்தில் இருக்கக்கூடிய எஸ்டேட் தொழிலாளர்களுடைய பிரச்சினைப் பற்றியெல்லாம், அவர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுகிறார்களா என்பதைக் கண்டறிவதற்காக ஒரு நீதிபதியின் தலைமையிலே ஒரு விசாரணை கமிஷனை அமையுங்கள், ஏழையெளிய



1998 நவம்பர் 27] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

மக்களுக்காக நீங்கள் முன்வாருங்கள் என்று நான் கேட்டிருந்தேன். ஆனால், இந்த நிலையில் கடந்த 3 தினங்களாக இந்தத் தொழிலாளர்களைக் காவல் துறையே கசக்கிப் பிழிவதை அனுமதிக்கலாமா, அரசே அதை அனுமதிக்கலாமா என்பதற்குத் தமிழக முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ஒரு தீர்வு காணக்கூடிய வகையில், கொத்தடிமைகளாக நடத்தப்படுவதைப் பற்றி விசாரிக்க ஒரு கமிஷனும் அந்தத் தொழிலாளர்கள், அரிசி, பருப்பு கொண்டுபோவதைக் கூட தடுக்கக்கூடிய காவல் துறையைத் தடுத்து நிறுத்தவும், அவர்களுடைய வீடுகளைக் காலி செய்ய வேண்டுமென்று வற்புறுத்தப்படுவதையும், வீடு வீடாகச் சென்று காவல் துறை துப்பாக்கி காட்டி மிரட்டுவதையும் தடுத்து நிறுத்துவதற்கு தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்தில் ஒரு நல்ல பதிலைத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்திலே, அந்த மாஞ்சோலை பிரச்சினை எழுப்பப்பட்டபோது (மணியடிக்கப் பெற்றது) என்னுடைய உரிமைப் பிரச்சினை, வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்வது Personal Explanation. அதை இப்போது வைக்காதீர்கள். இப்போது இந்தப் பிரச்சினைக்குத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் பதில் சொல்வார்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உண்மையைச் சொல்வதற்காக வருத்தப்படுகிறேன். நம்முடைய டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் தொழிற்சங்கத்தினுடைய கலாசாரத்தையே மாற்றிக் கொண்டிருக்கிறார். மாஞ்சோலை எஸ்டேட்டிலே....

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் பதில் சொல்லட்டும். அதற்குப் பிறகு நீங்கள் உங்கள் மறுப்பைத் தெரிவிக்கலாம். என் அனுமதி இல்லாமல் நீங்கள் எழுந்து நிற்கக்கூடாது. அவர் பேசியதிலே ஒன்றும் unparliamentary words இல்லை, நீங்கள் உட்காருங்கள். உங்களுக்குப் பதில் சொல்ல வாய்ப்புத் தருகிறேன். இப்பொழுது நீங்கள் உட்காருங்கள். நீங்கள் அடிக்கடி என் அனுமதி இல்லாமல் இப்படி எழுந்து நின்றால், நான் நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் ஏற்படும்.

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், அங்கு பல்வேறு சங்கங்கள் இருக்கின்றன. மாஞ்சோலை எஸ்டேட் சம்பந்தமாக மட்டுமல்ல, பல்வேறு labour plantation estates இருக்கின்றன. அங்கெல்லாம் தொழிலாளர்கள், நிர்வாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் இருக்குமேயானால், சட்டத்திற்குட்பட்டு, அந்தத் தொழிற் சங்கத் தலைவர்கள், பிரதிநிதிகள், தங்களுடைய பிரச்சினைகளை முன்வைத்து, அதற்குச் சட்ட ரீதியாக தீர்வுகளைக் கண்டு வருகிறார்கள். ஜனநாயக ரீதியாகவும் போராட்டம் நடத்துகிறார்கள். வேலைநிறுத்தம் செய்கிறார்கள். மாஞ்சோலை எஸ்டேட்டைப் பொறுத்தமட்டிலே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி அவர்கள் எல்லா தொழிற்சங்கங்களுடைய நியாயமான போக்குகளுக்கு விரோதமாக, அவரைப் பொறுத்தமட்டிலே அங்கு வேறுவிதமாக ஒரு சூழ்நிலையை உருவாக்கி வருகிற காரணத்தினாலே தொழிற்சங்கங்கள் பல அங்கு இருந்தும்கூட இந்தப் பிரச்சினையிலே தலையிட முடியாமல், பயமுறுத்தப்படுவதாக எனக்குத் தகவல் கிடைத்திருக்கிறது. நிர்வாகம் பயமுறுத்தப்படுவதாகத் தகவல் கிடைத்திருக்கிறது. மாறாக, மாண்புமிகு உறுப்பினர், உண்மைக்குப் புறம்பாக, காவல் துறையினர் வீடு, வீடாகச் சென்று அங்கு இருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு விரோதமாக நடப்பதாகச் சொல்கிறார்கள். அது உண்மையல்ல. இப்போதும், சில தொழிலாளிகள் வேலைக்குப் போய்கொண்டுதான் இருக்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு நாளும் உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டு போகிறார்கள். காரணம், இது தொழிற்சங்கப் பிரச்சினையாக இல்லாமல் வேறு பிரச்சினையாக மாற்றப்பட்டு இருக்கிறது. இது தொழிலாளர் வர்க்கத்தினுடைய வரலாற்றிலேயே மிக அபாயகரமானது. அவர்கள் நியாயமாகப் போராடட்டும். தொழிற்சங்கங்கள் இருக்கின்றன, போராடட்டும், சட்டங்கள் இருக்கின்றன, அவை பயன்படட்டும். சட்டத்திற்கு உட்பட்டு அவர்கள் போராடட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. இதுவரைக்கும் நான் சொல்ல விரும்புகிறேன், கிருஷ்ணகாந்தன் யாதவ், மாநில உயர்மட்டக் குழுவினுடைய உறுப்பினர், புதிய தமிழகம், அவரே எழுதிக் கொடுத்திருக்கிறார். அதிலே அவர் சொல்கிறார், வேலைநிறுத்தத்தை முடிவிற்குக் கொண்டு வந்து 29-8-1998 முதல் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல சம்மதிக்கிறோம் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார். வேலைக்குச் செல்ல அவர்கள் சம்மதிக்கிறார்கள். நான் கேட்கிறேன், கிருஷ்ணசாமி அவர்களே, 'வேலைக்குச் செல்லுங்கள்' என்று அறிக்கைவிட நீங்கள் தயாராக இருக்கிறீர்களா? ஆக, இந்தப் பிரச்சினையை வேறு சில



1998 நவம்பர் 27]

இலாபங்களுக்காக, மோசமாக, அய்யாவின் கொள்கைகளுக்கு விரோதமாக, அண்ணாவின் கொள்கைகளுககு விரோதமாக, தொழிற்சங்க கலாசாரத்துக்கே விரோதமாக ஒரு தவறான பாதையில் செல்வதை மாற்றி, அவரே தொழிலாளர்கள் வேலைக்குச் செல்ல வேண்டும் என்று அறிக்கை விடவேண்டும். கோரிக்கை இருக்குமானால், சட்டரீதியாகப் பேசித் தீர்க்கலாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் என்ன சொல்லப் போகிறீர்கள்? இது என்ன உங்கள் இரண்டு பேருக்குமிடையே நடைபெறும் விவாதமா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அமைச்சர் சொல்வதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை நீங்கள் எதற்காகச் சொல்ல வேண்டும்? நீங்கள் ஒன்றும் சொல்ல வேண்டியதில்லை. நீங்கள் சொன்னதற்கு அமைச்சர் பதில் சொல்லி விட்டார். நீங்கள் இரண்டு பேரும் மாற்றி மாற்றிப் பதில் சொல்வதற்கு இங்கே நான் சட்டப் பேரவை நடத்த முடியாது. அவர் சொன்னதிலே உண்மையில்லை என்று வேண்டுமானால் ஒரு வார்த்தை சொல்ல அனுமதிப்பேனேயொழிய, நீங்கள் இங்கே உரை நிகழ்த்துவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது.

முற்பகல் 11-10

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் உண்மைக்கு மாறான தகவல்களையெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். நான் இந்த மாமன்றத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்னும் சவாலாகக்கூடச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்கள் கட்சியைச் சார்ந்த தொழிற்சங்கத் தலைவர், 'எல்லோரும் வேலைக்குப் போக வேண்டும்' என்று எழுதிக் கொடுத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் படித்திருக்கின்றார்கள். அது உண்டா, இல்லையா என்பதை மட்டும் சொல்லுங்கள்.

[1998 நவம்பர் 27

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நான் என்னுடைய கருத்தை மட்டும்தான் சொல்ல முடியும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள் முதலிலே, நான் எழுந்து நிற்கின்றேன்; நீங்கள் உட்காருங்கள்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி தொடர்ந்து நின்றுகொண்டே பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி இப்போது உட்காரவில்லையென்றால் அவையைவிட்டு வெளியேற்றுவேன்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி தொடர்ந்து நின்றுகொண்டே பேசிக்கொண்டிருந்தார்.)

மாண்புமிகு கிருஷ்ணசாமி அவர்களை அவையைவிட்டு வெளியேற்றுகிறேன்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி அவருடைய இருக்கைக்குக் கீழுள்ள தரையில் அமர்ந்துகொண்டார்.)

இந்த நாடகத்தை இங்கே நடத்துவதற்கு நான் அனுமதி கொடுக்க முடியாது.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

## (ஆ) காட்பாடி வெடிமருந்துத் தொழிற்சாலை தயாரிக்கும் வெடி பொருட்கள் வினியோகத்தைக் கண்காணித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாட்டின் நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். காட்பாடியில் வெடிமருந்து தொழிற்சாலை இருக்கிறது. இப்பொழுது தமிழ்நாட்டிலே வெடிகுண்டு பதட்டம் இருக்கிறது. ஆகவே தீவிரமாக அந்த வெடிமருந்து தொழிற்சாலையைக் கண்காணிக்கவும் சமூகவிரோதிகள் அந்த வெடிமருந்து தொழிற்சாலையைத் தவறாகப் பயன்படுத்தாமல் இருக்கவும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே Vigilance அதிகாரியும், Security Guard-ம் ஒரு வருடமாக இல்லை. (குறுக்கீடு)



1998 நவம்பர் 27]

## (அ) மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்கள் பிரச்சினை குறித்து விளக்கம்—தொடர்ச்சி.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவையினுள் நுழைந்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உள்ளே வரக்கூடாது. டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்றுங்கள்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவைத் தலைவர் இருக்கைக்கு வலப்புறம் செயலாளர் இருக்கைக்கு அருகில் தரையில் அமர்ந்துகொண்டு பேசினார்.)

நீங்கள் யாரிடம் கேட்டாலும், என் அனுமதி இல்லாமல் உள்ளே வரக்கூடாது. டாக்டர் கிருஷ்ணசாமியை வெளியேற்றுங்கள்.

(டாக்டர் க. கிருஷ்ணசாமி பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டார்.)

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் குளிர்காலக் கூட்டத் தொடர் நாளையதினம் நிறைவுறுகிற நேரத்தில் ஏதாவது Stunt – நாடகக் காட்சியை – நடத்திக்காட்ட வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணசாமி விரும்பி, எண்ணி அதை இங்கே செயல்படுத்த முனைகிறார். இதற்கான விளம்பரங்களை ஏடுகள் அல்லது மற்றவர்கள் தராமல் இருந்தால்தான் இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் தமிழகத்திலே எல்லாக் கட்சிகளும், கட்டிக் காப்பாற்ற வேண்டும் என்று எண்ணுகின்ற மரபுகளைப் பேணிப் பாதுகாக்க முடியும் என்பதை ஏடுகளுக்கும், மற்ற கட்சிகளினுடைய தலைவர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். பணிவன்போடு இந்த வேண்டுகோளையும் விடுக்கின்றேன்.

அடுத்ததாக, மாஞ்சோலை எஸ்டேட்டிலே கொத்தடிமை முறை இருப்பதாகச் சொல்கிறார். அந்த மாஞ்சோலை எஸ்டேட் ஏறத்தாழ 70 ஆண்டுகாலத்திற்கு மேலாக வெள்ளைக்காரர் ஆட்சியில், காங்கிரஸ் கட்சி ஆட்சியில் மற்றும் தொடர்ந்து நடைபெற்று வருகிற ஆட்சிகளில் எல்லாம் இருந்து வருகின்றது. அந்த மாஞ்சோலை எஸ்டேட் தொழிலாளர்களுடைய நிலை அனைவருக்கும் நன்றாகத் தெரியும். பல யூனியன்கள் — தொழிலாளர் யூனியங்கள் — அங்கே

இருக்கின்றன. சட்டரீதியான தங்களுடைய கோரிக்கைகளுக்கு சட்டபூர்வமான அளவிலே போராட்டங்களை அறவழியில் நடத்துகின்ற பல யூனியன்கள் அங்கே இருக்கின்றன. அன்றைக்கு நான் அதைக் குறிப்பிட்டுச் சொன்னபோதுகூட, அவர் என்னைத் தனியாகத் தங்களுடைய அறையிலே சந்தித்தபோது, எங்கே யூனியன் இருக்கிறது, எந்த யூனியனும் இல்லை என்று என்னிடத்திலே சொன்னார். ஆனால், அங்கே பல யூனியன்கள் இருக்கின்றன. அந்த யூனியன்கள் சார்பாகத்தான் D.M.K., A.D.M.K., I.N.T.U.C, மற்றும் C.I.T.U. போன்ற அந்தக் கட்சிகளின் தலைவர்கள், அந்த யூனியன்களின் தலைவர்கள் எல்லாம்கூட கொத்தடிமை முறை மாஞ்சோலைப் பகுதியிலே இல்லை, அது தவறான செய்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்கள், இருந்தும்கூட அங்கே கிருஷ்ணசாமி அவர்கள் வலியச் சென்று, அங்குள்ளவர்களிடம் ரூபாய் 57.17 பைசா ஒரு நாள் சம்பளம் பெறுகின்றவர்களுக்கு 150 ரூபாய் வாங்கித் தருகிறேன் என்று கூறியிருக்கின்றார். ரூ. 50.17 என்பது ரூ. 150 ஆக இவரால் உயரும் என்று எதிர்பார்க்கிற காரணத்தால், சிலபேரை அவரால் அங்கே திரட்ட முடிந்திருக்கின்றது.

முற்பகல் 11-15

எப்படியும், வருகிற இரண்டொரு மாதங்களுக்குள் அங்கே இந்தச் சம்பளப் பிரச்சினைக்காக அவர்கள் கூடிப் பேசி ஒரு முடிவு எடுக்க இருக்கின்றார்கள், நியதிப்படி, முறைப்படி, விதிப்படி. அப்படி இருக்கும்போது, 'பனம்பழம் விழப் போவதைத் தெரிந்து, அதிலேபோய் காக்கை உட்காருவதைப் போல, அவர், தன்னால்தான் இந்தப் பனம்பழம் விழுந்தது என்பதைக் காட்டி, அங்குள்ள தொழிலாளிகளை ஏமாளிகளாக ஆக்கி, தான் விளம்பரம் பெறக் கருதுகின்றார் என்பதுதான் அப்பட்டமான உண்மையாகும். இவருடைய கூற்றை ஏற்காமல் வேலைக்குச் சென்றவர்கள் மிரட்டப்பட்டது மாத்திரம் அல்ல; கொலை செய்யப்பட்டிருக்கின்றார்கள். அந்தக் கொலைக்குத் தூண்டுதலாக இருந்தவர்களிலே இவரும் ஒருவர் என்று கொலையுண்டவருடைய துணைவியாரே புகார் கொடுத்திருக்கிறார். அது பதிவு செய்யப்பட்டு, விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த விசாரணை முடிவடையும் தருவாயிலும் இருக்கின்றது.

இந்தச் சூழ்நிலையிலே, விசாரணையிலேயிருந்து தப்பவோ அல்லது தான் நிரபராதி என்பதை எடுத்துக்காட்டுவதற்காகவோ நாடகம் ஆடுவதை இந்த அவை ஏற்றுக்கொள்ளாது என்று நான் திடமாக நம்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). இந்த அவையிலேயுள்ள



கிருஷ்ணசாமியைத் தவிர, அனைத்து உறுப்பினர்களும் கட்சி வேறுபாடுகளைக் கடந்து கிருஷ்ணசாமியினுடைய போக்கை ஆதரிக்கவில்லை என்பதை நான் மிக நன்றாக அறிவேன். திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு எதிராக வெளியிலேயுள்ள கட்சிகள்கூட அவருடைய போக்கை நிச்சயமாக ஏற்றுக்கொள்ளாது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். இப்படிப்பட்ட சக்திகளை வளர விடுவது தமிழகத்திற்கே தீதானது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாம் அனைவரும் உணர்ந்திருக்கிறோம் என்பதை எடுத்துக்காட்டி, இந்த அளவில் என்னுடைய விளக்கத்தை நிறைவு செய்கின்றேன்.

**(ஆ) காட்பாடி வெடிமருந்து தொழிற்சாலை தயாரிக்கும் வெடி பொருட்கள் வினியோகத்தைக் கண்காணித்தல்**—தொடர்ச்சி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காட்பாடி வெடி மருந்து தொழிற்சாலையில், நாட்டின் நலன் கருதி அங்கு தயாரிக்கப்படுகிற வெடிபொருட்கள் விநியோகத்தைத் கண்காணிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டில் வெடிகுண்டு பதற்றம் இருக்கிறது. தீவிரவாதிகள், சமூக விரோதிகள் அதைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக ஏற்கெனவே சட்டசபையில் பேசியிருக்கின்றேன், இரண்டு தடவை பேசியிருக்கின்றேன். ஆகவே, தொழிற்சாலையைக் கண்காணிக்க ஒரு Vigilance அதிகாரியாக, ஒரு I.P.S. அதிகாரியைப் போட வேண்டும். மேலும் Security Guard அங்கே ஒரு வருடமாக இல்லாமல் இருக்கிறது. Security Guard-ம் போட வேண்டும். ஏற்கெனவே, E.B. மற்றும் Service Commission எல்லாம் I.P.S. அதிகாரிகளை Vigilance அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். அதனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதில் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

முக்கியமான பிரச்சினை. முதலமைச்சர் மவுனமாக இருக்கிறார். ஏதேதோ பிரச்சினைகளுக்கெல்லாம் பதில் சொல்கிறார்கள். (பலத்த சிரிப்பு) தலைவர் அவர்களே காட்பாடியிலே ஒரு வெடிமருந்து தொழிற்சாலை இருக்கிறது. தமிழ்நாட்டில் வெடிகுண்டு பற்றிய ஒரு

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 நவம்பர் 27

பதற்றமான நிலைமை இருக்கிறது. தீவிரவாதிகள், சமூக விரோதிகள் அதைத் தவறாகப் பயன்படுத்தக் கூடாது என்பதற்காக ஒரு I.P.S. அதிகாரியை Vigilance அதிகாரியாகப் போட வேண்டும். மேலும், செக்யூரிட்டி கார்டு ஒரு வருடமாக இல்லை. போட வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். முன்னுதாரணமாக எலக்ட்ரிசிட்டி போர்டு, இன்னும் சர்வீஸ் கமிஷனில் எல்லாம் I.P.S. அதிகாரிகளை Vigilance அதிகாரிகளாகப் போட்டிருக்கிறார்கள். நாட்டின் நலன் கருதிச் சொல்கிறேன். உங்கள் மேலே நம்பிக்கை வைத்துச் சொல்கிறேன். நீங்கள் ஏதாவது ஒன்றைச் செய்யுங்கள். (பலத்த சிரிப்பு)

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, தாமரைக்கனி என் மீது நம்பிக்கை வைத்ததற்காக (பலத்த சிரிப்பு)......

**திரு. இரா. தாமரைக்கனி:** என்ன தலைவரே, சந்தேகப்படுகிற மாதிரிச் சொல்கிறார்களே?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** நான் பேசி முடித்து விடுகிறேன். என் மீது நம்பிக்கை வைத்ததற்காக யாருடைய நம்பிக்கையை இழக்கப் போகிறாரோ (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) நான் அறியேன். இருந்தாலும்கூட, நாட்டின் நலன் கருதி அவர் இங்கே முன்னறிவிப்பாக, நாம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்பதை எடுத்துக் கூறியிருக்கிறார். ஆனால், அவர் இந்தக் கருத்தை இங்கே எழுப்பப் போகிறார் என்பது எனக்குத் தெரியாது. எனக்கு அறிவிக்கப்படவில்லை. இதுபற்றி நான் விசாரித்து நாளைக்கு விளக்கம் அளிக்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் 144 முதல் 153 வரையிலான 10 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



1998 நவம்பர் 27]

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. ஆ. நடராசன்.

முற்பகல் 11-20

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 1998-99 ஆம் ஆண்டிற்கான பொது 'நிறுவனங்கள் குழுவின் எழுபது முதல் எழுபத்திரண்டு வரையிலான அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல் 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஆறாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஏழாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (இ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (இ) சட்டமுன்வடிவுகளை அறிமுகம் செய்வதற்கு விதிப்படி ஐந்து நாட்கள் முன்னறிவிப்புக் கொடுக்க வலியுறுத்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர், சொல்லுங்கள்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிக முக்கியமானதாகக் கருதப்படும் தமிழ்நாடு தொழில் வரி தொடர்பான இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகப்படுத்துவதை வரவேற்கின்றோம். ஆனால், அறிமுகப்படுத்தும் விதத்தில் எங்களுடைய ஆட்சேபணையைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். Tamil Nadu Legislative Assembly Rules-ல் 123ஆவது பிரிவில் என்ன இருக்கிறதென்றால், ``Any Member who desires, to move for leave to introduce a Bill, shall give five days notice" என்று இருக்கின்றது. ஆனால், நாளையோடு முடிவிற்கு வரக்கூடிய இந்தக் கூட்டத்தொடரிலே

மாண்புமிகு அமைச்சர்களை மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

## 7. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்கு முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலை ஒழுங்குமுறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் . . . .

**திரு. டி. மணி:** தலைவரவர்களே,.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி, சொல்லுங்கள்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அணி திரட்டப்படாத தொழிலாளர் வாரியம் சம்பந்தமாக அரசினுடைய கொள்கையை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், தொழிலாளி தன்னுடைய பங்குக்குச் செலுத்துகின்ற 20 ரூபாய் என்பது சற்று அதிகம். அதேநேரத்தில் அரசினுடைய பங்கு எவ்வளவு என்றும், அதனால் சேர்க்கப்படுகின்ற....





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது இப்பொழுதுதான் Introduction ஆகிறது. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவரவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/1998) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

முற்பகல் 11-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

இன்று இந்தச் சட்டமுன்வடிவை அறிமுகம் செய்து நாளை நிறைவேற்றுவதாக இருப்பது சட்டவிதிமுறைகளுக்கு முரணானது. இருந்தபோதிலும்கூட, மாண்புமிகு சபாநாயகர் அவர்களுக்கு விதி 164-ன்கீழ் இதற்கு விலக்கு அளிக்கக்கூடிய அதிகாரமும் கொடுக்கப்பட்டிருக்கின்றது. இருந்தபோதிலும், விலக்கு அளிக்கக்கூடிய அதிகாரம் இருக்கின்றது, விலக்கு அளித்துவிடலாம் என்ற நிலையை மேற்கொள்ளாமல், மிக முக்கியமான சட்டமுன்வடிவுகளை அதற்காக நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு முன்பாகக் கொடுக்கச் செய்தால் அந்தச் சட்டமுன்வடிவுகளைப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அதைப் படித்து தங்களுடைய கருத்தைத் தெரிவிக்க அது ஏதுவாக இருக்கும். ஆகவே, இது ஒரு point of privilege என்ற அளவில் அவையினுடைய உரிமையை, அவையின் அங்கத்தினர்களுடைய உரிமையை மறுப்பதாக, புறக்கணிப்பதாக இந்த உதாரணங்கள் அமைந்துவிடும். கடந்த கூட்டத்தொடரின்போதே உரிய நாட்களுக்கு முன்பாக Notice வழங்கப்பட வேண்டும் என்று எடுத்துரைத்த பின்னரும்கூட இன்னமும் அதேபோல் தொடர்ந்து வருகின்றது. இந்த அவையினுடைய உரிமையைக் காப்பாற்றக்கூடிய ஒரு பெரும் பொறுப்பு தங்களுக்கு இருக்கின்றது. தாங்கள் சிறப்பாகச் செயலாற்றி வருகிறீர்கள் என்ற நம்பிக்கையில் நான் இதை உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகின்றேன்.

மேலும், கடந்த ஆட்சிக் காலத்திலெல்லாம் எந்தவிதமான பிரச்சினை அரசிற்கு எதிராக இருக்குமோ, அதையெல்லாம் எழுப்பவிடாமல் செய்த காலம் உண்டு. ஆனால், இன்று குமாரபாளையத்திலே ஒரு நோயாளி மறைந்த சம்பவம் அரசிற்கு ஒரு அவப்பெயரை, களங்கத்தை ஏற்படுத்தக்கூடியதாக இருந்தபோதிலும்கூட, அதை ஜனநாயக ரீதியாக இங்கே வாதிடச் செய்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு பதில் சொல்லி, நடவடிக்கை எடுத்த விஷயத்தையெல்லாம், முழுக்க முழுக்க நூற்றுக்குநூறு ஜனநாயக ரீதியாக இந்த அவை நடக்கின்றது என்பதை எடுத்துக்காட்டக்கூடிய உணர்வாக இருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியிருககும்பொழுது முக்கியமான சட்ட முன்வடிவுகளை அசுர கதியில், அவசர கதியில் கொண்டுவந்து நிறைவேற்றக்கூடிய இந்த முறைகளை நீங்கள் மாற்றியமைக்க வேண்டுமென்ற அந்த ஒரு நல்ல நோக்கத்தோடு கூறுவதை, இனிமேல் வரக்கூடிய காலங்களிலேயாவது இந்த அரசுக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற முதல்வரவர்களும், இந்த அவையைக் கட்டிக் காத்து வருகின்ற சபாநாயகராகிய தாங்களும், இந்த முறை கண்டிப்பாகக்





கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் சொல்ல வேண்டும். முக்கியம் இல்லாத ஏதாவது சட்டத் திருத்தங்கள், ஏதாவது அச்சுப்பிழை இருக்கின்றது, திருத்த வேண்டும்; ஏதாவது ஒரு வார்த்தை விட்டுவிட்டது, திருத்த வேண்டும் என்ற சட்டமுன்வடிவுகள் ஒரு நாள், இரண்டு நாள் Notice கொடுத்து கொண்டு வந்தால் பரவாயில்லை. ஆனால், இதுபோன்ற முக்கியமான சட்டமுன்வடிவுகளை உரிய காலத்திற்குள் Notice கொடுத்து அதை இங்கே ஜனநாயக ரீதியாக விவாதம் நடக்க நல்ல சூழ்நிலையை நீங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

*முற்பகல் 11-25*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,......*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் ஏன் சொல்கிறீர்கள்? நான் தீர்ப்பைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் சொன்னது முழுக்கச் சரிதான். இருந்தாலும் அவரே சுட்டிக்காட்டியதைப்போல,* Rule 164 of the Tamil Nadu Assembly Rules, states.--

"The Speaker may, in his discretion, dispense with the provision of this chapter regarding notice, periods of notice or interval between any two stages of legislation, and may, in his discretion, allow any motion regarding a Bill or any amendment to be moved without notice, or after such shorter interval, as he may think fit". *இந்த விதியின் கீழேதான் இப்பொழுது இந்தச் சட்டமுன்வடிவுகளெல்லாம் இந்தப் பேரவையிலே வைக்கப்படுகின்றன. ஆனால், திரு. சொக்கர் சொல்வதை நான் ஒரு வகையிலே ஏற்றுக்கொள்கின்றேன். இந்தக் கூட்டத் தொடர் சட்ட முன்வடிவுகளுக்காக நடத்தப்படுகின்ற கூட்டத் தொடர் என்று மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்குத் தெரியும். ஆனால், மாண்புமிகு முதலமைச்சரவர்கள்தான் அன்றாடம் என்னுடைய அலுவலகத்திலே என்னைத் தொடர்புகொண்டு எத்தனைச் சட்டமுன்வடிவுகள் வந்திருக்கின்றன என்று கேட்டுக்கொண்டிருந்தாரேயொழிய, வேறு யாரும் கேட்கவில்லை. நம்முடைய அமைச்சர் பெருமக்கள் இதிலே கொஞ்சம் அக்கறை செலுத்தி, இந்த ஐந்து நாள் விதியை மீறாமல் பார்த்துக் கொள்வது அவர்களுக்கு உரிய கடமை என்பதை எடுத்துச் சொல்லி, இனிமேல் இப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று*

[திரு. ஆலடி அருணா] [1998 நவம்பர் 27

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுபபோர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

. பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 மற்றும் இணைப்புப் பட்டியல், சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 4) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 60/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.



1998 நவம்பர் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 9. அறிவிப்பு

### தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998 (ஆ.செ.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி.

### (ஆ) தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[திரு. ஆலடி அருணா] [1998 நவம்பர் 27

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு 5**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தம் திருத்தத்தினை முன்மொழியலாம்.

**Thiru B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I move the following amendment to Section 5:

"1. In Clause 5, in sub-clause (1) *for* the expressions 'eight hundered and seventy five rupees' *substitute* the expressions 'one thousand rupees'."

---

@ 23-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பட்டுள்ளது.



1998 நவம்பர் 27] [Thiru B. Venkatasamy]

2. In Clause 5, in sub-clause (3) *for* the expressions 'one lakh rupees', *substitute* the expressions 'two lakh rupees'."

Regarding my amendment to Clause-5, I would like to say that in the Bill the Postal allowance and the Constituency allowance of the Members of the Legislative Assembly has been enhanced from Rs. 625 to Rs. 875. Instead of that, we can give Rs. 1000. This is my amendment. So, I request the Hon. Minister to accept this.

**திரு. ஆர். சொக்கர்:** I am standing on a point of Order.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதிலே point of Order? என்ன point of order.

**திரு. ஆர். சொக்கர்:** சாதாரணமாக, திருத்தங்களை ஓர் உறுப்பினர் முன்மொழிந்து மற்றோர் உறுப்பினர் அதை வழிமொழிந்த பின்னர்தான் அந்தத் திருத்தத்தினைப்பற்றிப் பேச வேண்டுமென்ற ஒரு நியதியைப் பணிவன்போடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** திருத்தத்தினை நான் வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சட்டுப்படி, தொலைபேசிப்படி, தொகுதிப்படி மற்றும் அஞ்சல்படி ஆகிய இவையெல்லாம் உயர்த்துவது பற்றி கடந்த நிதிநிலை அறிக்கைக் கூட்டத் தொடரின் விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெளிவாக விளக்கி, சிறப்பான முறையிலே பதிலை அளித்திருக்கிறார்கள். ஒவ்வோர் ஆண்டும் இந்தப் படிகள் எல்லாம் உயர்த்தப்படுகின்றன. 1995 ஆம் ஆண்டு ஒரு சட்டமன்ற உறுப்பினரின் மொத்தச் சம்பளம் ரூ. 4,450. அது 1996-ல் 6 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. பிறகு 1997-ல் 8 ஆயிரமாக உயர்த்தப்பட்டது. இப்போது எல்லாவற்றையும் சேர்ந்து 9 ஆயிரமாக இருக்கிறது. இதுவே இறுதிக் கட்டமல்ல. இன்னும் உயர்த்துவதற்கு வாய்ப்பு, அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில் அரசு பரிசீலிக்கலாம். எனவே. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய திருத்தத்தைத் திரும்பப்பெற வேண்டுமென்று அன்போடு வேண்டிக்கொள்கிறேன்.

[1998 நவம்பர் 27

முற்பகல் 11-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினருடைய திருத்தம் வலியுறுத்தப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, as the Hon. Minister has assured that he will enhance it in the coming Budget, I withdraw my amendment.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 5, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**பிரிவு - 6**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 6, திரு. பி. வெங்கடசாமி அவர்கள் தம் திருத்தத்தினை முன்மொழியலாம்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I move the cut motion....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அது cut motion அல்ல. அது திருத்தம்.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I move the following amendment to section 6:

"In Cause-6, in sub-clause (1), *for* the expressions `three thousand rupees' *substitute* the expressions `five thousand rupees'."

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் திருத்தத்தை வழிமொழிகிறேன்.



1998 நவம்பர் 27]

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, regarding my amendment I would like to say that after the expiry of any M.L.A. the family will have to survive. So, I think Rupees one lakh is not at all sufficient for the lady member who is alone. Now a days even the sons do not take care of their mother or father. So at least if you give Rs. 2 lakhs they will have a decent living. So, I request the Hon. Minister to consider this.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ரூ. 50 ஆயிரம் என்று இருப்பதை ஒரு இலட்சமாக உயர்த்த இருக்கிறோம். அதை ரூ. 2 இலட்சமாக உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். ரூ. 2 இலட்சமாக இருந்தால், அதை ரூ. 3 இலட்சமாக உயர்த்த வேண்டுமென்று கேட்பார்கள். மனம் என்பது ஒரு அமைதி பெறாத பறவை; அது பறந்து கொண்டேதான் இருக்கும். என்றாலும், அவர் கேட்பதிலே தவறு இருப்பதாக நான் கருதவில்லை. என்றாலும், இதுபற்றி இப்போது பரிசீலிக்க முடியாது. இந்த ஒரு இலட்சம் என்பதே ஏற்கெனவே பேசி, இந்த மாமன்றத்தில் விவாதித்து முடிவு செய்யப்பட்டதாகும். அதை ஏற்கும்படி மாண்புமிகு உறுப்பினர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்குப் பிறகு, உறுப்பினருடைய திருத்தம் வலியுறுத்தப்படுகின்றதா என அறிய விரும்புகிறேன். திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** I am not pressing my amendment.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

பிரிவு 6, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் துணைத் தலைவர்] [1998 நவம்பர் 27

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.



1998 நவம்பர் 27]

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1998) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"
எனக்கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முற்பகல் 11-40

**பிரிவு-1**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பிரிவு 1. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சொக்கர், திரு. கே. ரவி அருணன் ஆகியோரில் ஒருவர் தம் திருத்தத்தை முன்மொழியலாம்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை முன்மொழிகிறேன்.

---

**@24-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழ் வெளியிடப் பட்டுள்ளது.**

[திரு. ஆர். சொக்கர்] [1998 நவம்பர் 27

"In Clause I, in item (a) of sub-clause (2) *for* the expressions '28th day of August 1998', *substitute* the expression '17th day of July 199'."

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மேற்கண்ட திருத்தத்தை வழிமொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, புதிதாக ஏற்றுக்கொண்ட கொள்கையின்படி அது கையினால் ஆன செங்கல் ஓடாக இருந்தாலும் சரி, இயந்திரத்தினால் ஆன செங்கல் ஓடாக இருந்தாலும் சரி, அவற்றுக்கெல்லாம் 4 சதவீதம் வரி என்று ஏற்றிருக்கிறோம். ஆனால் கடந்த காலத்தில் கையினால் ஆன செங்கல் ஓடுகளுக்கு 4 சதவீதம் என்றும் பிறகு 8 சதவீதம் என்று இருந்தது. இப்பொழுது புதிய கொள்கையில் ஒரே சீராக அதை வைத்திருக்கிறோம். இனி அந்தக் கொள்கையைத்தான் அரசு பின்பற்றும். என்றாலும் கடந்த காலத்தில் அளிக்கப்பட்ட விளக்கத்தின் காரணமாக சில சிக்கல்கள் இருக்கின்றன. 8 சதவீதம் வரி இயந்திரத்தினால் ஆன ஓடு, செங்கல் இவற்றிற்கு வசூலிக்க வேண்டுமென்ற நிலை இருக்கிறது. நம்முடைய உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் முன்தேதியிட்டு அதற்கு அமலாக்கம் கொடுக்கலாம் என்று சொன்னார். எனவே அது தொடர்பாக திருத்தம் தேவையில்லை. ஏனென்றால், நம்முடைய பொது விற்பனை வரிச் சட்டத்தின் 17-வது பிரிவிலே அரசுக்கு அதிகாரம் இருக்கிறது. "The Government may, by notification (issued whether prospectively or retrospectively) make an exemption, or reduction in rate, in respect of any tax payable under this Act—

(i) on the sale or purchase of any specified goods or class of goods, at all points or at a specified point or points in the series of sales by successive dealers;" என்று சொல்லப்பட்டிருக்கிறது. எனவே திருத்தத்தினுடைய அம்சங்களை அரசு ஏற்று ஆணை ஒன்றைப் பிறப்பிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர். சொக்கர்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இப்படிச் சொல்வதற்கு மன்னிக்கவும். அமைச்சருக்குத் தவறான விளக்கம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.



1998 நவம்பர் 27] [திரு. ஆர். சொக்கர்]

17-7-1996 ஆம் நாளன்று திருத்தியமைக்கப்பட்ட Schedule-ல் Schedule 1, Part-B-ல், பிரிவு 9, உட்பிரிவு 4, என்பதன்கீழ் "Country bricks and country tiles made of baked clay and stoneware" என்று இருக்கிறது.

அதற்குப் பிறகு ஆணையாளர் 17-10-1996 ஆம் நாளன்று அளித்த விளக்கத்தில் கூரை ஓடுகள், முகட்டு ஓடுகள், தரை ஓடுகள் முதலியன சுட்ட களிமண்ணாலும், கற்களாலும் தயாரிக்கப்பட்டு இருப்பின், அவை முதலாம் அட்டவணைப் பகுதி-B வரிசை எண் 9(IV), அதன்படி 4 சதவீதம் வரி உண்டு என்று கூறப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகும் ஆணையாளர் அவர்கள் அளித்த Clarification-ல் நாள் 3-2-1997-ல், நாட்டு செங்கல், நாட்டு ஓடுகள் சுட்ட களிமண்ணாலும், கற்களாலும் (இயந்திரத்தின் மூலம் அல்லது ஆட்கள் வைத்து) தயாரிக்கப்பட்டிருப்பின் அதற்கு 4 சதவீதம் வரி உண்டு என்று கூறப்பட்டு இருக்கிறது. ஆனால் 8-1-1998 ஆம் நாளன்று ஆணையாளர் அளித்த விளக்கத்தில்,

"Country tiles and country bricks or those bricks and tiles made without the aid of power by poor village artisans" என்றும், அதற்கு அடுத்த பத்தியில், "hence, roofing tiles and flooring tiles made of clay purchased from outside the State or manufactured within the State are taxable at 8 per cent" என்றும் கூறப்பட்டிருக்கிறது. அதனால்தான் இந்தக் குழப்பமே ஆரம்பம். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடர் நடந்தபொழுதே, இதே பிரச்சினை எழுப்பப்பட்டபோதே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நான் கூறுவதைப் போல் இருக்குமேயானால் அது சரிசெய்யப்படும் என்றும் சொன்னார். இப்பொழுது நாம் அதை இங்கே சட்டமாகக் கொண்டுவராமல், ஆணையாளரே என்னுடைய வேண்டுகோளை ஏற்று ஒரு clarification கொடுத்திருக்க முடியும், சட்டத்தில் சரி செய்திருக்க முடியும். ஆனால் சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

முற்பகல் 11-45

சட்டத் திருத்தம் என்று கொண்டு வந்துவிட்டால், இந்தச் சட்டத் திருத்தத்தை மீறி ஒரு விளக்கத்தைக் கொடுப்பதற்கு ஆணையருக்கு அதிகாரம் கிடையாது என்பதே என்னுடைய கருத்து. ஏனென்றால், delegated Legislation can neither supersede the Act passed in the Legislative Assembly, nor the clarification issued by the Officers

go beyond the scope of the Act passed in our House. ஆகவே, சட்டத்தை இந்தத் தேதியிலிருந்துதான் அமல்படுத்தவேண்டும் என்று நாம் போட்டுவிட்டு, 17(1)-ன்கீழ் retrospective ஆகக் கொடுக்கவேண்டும் என்று சொல்வது, அடிப்படைச் சட்ட விதிகளுக்கு முரணானதாக இருக்கும். ஆகவேதான், இப்பொழுது நாம் சட்டத்தை நிறைவேற்றும்போதே, 17-7-1996-லிருந்து இந்தச் சட்டம் அமலுக்கு வரும் என்று போட்டுவிடுவதுதான் முறையாக இருக்குமென்ற கருத்தை நான் வலியுறுத்திக் கூறுகிறேன். அப்படி முடியவில்லை என்றால், கண்டிப்பாக 17(1)-ல் அவர்கள் clarification கேட்கமுடியாது. அப்படிக் கேட்டுக் கொடுத்தால், it will be declared null and void. Audit objection வரும். நீதிமன்றத்துக்குப் போனால் நிற்காது. மீண்டும் ஒருமுறை இந்தச் சட்டத்தை இங்கே அறிமுகப்படுத்தி, சட்டத்தில் திருத்தத்தைக் கொண்டுவருகிற ஒரு சூழ்நிலைக்கு நாம் தள்ளப்படுவோம். ஆகவே அருள்கூர்ந்து — நியாயம் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய நீங்கள்— இப்போது அந்தத் திருத்தத்தைச் செய்து, 17-7-1996-லிருந்தே இது அமலுக்கு வரவேண்டுமென்ற திருத்தத்தை ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விற்பனை வரித் துறையினுடைய ஆணையரால் 17-10-1996 மற்றும் 3-2-1997 ஆகிய இரண்டு தேதிகளில் அளிக்கப்பட்ட விளக்கம் உண்மையிலேயே விற்பனை வரிச் சட்டத்திற்கு முரணானது, சரியானதல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். 8-1-1998-ல் அவர் சொன்ன விளக்கம்தான் சரியான விளக்கம் என்பதை இந்த அவைக்கு நான் வற்புறுத்தித் தெரிவிக்க வேண்டியது என்னுடைய கடமையாகும். ஏனென்றால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, 4 சதவீதம் வரி என்பது எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்றால், "Country bricks and country tiles made of baked clay and stoneware", என்றுதான் சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, இயந்திரத்தால் செய்யப்படுவதைப் பற்றிச் சொல்லப்படவேயில்லை. திட்டவட்டமாகச் சொல்லப பட்டிருக்கிறது. அப்படியானால், இயந்திரத்தினால் செய்யப்படுகின்ற ஓடு அல்லது செங்கல் இவற்றிற்கு என்ன என்பதைப் பற்றிச் சொல்லும்போது, அதையும் விதி அழகாகச் சொல்கிறது. அதாவது, சில ஓடுகளைத் தயாரிக்கும்போது. "Cement flooring stones, slabs, all kinds of tiles other than those specified elsewhere in the Schedule" திட்டவட்டமாக "Other than all kinds of tiles" என்று





சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது இயந்திரத்தால் செய்யப்படுகின்ற ஓடுகளுக்கு 8 சதவீதம் வரி என்று அதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இதைச் சரியாகப் புரிந்துகொள்ளாமல். அந்த ஆணையர் தவறாக விளக்கம் அளித்திருக்கிறார். அதைச் சில வணிகப் பெருமக்கள் பிடித்துக்கொண்டார்கள். என்றாலும் அவர் வசூலிக்கவேண்டாம் என்று சொன்னதனால், நீங்கள் வசூலிக்கவில்லை. எனவே உங்களிடத்தில் வரி கேட்பதும் எங்களுக்கு நியாயம் இல்லை. என்றாலும். 1998-லே சரியான விளக்கம் சொல்லப்பட்டுவிட்டது. ஆனால் இப்போது நாம் கொண்டுவருகிற திருத்தத்தில் அந்தக் குழப்பம், அந்த ஐயம் இருக்கக்கூடாது என்பதற்காக, "Country bricks and country tiles made of baked clay, whether machine made or hand made (other than those falling elsewhere under the Schedules) and stoneware" என்று இப்போது தெளிவாக்கப்பட்டுவிட்டது. இதுதான் அமலுக்கு வருகிறது. நீங்கள் சொல்வதுபோலத்தான் அமலுக்கு வந்துள்ளது. எனவே அது சேர்க்கப்பட்டுவிட்டது. இப்போது உங்களுடைய கேள்வி என்னவென்றால், கடந்த காலம் குறித்து என்ன என்பதுதான். அந்தப் பிரச்சினைக்கு கடந்த காலத்தில் அளிக்கப்பட்ட விளக்கம் தவறானது. ஆனால் 1-8-1998-ல் தான் ஒழுங்கான விளக்கம் அளிக்கப்பட்டது. எனவேதான், நீங்களும் அந்த வரியை வசூலிக்கவில்லை. அந்தப் பணத்தை வசூலிப்பதை நீங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஒத்துக்கொள்ளவில்லை. எனவே. the Government has power to reduce the tax and give exemption from the tax. That has been conferred under Section 17.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல், ஆணையருடைய விளக்கமே 17-7-1996-லிருந்து அமலுக்கு வரும் என்றால் எங்களுக்கு அது திருப்திதான். ஆகவே அமைச்சர் சொன்ன உறுதிமொழியை ஏற்று நான் அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** திரு சொக்கர் அவர்களுக்குத் தேவையானது வரி வசூலிக்கக்கூடாது என்பது. நாங்கள் வரி வசூலிக்கமாட்டோம் என்று சொல்லிவிட்டோம். அதிலே ஒன்றும் பிரச்சினையே இல்லை. இப்போது இருக்கிற திருத்தம் 4 சதவீதம் பற்றித்தான். அது திருத்தத்தில் தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகும், திரு. சொக்கர் அவர்கள் தம் கருத்தை வலியுறுத்துகிறாரா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-50

**திரு. ஆர். சொக்கர்:** இதை மீண்டும் ஒரு விவாதத்தின்கீழ் கொண்டு செல்ல நான் விரும்பவில்லை. ஆனால் இந்தத் திருத்தம் 17-7-1996-லிருந்தே அமலுக்கு வரும் என்று சொல்லிவிட்டால் பிரச்சினை கிடையாது. ஆகவே அருள்கூர்ந்து மறுபடியும் இதை அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து 17-7-1996-லிருந்து திருத்தம் வரும் என்று சொல்வதில் எந்தவிதமான பாதகமும் இல்லை. நீங்கள் ஏற்றுக்கொள்வதை ஏன் திருத்தமாக ஏற்றுக்கொள்ள மாட்டேன் என்று சொல்கிறீர்கள் என்றுதான் எனக்குப் புரியவில்லை. நீங்கள் ஆகஸ்ட் மாதம், 1998-லிருந்து அமலுக்கு வரும் என்று போட்டிருக்கிறீர்கள். ஆனால், நடைமுறையில் 17-7-1996-லிருந்து இது அமல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். 17-7-1996-லிருந்து அமலுக்கு வரும் என்று சொல்வதுதான் சரியாக இருக்கும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் தெளிவாகப் பேசியிருக்கிறீர்கள். அமைச்சரும் பதில் சொல்லியிருக்கிறார். திருத்தத்தை வலியுறுத்துகின்றீர்களா, இல்லையா என்பதைச் சொன்னால் போதும்.

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருத்தத்தை வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சொக்கர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

மறுப்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

மறுப்போரே அதிகம், திருத்தம் தோல்வியுற்றது.

பிரிவு 1, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



1998 நவம்பர் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர். (குறுக்கிடு)

திரு. அப்பாவு, இதில் ஒன்றும் விளக்கம் கேட்க முடியாது. அவர்கள் பேசிவிட்டார்கள். பிரச்சினை முடிந்துவிட்டது. நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (நான்காம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 50/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1998 நவம்பர் 27

**(உ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு 1998.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-55

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 9 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 24-11-1998-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 52/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஊ) தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடைசெய்தல் சட்டமுன்வடிவு, 1998.**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடைசெய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

[1998 நவம்பர் 27

### (ஈ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1998) மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து வரும் சட்ட முன்வடிவும் கேளிக்கை வரி தொடர்பானது. எனவே கருத்துக்களைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் இரு சட்டமுன்வடிவுகள் குறித்தும் கூறலாம்.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3. திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 24-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 51/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[திரு. ஆலடி அருணா] [1998 நவம்பர் 27

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடைசெய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** கருத்துக்கள் கூற விரும்பும் உறுப்பினர்கள் கூறலாம். திரு. இரா. தாமரைக்கனி.

***திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களை ஆண்கள் கிண்டல் செய்வது, ஆண்களைப் பெண்கள் கிண்டல் செய்வது என்பது உலக இயற்கை (சிரிப்பு). கொஞ்ச வயதிலே எல்லோரும் இந்த மாதிரிப் பண்ணத்தான் செய்வார்கள். மந்திரியாக இருந்தாலும், நானாக இருந்தாலும், யாராக இருந்தாலும், சின்னப் பிள்ளையில், அந்த வயதில் இப்படிப் பண்ணுவது இயற்கை. அது ரொம்ப மோசமாக ஆகக்கூடாது என்பதுதான் பிரச்சினை. ஆண்கள் கிண்டல் பண்ணி பெண்கள் இறந்திருக்கிறார்கள். பெண்கள் கிண்டல் பண்ணி ஆண்கள் இறந்திருக்கிற விவரம் நிறைய இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல், பெண்களைக் கேலி செய்பவர்களுக்கு, அவர்கள் விரும்பாத வண்ணம் பேசுகின்றவர்களுக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்று சட்டம் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஒரு நபர் ஒரு பெண்ணைக் கிண்டல் செய்தால் எந்த அடிப்படையில் அதை நிர்ணயிப்பது என்று இந்த மசோதாவில் இல்லை. இரண்டாவதாக, ஒரு Bus stand-ல் ஒருவன் ஒரு பெண்ணிற்குப் பின்னால் நின்றால், அவன் போலீசுக்கு வேண்டாதவனாக இருந்தால், பெண்ணைக் கிண்டல் செய்ததாகச் சொல்லி case போட்டு உள்ளே வைத்து விடுவார்கள்.

இன்னும் ஒன்று. பெண்கள் கல்லூரிப் பக்கம் செல்பவர்களையெல்லாம் பிடித்துக் கொண்டுபோய், பெண்களைக் கிண்டல் பண்ணுகிறார்கள் என்று சொல்லி case போட்டுவிடக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆண்களைப் பழி வாங்க வேண்டுமென்றால் இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தக்கூடிய வாய்ப்பும் இருக்கிறது. ஆகையினாலே, இந்தச் சட்டத்தால் ஆண்களுக்குப் பாதுகாப்பு இல்லாமல் போய்விடும். பெண்களைக் கேலி செய்தார் என்பதை நிரூபிக்க (குறுக்கீடு) இல்லை, இருங்கள். நான்

@ 24-11-1998-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 27] [திரு. இரா. தாமரைக்கனி]

பேசிக்கொள்கிறேன். அதன்பின்பு நீங்கள் பேசுங்கள். பெண்களைக் கேலி செய்தார் என்று நிரூபிக்க சில கடுமையான விதிமுறைகள் இந்தச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** வேறு ஏதாவது திருத்தங்களைக் கொடுக்க இருக்கிறீர்களா?

**திரு. இரா. தாமரைக்கனி:** இருங்கள், இருங்கள். கொடுக்கிறேன். முதலில் என்னுடைய யோசனையைச் சொல்கிறேன். அந்தக் காலத்தில் பெண்களுக்கு அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு இந்தப் பண்புகளெல்லாம் இருந்தன. இப்போது அந்தப் பண்புகளெல்லாம் இல்லை.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர் யாரை வைத்து இந்த முடிவிற்கு வந்தார் என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** அதாவது, கொஞ்ச வயதுப் பெண்கள் படிக்கின்ற காலங்களில், இப்போது பார்த்தீர்களென்றால், இராணி மேரிக் கல்லூரி மாணவிகள் மற்றும் சென்னை, மதுரை போன்ற இடங்களில் எல்லாம் உள்ள மாணவிகள் - எட்டு முழச் சேலை, 16 முழச் சேலை நாம் உடுத்தச் சொல்லவில்லை. சேலை உடுத்த வேண்டும், — சுடிதார், மிடி, குட்டை கவுன், மேக்ஸி போன்ற வடநாட்டு உடைகளை உடுத்துகிறார்கள். இதேமாதிரி ஆண்களும் உடுத்துகிறார்கள். 16 முழச் சேலை எங்கே, தமிழ்ப் பெண்களுக்கு; 8 முழச் சேலை எங்கே? இதையெல்லாம் பெற்றோர், ஆசிரியர்கள் போன்றவர்கள், 'இதுபோன்ற உடைகளை உடுத்தக்கூடாது,' யூனிஃபார்மே இப்படி இருக்கக் கூடாது கவர்ன்மெண்ட் ஹைஸ்கூலிலே, காலேஜிலே சேலைதான் உடுத்த வேண்டும்: பாவாடைதான் உடுத்த வேண்டும்; முந்தானை போட வேண்டும்; தாவணி உடுத்த வேண்டும் என்று அறிவுரை வழங்க வேண்டும். அதுமட்டுமல்லாமல், பெண்களைக் கேலி செய்தார் என்பதை நிரூபிக்க சில கடுமையான விதிமுறைகளைச் சட்டத்தில் சேர்க்க வேண்டும். (குறுக்கீடு) இருங்கள், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடு)

[1998 நவம்பர் 27

நண்பகல் 12-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் காஞ்சனா கமலநாதன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய சொந்தக் கருத்தாக சிலவற்றை இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் அது பெண்களுடைய சுயமரியாதையைப் பாதிக்கக்கூடிய அளவிற்கு அமைந்திருக்கிறது என்பதை அவர் உணர வேண்டும். உடை உடுத்துவது என்பது அவரவர்களுடைய தனிப்பட்ட, மனித உரிமை சம்பந்தப்பட்ட ஒரு விஷயம். அவர்களுக்குள்ளே ஓர் உணர்வு இருந்து, இந்த Modesy என்ற அளவில், நாகரிகமாக உடை உடுத்துகின்ற பெண்களைப் பற்றி பேச்சு கிடையாது. நாகரிகமாக உடை உடுத்தி பெண்கள் வருகின்றபோதுகூட வேண்டுமென்றே, வக்கிரபுத்தியுடைய ஆண்கள் அவர்களைப் பின்தொடர்ந்து கல்லூரி வாசல்களிலும், பொது இடங்களிலும், பேருந்துகளிலும் செல்லும்போதுகூட கேவலமான வார்த்தைகளை உபயோகிப்பதும், முறைகேடான பேச்சுகளை பேசுவதைத்தான் கேலி, கிண்டல் என்கிறோம். ஒரு பெண்ணே, எத்திராஜ் கல்லூரிப் பெண்ணே உயிரிழந்த சம்பவம் இருக்கிறது. இதையெல்லாம் கண்டித்து, இதே மாமன்றத்தில் நாம் விவாதித்திருக்கிறோம். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பெண்கள் கேலி கிண்டல் செய்து ஆண்கள் இறந்திருக்கிறார்கள், பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள், அதற்கு ஆதாரம் அவரிடத்திலே இருப்பதாக சொன்னார்கள். அதை அவர்கள் ஆதாரத்தோடு இந்தப் பேரவையிலே குறிப்பிட வேண்டும். சகட்டுமேனிக்கு, யாரோ ஒரு பெண்மணியை நினைத்துக்கொண்டு, அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு பெண்களுக்கு இல்லை என்று ஒட்டுமொத்தமாகச் சொன்ன அந்தச் சொற்றொடரை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். அதுவும் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், பெண்களுக்கு சொத்துரிமை கொடுத்து, பெண்களுக்கு கல்விக்கான முக்கியத்துவத்தைக் கொடுத்து, பெண் இனம் மேன்மை அடைய வேண்டும் என்பதற்காக எல்லா வகையிலும் பாடுபட்டுக் கொண்டிருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில், அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு பெண்களுக்கு இல்லை



1998 நவம்பர் 27] [டாக்டர் காஞ்சனா கமலநாதன்]

என்று சொன்ன வாதத்தை, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதை தயவுசெய்து நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்க வேண்டுமென்று மீண்டும் கேட்டுக்கொள்கிறேன். சகட்டுமேனிக்குப் பேச வேண்டாம் என்ற என்னுடைய கருத்தை சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் யாரையும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை; பொதுவாக, அப்படிக் குறைந்து வருவதாகச் சொல்கிறார். அதனால் விட்டு விடுங்கள்.

**திரு. வ. அன்பழகன்:** Point of clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. தாமரைக்கனி பேசி முடிக்கட்டும். (குறுக்கீடு) சரி, என்னவென்று சொல்லுங்கள்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீளமான சேலை உடுத்துவது, தமிழ்ப் பெண்கள் புடவை அணிவது, இதெல்லாம் மட்டும்தான் தமிழ்ப் பெண்களுக்கு உகந்த நாகரீகம் என்று சொல்கிறார்; சுடிதார் எல்லாம் நம்முடைய நாகரீகத்திற்கு ஒத்துவராது என்று சொல்கிறார். ஆனால், சிலபேர் இப்படியும் இல்லாமல், அப்படியும இல்லாமல், ஒட்டுமொத்தமாக அங்கி போடுகிறார்களே, அது எந்த நாகரீகம் என்பதை அறிய விரும்புகிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** துணைத் தலைவரவர்களே, தமிழர் பண்பாட்டோடு, நம்முடைய கலாச்சாரப்படி உடை அணிந்தால் நன்றாக இருக்குமென்று, ஒரு பெரிய மனுஷன் என்ற முறையிலே ஒரு பொதுவான கருத்தைச் சொன்னால் என்கிட்ட சண்டை போடுகிறீர்கள். சின்ன புள்ளைங்க, ஆண்களும் சரி, பெண்களும் சரி, கெட்டுப் போகாமல் இருக்க பெற்றோர்கள் புத்திமதி சொல்ல வேண்டும். ஆசிரியர்கள் புத்திமதி சொல்ல வேண்டும். இந்தமாதிரி dress போட்டால், அதாவது சுடிதார் போட்டால் கிழவனகூட கெட்டுப் போய் விடுவான். 'விவசாயி' என்ற படத்தில் ஒரு கே.ஆர். விஜயா அம்மா வந்து, ஒரு மாதிரி dress போடும்போது, ஒரு கிழவன் கெட்டுப்போகிற மாதிரி நிகழ்ச்சி எல்லாம் வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிலே ஒரு கே.ஆர். விஜயாதான்.

[1998 நவம்பர் 27

**திரு. இரா. தாமரைக்கனி:** இந்த மாதிரி dress எல்லாம் உடுத்தக்கூடாது. இருந்தாலும் சட்டத்தை .... (குறுக்கீடு) பாட்டு நீர் பாடுமய்யா! எனக்குப் பாட்டுப் பாடிப் பாடி அலுத்துப் போய்விட்டது (சிரிப்பு) அதனால்தான் பெண்களைக் கேலி செய்தால் அதை நிரூபிக்க சில கடுமையான விதிமுறைகளை இந்தச் சட்டத்திலே புகுத்த வேண்டும்.

தமிழ், தமிழ் என்று நாம் சொல்கிறோம். வடநாட்டு உடையிலே மாணவர்கள் அலைகிறார்கள். அதையெல்லாம் அணியக்கூடாது என்று அரசு புத்திமதி சொல்ல வேண்டும். ஆசிரியர்கள் சொல்ல வேண்டும், பாடத்திலே இதைச் சேர்க்க வேண்டும். அப்போதுதான் சரியாக வரும். இல்லையென்றால், வடநாடு போக, வெளிநாடு போக, அந்த dressகளை இங்கேவந்து உடுத்துவார்கள். நம்முடைய நாட்டு சீதோஷ்ண நிலை வேறு. வெளிநாடு, வடநாடு சீதோஷ்ண நிலை வேறு. அதையெல்லாம் புரிந்துகொண்டு இந்தமாதிரி துணிகளை எல்லாம் அணிய வேண்டும். இப்போது நீங்கள் ஆளும் கட்சியிலே இருக்கிறீர்கள். நான் கடற்கரைக்குப் போகும்போது, இந்தச் சட்டத்திலே நீங்கள் என்னை கைது பண்ணலாம். நாளைக்கு அமைச்சர் கோ.சி. மணி— வயது ஒன்றும் இல்லை, சுருக்கம்தான்—துரைமுருகன் போகும்போது...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. கடற்கரைக்குக் காற்று வாங்கப் போனால், கைது செய்யப்பட மாட்டாது.

**திரு. இரா. தாமரைக்கனி:** இல்லை, இல்லை. பிடிக்காத பெண்கள் வந்து, அரசியல் அடிப்படையிலே யாராவது set-up பண்ணிவிட்டு, அரசியல் ரீதியாக, போலீஸை ஆளும் கட்சிக்காரர்கள் தூண்டிவிட்டு, 'இந்தமாதிரி case போடுய்யா' என்று சொன்னால் அரசியல் வாழ்வே கெட்டுப் போகும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதாவது, உங்கள் அனுபவத்தையெல்லாம் சொல்கிறீர்கள் போல இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி :** இந்த மாதிரி நிலைமைகள் எல்லாம் உங்களுக்கும் வரக்கூடாது. எங்களுக்கும் வரக்கூடாது.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த உடைகளைப் பற்றிச் சொல்லும்போது, அவர் வீட்டிலே இருக்கிற பெண்கள், குழந்தைகள், இந்த உடைகளை அணியாமல் இருக்கிறார்களா என்ற உறுதியை இந்த அவைக்குத் தருவார்களா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.



1998 நவம்பர் 27]

**திரு. இரா. தாமரைக்கனி:** ஐயா, நம்முடைய வீட்டிலே அந்தக் காலத்து பெண்ணைத்தான் கல்யாணம் முடிச்சிருக்கோம், இந்தக் காலத்து பெண் கிடையாது; அவர்கள் சேலைதான் உடுத்துகிறார்கள். குழந்தை, ஒரு பெண் குழந்தைதான் இருக்கிறது. சேலை, தாவணி உடுத்திக்கொண்டுதான் பள்ளிக்கூடத்திற்கு போகிறார்கள். அதை உறுதியாகத்தான் கூறுகிறேன். என்னை மாதிரி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், மற்ற அமைச்சர்கள், பெண் எம்.எல்.ஏ.க்கள், ஆண் எம்.எல்.ஏ.க்கள், அவர்கள் வீட்டுக் குழந்தைகள், குடும்பங்களில் எல்லாம் உடை அணிவதற்குப் புத்திமதி சொல்ல வேண்டும், ஆலோசனை சொல்ல வேண்டும் என்று நினைக்கிறேன். கடைசியாக நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், முதலாவதாக இதனைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்பினால் நன்றாக இருக்கும். அதைப் பரிசீலித்து, உரிய மாற்றங்கள் செய்து, மன்றத்தில் தாக்கல் செய்து, இந்தச் சட்டத்தை நிறைவேற்றினால் நன்றாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து. நீங்கள் எப்படி நினைத்துக் கொண்டாலும் சரிதான். (சிரிப்பு)

பிற்பகல் 12-05

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் கல்லூரி மாணவி ஒருவர், சில இளைஞர்களால் கிண்டலுக்கும், கேலிக்கும் உள்ளாக்கப்பட்டு இறந்ததை மனதிலே கொண்டு, அதற்குப் பின்னாலும் இதுபோன்ற அசம்பாவிதங்கள் நடக்கக் கூடாது என்பதற்காக இந்தச் சட்டம் இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. பெண்கள், மரியாதைக்கும், கண்ணியத்திற்கும் உரியவர்களாக நடத்தப்பட வேண்டும் என்பதிலே இரண்டு கருத்து இருக்க முடியாது. ஆனால், அதேநேரத்திலே, அருமைச் சகோதரர் திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னதுபோல, எல்லா இடங்களையும் சேர்த்து, அதாவது கல்லூரி Bus Stop-ஓ, Road-ஓ, Railway Station-ஓ, Cinema Theatre-ஓ, Park-ஓ, Beach-ஓ, திருவிழாக்கள் நடைபெறுகின்ற இடமோ என்று இப்படிப்பட்ட பொது இடங்கள், வண்டிகள், வாகனங்கள், Bus இப்படி எல்லா இடங்களையும் சேர்த்து இந்தச் சட்டமுன்வடிவிலே

இருக்கிறது. இதிலே நாம் மேலும் பார்த்தோம் என்றால், இந்தச் சட்டத்திற்கான விதிகள் வகுக்கிறபோது, அது சட்டமன்றத்திலே வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதை வைக்க வேண்டும். அப்படி வைத்து சட்டமன்றத்திலே விவாதம் நடத்தி, அதற்குப் பின்னாலே இந்தச் சட்டம் நிறைவேற்றப்படவேண்டும். இது ஒன்று.

இரண்டாவது, தண்டனை என்னும்போது, ஓராண்டு தண்டனை அல்லது 10 ஆயிரம் ரூபாய் அபராதம் அல்லது இரண்டும் சேர்த்து என்று இருக்கிறது. இதுகுறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் விளையாட்டாகச் சொன்னாலும்கூட, அவர் சொன்னதிலே உண்மை இருக்கிறது. பொதுவாக அவர் சொல்லும்போது வயதானவர்கள் என்று சொன்னார். வயதானவர்கள் என்பதை அவர் வேடிக்கையாகச் சொன்னாலும்கூட, இளைஞர்கள் இதிலே அதிக அளவு பாதிக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படும். கல்லூரிகளிலோ, Bus Stop-களிலோ அவர்கள் நிற்கிறபோது, அவர்களில் யாரை வேண்டுமானாலும், போலீஸ் நினைத்தால் பிடித்துக் கொண்டுபோய், அவர்கள்மீது 'கிண்டல் செய்தார்கள், கேலி செய்தார்கள்; அல்லது அதற்கு உடந்தையாக இருந்தார்கள்' என்று இப்படி யார்மீது வேண்டுமானாலும் case போடமுடியும். இந்தச் சட்டத்தின் காரணமாக, வெளியிலே செல்கிற பெண்களுக்கு ஒரு வகையிலே பாதுகாப்பு. இன்னொரு வகையிலே, கல்லூரிகளிலே படிக்கிற அல்லது மற்ற இளைஞர்களுக்கு பயமுறுத்துகிற விதத்திலே, அச்சத்தைத் தருகிற விதத்திலே, அவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலையை இது ஏற்படுத்தும். ஆகையினால், இதுபோன்ற புகார்கள் வருகின்றபோது, ஆதாரத்தோடு இப்படிப்பட்ட புகார்கள் தரப்படுகிற விதத்திலே சட்டத்தினுடைய விதிகள் அமைக்கப்பட வேண்டும்.

பொதுவாகவே, நம்முடைய காவல் துறையைப் பார்த்தோம் என்றால், சட்டம் என்று வந்தாலே, ஒரு குற்றம் நடக்கிறதோ, இல்லையோ, ஆண்டுக்கு இத்தனை caseகள் இதிலே book செய்ய வேண்டும் என்பதற்காகவே சில நேரங்களிலே book செய்து விடுவார்கள். Prohibition case என்று எடுத்துக் கொண்டால், வழக்கு என்பது நடந்து கொண்டேயிருக்கும். மாதா மாதம் 4 பேரை book செய்து, fine போட்டு அனுப்பிக் கொண்டேயிருப்பார்கள். அதுபோல இந்தச் சட்டம் இருக்கிறதே; இதிலே யாராவது குற்றம் செய்யாதவர்கள் கைது செய்யப்படுகிறார்களா என்று நாளைக்குக் கேட்கக்கூடாது



என்பதற்காகச் சொல்கிறேன். சாலையிலே போகிற 10 பேரைப் பிடித்து, மாதா மாதம் இந்தச் சட்டத்திற்கு உட்படுத்த வேண்டிய கட்டாயம், இதுபோன்ற சூழ்நிலைகள் எல்லாம் எதிர்காலத்திலே ஏற்படும். இதை மிகவும் கவனமாக ஆராய்ந்து, முடிந்தால் ஆய்வுக்குழுவுக்கு அனுப்பி, புகார் வருகிறபோது, அதற்கான தகுந்த ஆதாரங்களோடு அந்தப் புகார் வந்தால், அதன்மீது நடவடிக்கை எடுப்பதிலே எந்தவித தவறும் கிடையாது. குற்றவாளிகள் யாரும் பாதுகாக்கப்படக் கூடாது. குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். பெண்களுக்குப் பாதுகாப்பு வேண்டும். அதேநேரத்தில் மிகத் துல்லியமாக, மிகக் கவனத்தோடு சட்ட விதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். முடிந்தால் இதை ஆய்வுக்குழுவுக்கு அனுப்பி, எல்லாக் கட்சி உறுப்பினர்களும் உட்கார்ந்து பேசி, இந்தச் சட்டத்தைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

***திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். நம்முடைய உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களும், திரு. திருநாவுக்கரசு போன்றவர்களும் இந்தச் சட்டத்தினால் ஏற்படும் அபாயங்கள் என்று சிலவற்றைக் கோடிட்டுக் காட்டினாலும், பெருமளவுக்கு இந்தச் சட்டமுன்வடிவை ஆதரித்துப் பேசியதாகவே நான் கருதுகிறேன்.

பிற்பகல் 12-10

கடந்த ஆண்டு ராகிங் சம்பந்தப்பட்ட ஒரு சட்டமுன்வடிவு இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதன் விளைவாக கல்லூரிகளில் முதலாண்டு மாணவர்களை, பழைய மாணவர்கள் (Senior Students) ராகிங் செய்கிற நிலைமை இன்றைக்கு அறவே நிறுத்தப்பட்டுவிட்டது. இந்தச் சட்டம் வருவதற்கு முன் ராகிங்கிற்கு பயந்து பல மாணவர்கள் முதலாண்டிலேயே படிப்பை விட்டுவிட்டுச் சென்றிருக்கிறார்கள். capitation fees கட்டிய பிறகும்கூட முதலாண்டிலேயே படிப்பை நிறுத்திவிட்டுச் செல்லும் நிலைமை இருந்தது. ஆனால் இந்தச் சட்டம் வந்த பிறகு, இந்த நிலைமை இல்லை. மேலும், பெற்றோர்கள் மன நிம்மதியோடு இருக்கிறார்கள். இப்போது எந்தக் கல்லூரியிலும் எங்குமே ராகிங்கே கிடையாது. இந்தக் கடுமையான சட்டத்தினுடைய விளைவாக எந்தக் கல்லூரியிலுமே அந்தச் சூழ்நிலை இன்றைக்கு இல்லை.

அதேபோலத்தான் பெண்களைக் கேலி செய்கிறவர்களைத் தடுக்கும் சட்டமுன்வடிவும் கொண்டுவரப்பட்டிருக்கிறது. சரிகா என்ற மாணவி எத்திராஜ் கல்லூரி வாசலிலேயே மாண்டாள் என்பதும், அதுசம்பந்தமாக சென்னையிலே இருப்பவர்கள் பலர் கைது செய்யப்பட்டார்கள் என்பதும் அனைவரும் அறிந்த உண்மைதான். இது ஏற்கெனவே காவல் துறையினுடைய City Civil Act-லே இருக்கிறது. அதன்படி தக்க நடவடிக்கை இப்போதுதான் எடுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தக் கொலைக்குப் பின்னால், நடவடிக்கை எடுத்ததன் விளைவாக, காவல் துறையினர் மிகச் சிறப்பாக அனைத்துப் பேருந்துகளிலும் பெண் காவலர்களை மாறுவேடத்தில் அனுப்பியும், ஒவ்வொரு பேருந்து நிலையத்திற்கும் காவலர்களை அனுப்பியும் நடவடிக்கை எடுத்து இருக்கிறார்கள். நான் இன்னொன்றையும் சொல்ல விரும்புகிறேன். இதுபோன்ற நடவடிக்கைகளினால் பெண்களைக் கேலி செய்வது மட்டும் குறையவில்லை, பிக்பாக்கெட்டும் குறைந்திருக்கிறது. நான் மூத்த உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்வதெல்லாம் இதனாலே பெரும்பாலான குற்றங்கள், பேருந்துகளிலே ஏற்படுகிற குற்றங்கள் பெருமளவு குறைந்திருக்கின்றன. நீங்களே அனைத்துப் பேருந்து நிலையங்களுக்கும் விஜயம் செய்தால் அதனுடைய பலனை அனுபவிப்பீர்கள்...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் ஏதோ இந்தச் சட்டமே வேண்டாம் என்று சொல்வது போல அவருடைய கருத்துக்களைக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். நான் அவருக்குப் பணிவோடு சொல்லிக்கொள்கிறேன். இந்தச் சட்டத்தின் விதிகளை மிகவும் கவனமாக frame பண்ண வேண்டும் என்றுதான் சொன்னேன். சட்டம் இல்லாமலேயே உறுப்பினர் சொன்னதுபோல எல்லாம் நடந்து கொண்டிருக்கிறது. இந்தச் சட்டம் வந்த பிறகு இளைஞர்கள் பழிவாங்கபடவோ, பாதிக்கப்படவோ கூடாது. இந்த மாதிரிச் சூழ்நிலையில் படிக்கின்ற மாணவன் ஜெயிலுக்கு 1 வருடம் சென்றால் அவனுடைய படிப்பும் பாதிக்கப்படும், குடும்பமும் பாதிக்கப்படும். ஏதாவது ஒரு பெண் புகார் கொடுத்து ஒரு வருடம் பிடித்து உள்ளே போட்டுவிட்டால் 10 ஆயிரம் ரூபாய் பணம் கட்டுவது என்றால் பலபேர் கட்டிவிட்டுகூட போய்விடுவார்கள். ஆனால் ஒரு வருடம்,





படிக்கின்ற மாணவன், அவன் மருத்துவக் கல்லூரி மாணவனோ அல்லது பொறியியல் கல்லூரி மாணவனோ ஜெயிலுக்கு ஒரு வருடம் போனால் அவனுடைய எதிர்காலமே போய்விடும். அந்தக் குடும்பம் நலிந்து போய்விடும். அதனால் இதைக் கவனமாகப் பார்க்கவேண்டும் என்றுதான் சொன்னேனே ஒழிய, வேறு ஒன்றுமல்ல.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்திராஜ் கல்லூரி மாணவி படுகொலைக்குக் காரணம் வெறும் மாணவர்கள் மட்டுமல்ல. சாலையிலே திரிபவர்களும்தான் காரணம். ஆட்டோவில் போனதால்தான் அது ஏற்பட்டது. கோவில், பள்ளிகள், Road, Railway Station, Park, Beach பேருந்து நிறுத்தம், இப்படி சென்னையிலே இருக்கிற பல இடங்களில், பெண்களைக் கிண்டல் செய்வது, அவர்களை மிகக் கீழ்த்தரமாக நடத்துவது போன்றவற்றிற்கு இந்தச் சட்டம் முழுமையான தண்டனையை வழங்குகிறது. ஆகவே, இதை முழுக்க முழுக்க அனைத்து பெற்றோர்களும் மனப்பூர்வமாக விரும்புகிறார்கள், ஏற்கிறார்கள் என்பதிலே எந்தவித ஐயப்பாடும் இல்லை.

இதிலே ஒரு திருத்தத்தை மட்டும் கொண்டு வரவேண்டும் என்கிற என்னுடைய எண்ணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இதிலே, வாகனங்களில் செல்கிற ஓட்டுநர்கள், மேலும் அதிலே செல்பவர்கள் கிண்டல் செய்தாலோ, தரக்குறைவாக நடந்தாலோ தண்டனை உண்டு என்றும், அதேநேரத்தில் உரிமையாளர்களுக்கும் தண்டனை உண்டு என்ற ஒரு நிலையும் இருக்கிறது. அதைத் தயவுசெய்து மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இங்கே இருக்கிற நாம் அனைவரும் ஓட்டுநர்களை வைத்திருக்கிறோம். அமைச்சர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்பட அனைவரும் ஓட்டுநர்களை வைத்திருக்கிறோம். எனவே ஓட்டுநர் தவறு செய்தால் அதன் உரிமையாளருக்கும் தண்டனை என்பது சரியல்ல. எனவே, இந்த நிலையை மட்டும் கவனத்தில் வைத்துக்கொண்டு, இதை மட்டும் கொஞ்சம் திருத்தி அமைத்தால் நலமாக இருக்கும் என்பது என்னுடைய கருத்து.

ராகிங்கிற்காக ஒரு சட்டமுன்வடிவு கடந்த ஆண்டு கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டதன் விளைவாக ராகிங் என்பது இன்றைக்கு எங்கும் இல்லை. எனவே, இதுபோன்ற சட்டங்கள் வந்தால் தான் அதனுடைய உண்மையான நோக்கம் மக்களுக்குத் தெரியவரும்

என்பதை நான் சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதில் நிறைய உறுப்பினர்கள் பேச ஆர்வமாக இருக்கின்ற காரணத்தால் அனைவரையும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். திரு. பி. வெங்கடசாமி.

பிற்பகல் 12-15

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I want to offer my remarks on behalf of Janata Dal regarding eve-teasing in any place in the State of Tamil Nadu. Regarding this Bill, some of our friends have already expressed their apprehension that the police may foist false cases against those who are not in favour of them. That has to be examined carefully.

At the same time, it has been mentioned in the Bill, that "eve-teasing means any indecent conduct or act by a man which causes or is likely to cause intimidation. fear, shame, etc". `Regarding this, my suggestion is that instead of the words "a man", "any person" may be substituted. Then only it could include boys also, otherwise they would escape. Actually I have given an amendment in this regard but it could not be included because I gave it belatedly. So, I request the Hon. Minister to examine this and instead of the words "a man", we can have "any person" so that it will include men, boys, girls and everybody. I request you to see that it is amended accordingly.

Secondly, in this bill it has been mentioned that "public service vehicle" shall have the same meaning as defined in clause 35 of Sec.2 of the Motor Vehicles Act, 1988. Motor Vehicles means power driven vehicles. If that is so, what about the vehicles which are operated manually and mechanically? Manual vehicles like cycle-rickshaw should also be included in this bill. So, I request that this should be amended in such a way as to include the vehicles operated manually and mechanically.

In sub-section (1) of Section 6 of this Bill, instead of the words "aggrieved person", the words "any person in the Public Service Vehicle" may be substituted. Because if any of the girls are eve-





teased, they may not go and complain in the Police Station as they are very timid. So anybody who has seen the incident can make a complaint to the concerned authorities for taking action. So, I reiterate that "any person in the public service vehicle with the consent of the aggrieved person" may be included, in the place of "aggrieved person".

Eve-teasing may happen in any place and may be done by anybody, even the girls may tease the boys. That is why I request the Hon. Minister to insert the words "any person" instead of `a man'. Also, I request the Hon. Minister to examine this bill very carefully to see that it is worded properly so that we can avoid a lot of confusion. With these words, I conclude my speech, Sir.

Thank you.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன். (குறுக்கீடு). திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் திருத்தத்திலே 'any person' என்பது சரி. 'Man' என்பதற்குப் பதிலாக 'Person' என்று இருந்தால் it will include male or female. இரண்டிற்கும் பொருந்தும். Boys are grown up, இரண்டிற்கும் வரும்.

இன்னொன்று. anybody in the public vehicle என்று சொல்லும்போது, சம்பந்தமில்லாமலேயே, ஒரு பெண்ணை இன்னார் கேலி செய்தார் என்று, பிடிக்காத ஒருவருடைய பெயரை எழுதிக் கொண்டுகூட, complaint file பண்ணிவிடலாம். F.I.R. போட்டுவிடலாம். எனவே, யார் பாதிக்கப்படுகிறாரோ அந்த நபருடைய consent இருக்கவேண்டும். இல்லையென்றால், இந்தப் bus-ல் இன்னார் போனார், இன்னாரைக் கேலி செய்தார் என்று பிடிக்காதவர்கள் பெயரை எழுதி, complaint file பண்ணி, F.I.R. போட்டு, விசாரணையெல்லாம் வந்துகொண்டிருக்கும். எனவே, aggrieved person's consent இல்லாமல் போடக்கூடாது.

**HON. THIRU ALADI ARUNA:** Hon. Deputy Speaker Sir, Eve-teasing means any indecent conduct or act by a man. `Man' includes persons and individuals, women and girls. 'Man' includes persons, I say.

53-276—9a

219403

**திரு. எஸ். திருநாவுக்கரசு :** Man என்றால் only male section இல் தான் வரும், person என்றால்தான் ladies என்பதும் சேர்ந்து வரும்.

Whether male or female, person என்றுதான் வரும். Man என்றால் Man *தானே? அதிலே* female *எப்படி வரும்?*

**HON. THIRU ALADI ARUNA :** It is dealing with man. It did not mean a girl or woman.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர், நீங்கள் பதிலளிக்கும்போது விளக்கமாகச் சொல்லுங்கள். திரு. ஆ இராசேந்திரன் என்கிற தீரன்.*

பிற்பகல் 12-20

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதிலே, தெளிவாக இருப்பதற்காகத்தான் a man என்பதற்குப் பதிலாக any person என்று போடச் சொல்கிறோம். அதை அவர்கள் பொருள் கொள்கிற நேரத்திலே, காவல் துறை அதிகாரிகள் அது ஆண்களுக்கு உரியது மட்டுமே என்று கருதிக்கொள்ள வாய்ப்பு இருக்கும் என்ற காரணத்தாலே தெளிவாகப் போடலாம் என்பதற்காகத்தான் இதனைச் சொல்கிறோம். இருந்தாலும்...

**HON. THIRU ALADI ARUNA:** The very purpose of this Act is to protect the modesty of the women, not the men.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** அப்படி ஒரு வாய்ப்பு வந்துவிடக்கூடாது என்பதற்காகத்தான் அதைச் சொல்கிறோம். இருந்தாலும்கூட, இன்றைக்கு இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தியிருக்கிற இந்தச் சூழ்நிலையிலே பெண்களைப் பெற்றவர்கள், பண்பாட்டைக் காப்பாற்ற நினைக்கின்றவர்கள் இந்த அருமையான சட்டத்தை வரவேற்கவே செய்வார்கள். மாணவர்கள் என்ற பெயரிலே தெருப் பொறுக்கிகள் உருவாவதைத் தடுக்கின்ற ஒரு பண்பாட்டுப் பாதுகாப்புச் சட்டமாக இருக்கின்ற காரணத்தால் இதனை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரைப்படத் துறையிலே, இதே மாதிரி கேலி செய்கின்ற முறைகள் ஏராளமான அளவில் இடம் பெறுகின்றன. திரைப்படத் துறையிலே, ஆண்களை பெண்கள் கேலி செய்வதையோ, அல்லது பெண்களை ஆண்கள் கேலி செய்வதையோ தடுக்கின்ற வகையிலே இந்தச் சட்டம் பாயவேண்டும். அப்படி இல்லை என்று சொன்னால், அதற்கும் வழிவகை காண வேண்டும். ஏன் என்று



சொன்னால் திரைப்படத் துறையிலிருந்துதான் அந்த இளைஞர்கள் கற்றுக்கொள்கிறார்கள். திரைப்படத் துறை இளைஞர்களையும், இளைஞர்கள் திரைப்படத் துறையையும் ஒருவர்மீது ஒருவர் குற்றஞ்சொல்லிக்கொண்டு, பொதுவான பண்பாட்டை, சீரழிவுகளை வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே திரைப்படத் துறையிலே உள்ள பெண்கள் கேலி அல்லது ஆண்கள் கேலி ஆகியவற்றைத் தடை செய்கின்ற வகையிலே இருந்தால் நலமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. வேலாயுதன்.

**திரு. சி. வேலாயுதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தை மனப்பூர்வமாக வரவேற்கிறேன். நம்முடைய பாரத நாட்டினுடைய பண்பாடு, கட்டிய மனைவியைத் தவிர, மற்ற அத்தனை பேரையும் தாயாகக் காணக்கூடிய பண்பாடாகும். இந்தப் பண்பாடானது நாளடைவில், பேராசிரியர் பெரியவர் தீரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, திரைபடத் துறையினாலும் மற்றும் பலவிதமான ஒழுங்கீனத்தாலும் கொஞ்சம் கொஞ்சமாக கெட்டுவிட்டது. மேலைநாட்டு நாகரீகம் என்று சொல்கிறோம் ஆனால், மேல்நாட்டிலிருந்து வருகின்ற தாய்மார்கள்கூட நல்லபடியாக புடவை அணிந்து நல்ல பக்குவமாகக் காட்சியளிக்கக்கூடிய சூழ்நிலைகள் இருக்கின்றன. ஆனால் நம்முடைய நாட்டில், பெண்கள், வீட்டில் உள்ள பெரியவர்கள் கட்டுப்படுத்தாத காரணத்தினாலோ என்னவோ தெரியவில்லை, தங்களுடைய அழகை நாளுக்குநாள் அலங்கோலமாகக் காட்டக்கூடிய அளவிற்கு மாற்றிக் கொண்டு வருகிறார்கள். இந்தச் சூழ்நிலை மாற வேண்டும். வீட்டிலுள்ள பெரியவர்கள் கண்டிக்க வேண்டுமென்று சொல்வதில் எந்தத் தவறும் கிடையாது.

ஒரே ஒரு விஷயம். அதாவது தீண்டாமையை அறவே ஒழிக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு தீண்டாமைச் சட்டத்தைக் கொண்டு வந்தோம். ஆனால் இப்போது ஆங்காங்கே சில இடங்களில் தனக்கு வேண்டாதவர்களை நல்லவர்களைக்கூட அந்தச் சட்டத்திலே மாட்டிவிட்டு பாதிப்பு ஏற்படக்கூடிய அளவிற்கு அது மாறியிருக்கிறது. அந்த அளவுக்குப் போகாமல், அதாவது ஒரு நல்லவரை பெண்ணைக் கேலி செய்தார் என்று கேவலப்படுத்துகிற அளவுக்கு இந்தச் சட்டம் பாயக்கூடிய வகையில் இல்லாமல். அதற்கு சாட்சியாக யாரைப் போடுவது, பெரியவரைப் போடலாமா அல்லது இரண்டு பெண்களை சாட்சிகளாகப் போடலாமா என்பதை நிர்ணயித்து, திருத்தம் செய்ய

வேண்டும். நல்லவர்கள் பாதிக்காமல் இருக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட வேண்டும். அதேசமயத்தில் இதுபோன்ற மோசமான, பெண்களைக் கேலி செய்யக்கூடியவர்கள் நிச்சயமாக பாதிக்கக்கூடிய வகையில் இந்தச் சட்டம் வரவேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களைக் கேலி செய்யக்கூடிய இந்தச் சட்டத்தை என்னுடைய பாட்டாளி மக்கள் கட்சி உளமாற வரவேற்கிறது. சென்னையிலே எத்திராஜ் கல்லூரியிலே படிக்கும் ஒரு பெண் சில ஆடவர்களால் செய்யப்பட்ட குறும்பின் காரணமாக அந்த இடத்திலே துடிதுடித்து இறந்ததை அறிந்து தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை நல்ல உள்ளங்களும் வேதனையில் துடித்தது. ஒரு தாய் ஈன்றெடுக்கக்கூடிய இந்த ஆண்கள் செய்யக்கூடிய குறும்புத்தனம், அந்தப் பெற்றெடுத்த தாயை எப்படியெல்லாம் பாதித்தது என்பதனை அந்தக் குழந்தை இறப்பின்போது அழுத கண்ணீர் காரணமாக இன்று இந்தச் சட்டமுன்வடிவை நம்முடைய முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்தச் சட்டமுன்வடிவை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி உளமார வரவேற்பதுடன், இந்தச் சட்டத்தைக் கையாளும்போது இரண்டு பக்கமும் கூர்மையாக இருக்கக்கூடிய ஒரு கத்தியைக் கையாளுவதுபோல் கையாள வேண்டும். பெண்கள் அதிகமாக நடமாடக்கூடிய பகுதியிலே, ஆண்களும் செல்ல வேண்டிய Bus stop, Cinema Theatre மற்ற பொது இடங்களில் செல்லும்போது ஏற்படும் சில சச்சரவின் காரணமாக, இந்தச் சட்டம் பாய்ந்தால், அதனால் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஒரு சில மாணவர்களாக இருந்தால், அவர்களுடைய வாழ்க்கை அநியாயமாகப் பாதிக்கப்பட்டுவிடும். ஆகையினால், இந்தச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கு முன்னாள் Select Committee-க்கு விட்டு அனைவரும் அமர்ந்து இந்தச் சட்டத்தை ஆராய்ந்து தெளிவாக நாம் நிறைவேற்றினால் இது நாட்டில் இருக்கக்கூடிய பெண்களுக்குப் பாதுகாப்பாக இருக்குமென்று சொல்லி, இந்தச் சட்டத்தை நாங்கள் முழுமனதோடு ஆதரிக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன்.





• **திரு. ஜி. நிஜாமுதீன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

'ஓ . . . பியாரி பானி பூரி பம்பாய் நாரி
நீதான் எந்தன் நகுமா நகுமா நகுமா
சில்வர்ஸ்டர் ஸ்டல்ஸ்டலான் போல அப்பன்காரன்
கூட வந்தால் தகுமா தகுமா தகுமா'

இது ஈவ்டீசிங் காலம், அந்தக் காலத்தை situation-ஐ சூழ்நிலையை உருவாக்குவது யார்? நாம் சும்மா ரோட்டில் போய்க் கொண்டிருக்கிறோம். அவர்களும் நாகரீகமான உடை அணிந்துகொண்டு போனால் யாருமே யாரையும் டச் பண்ணுவதில்லை, கிண்டல் பண்ணுவதில்லை, பிரச்சினை பண்ணுவதில்லை, நம்மையெல்லாம் தூண்டிவிட்டுவிடுகிறார்கள். முன்னேற்றம், முன்னேற்றம் என்ற பாதையில், உடை மட்டும் குறைந்துகொண்டே வருகிறது. ஆண் பிள்ளை பாருங்க, சுரெக்டா சர்ட், பேண்ட் போட்டிருக்கிறான், இல்லை வேட்டி, சட்டை போட்டிருக்கிறான். பின் பக்கம் கருப்பா கோடு போல பெரிசா Window jacket, அப்படி இப்படி என்று சொல்லி மனிதனைக் கெடுக்கிறார்கள். அதனால், ஒரு தரப்பினரை மட்டும் பாதிக்கும்படி சட்டம் இயற்றுவது தவறு. பெண்களை இந்த நிலைக்கு உள்ளாக்குகின்ற ஆண்கள், ஆண்களை இந்த நிலைக்கு உள்ளாக்குகின்ற பெண்கள் மீதும் இந்தச் சட்டம் பாயவேண்டும். எனவே, பொதுவான ஒரு சட்டத்தை இயற்ற வேண்டும். இந்தச் சட்டத்தின்படி பார்த்தால்—சினிமா, போகிறோம்—வில்லன் ஹீரோயினை ஏதாவது சொல்லிவிட்டால் ஹீரோ டிஷ்யூம், டிஷ்யூம் என்று சண்டை போட்டு வில்லனை அடித்துப் போட்டுவிடுகிறான். ஆனால், அந்த ஹீரோவே அதே ஹீரோயினைப் போட்டு புரட்டு புரட்டு என்று புரட்டி எடுக்கிறான். அதைப் பார்த்துவிட்டு சின்னப் பசங்கள் காலேஜிலே, அது, இது, அப்படி, இப்படி என்று பண்ணுகிறார்கள். நல்ல மரியாதையாக செல்கின்ற பெண்களுக்கு எந்தவிதமான பிரச்சினையும் இல்லை. சமுதாய விரோதிகளாலேயும் அல்லது கெட்ட நோக்கங்களுடன் செல்லும் சில பெண்களாலேயும் ஆண்களாலேயும் தான் இதுபோன்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆகவே, இந்தச் சட்டத்திலே ஆண்களுக்கும், பெண்களுக்கும் பாதுகாப்பு வழங்குகின்ற வகையிலே திருத்தம் செய்யப்பட வேண்டும்.

அதோடு, தண்டனை மிகவும் கடுமையாக இருக்கிறது. கல்லூரி மாணவர் ஒருவருடைய வாழ்க்கை பாழாகிவிடும். மாணவர்கள்

[திரு. ஜி. நிஜாமுதீன்] [1998 நவம்பர் 27

எப்பொழுதுமே போராட்டக் குணம் படைத்தவர்கள். அவர்கள் போராடும் நேரத்தில், காவல் துறை அதிகாரிகளை எதிர்த்துக்கூட போராடுகின்ற நிலை வரும். அப்பொழுது இந்தச் சட்டத்தாலே பாதிக்கப்பட்டுவிடுவார்கள். கள்ளச்சாராயம் காய்ச்சுகின்றவர்கள்கூட, 280 ரூபாய் பணம் அபராதமாகக் கட்டி வெளியே வந்துவிடுகிறார்கள். அப்படியுள்ள காலத்தில் 10 ஆயிரம் ரூபாய் அபராதம், ஒரு வருடம் என்பது மிக அதிகம். ஆகவே, அவர்களுக்கு எச்சரிக்கை கொடுத்து, குறைந்தபட்சத் தண்டனையாக 6 மாதமோ, 3 மாதமோ அல்லது அபராதத்தைக் குறைத்து வழங்கி, சமுதாயத்தில் நல்ல சூழ்நிலையை உருவாக்குவதற்கான தகுந்த சட்டத்தை நாம் ஏற்படுத்த வேண்டும். அதற்குத் தகுந்த மாதிரி ஆண்கள், பெண்களைக் கிண்டல் செய்தாலும், பெண்கள் ஆண்களைக் கிண்டல் செய்யத் தூண்டினாலும் அல்லது செய்தாலும் அவர்களையும் தண்டிக்கக்கூடிய வகையிலும், ஒரு தரப்பினருக்கு மட்டும் இந்தச் சட்டம் இல்லாமல், பொதுவாக இருக்க வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களைக் குறும்பு செய்கின்ற ஆடவர்களுக்குத் தண்டனை விதிக்கின்ற சட்டத்தை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரவேற்கிறது. இந்தச் சட்டம் மிக முக்கியமான சட்டம். அவையிலே கேலியாகவும், சிரிப்பாகவும் இங்கே விவாதத்திலே பங்குகொண்டிருந்தாலும், தமிழகத்திலே சமீபகாலங்களிலே பல்வேறு விபரீதங்கள் உருவாகிக்கொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்தச் சட்டம் அவசியம் என்று கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது. இது ஏதோ பள்ளி மாணவர்களுக்கு மட்டும் பயன்படுவதாக யாரும் கருதிவிட வேண்டாம். குறிப்பாக, பெண்களைக் குறும்பு செய்வது மூலமாக, கேலி செய்வது மூலமாக, அதன் மூலமாகத்தான் தமிழ்நாட்டில் இனக் கலவரமே தோன்றுகிறது, அதுதான் காரணமாக அமைந்தது. இதை யாரும் மறந்துவிடக் கூடாது. காய்கறி விற்கிற இடத்திற்குப் போய் ஒரு இனத்துப் பெண் காய்கறி வாங்குகிறாள். அங்கே வியாபாரியாக இருக்கக்கூடியவர் இன்னொரு இனத்தைச் சார்ந்தவர். அவர் கேலி செய்தார் என்பதற்காகத் தொடங்கியதுதான் இன்றைக்கு தமிழகத்திலே தீயிட்டு எரிந்துகொண்டிருக்கிற சம்பவங்கள். அணைக்கமுடியாத துயரமான காட்சியாக அமைந்திருக்கிறது. அதனுடைய தொடர்ச்சியான கதைகளில்தான் பள்ளி மாணவர்கள், மாணவியரிடத்திலே இதுபோன்ற



1998 நவம்பர் 27] [திரு. ஜி. பழனிசாமி]

கேலி செய்கிற, குறும்பு செய்கிற தருணத்தில், ரூ.10,000 அபராதம் அல்லது ஓராண்டுச் சிறை என்கிற இந்தச் சட்டத் திருத்தம் இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 12-30

மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள்கூட ஆடைகளை நாகரிகமான முறையிலே அணிவதுபற்றிச் சொன்னார்கள். நாகரிகமாக அந்த ஆடைகளை உடுத்திக்கொள்வதிலே தவறில்லை. ஆனால் அநாகரிகமான ஆடைகளை அணிந்துகொள்கிறபோதுதான் மாணவர்களுடைய பார்வை அங்கே படுகிறது. ஏதோ பெண்களை நாம் குறை சொல்லவேண்டுமென்ற நோக்கத்திற்காக அல்ல.ஓட்டப் பந்தயத்திலே கலந்துகொண்ட நம்முடைய உஷாவை அநேகமாகப் பார்த்தீர்கள் என்றால் அவர் போட்டிருக்கக்கூடிய ஆடை மிகக் குறைவான ஆடை. ஆனால் அவரைப் பார்த்து யாரும் கேலி செய்ததில்லை, பாராட்டுக்குரியதாக அது அமைந்தது. ஏனென்றால் அவர் மிகப் பெரிய வீராங்கனையாக மாறிய நிலையில் அந்தப் பெண்ணைப் பார்க்கிற பார்வை—அவர்கள் ஓடுகின்ற அந்த ஓட்டப் பந்தயத்திலே கலந்துகொள்கிற வீராங்கனையாக நாம் சிந்திக்கக் கூடிய அளவிற்கு—அந்தப் பார்வை இருக்கிறது. பொதுவாக, பார்வைதான் குறும்புக்கு ஒரு காரணமாக அமைந்துவிடுகிறது. அப்படிப்பட்ட அழகான ஆடைகள் உடுத்துவதை நிச்சயமாக வரவேற்கவேண்டும். ஆனால் அநாகரிகமான ஆடைகளை உடுத்துகிறபோது மற்றவர்களுடைய கண் அந்தப் பக்கத்திற்குப் போகிறபோதுதான் இதுபோன்ற குறும்புத்தனம் வருவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது. ஆக அந்த மாணவர் பருவம், இளமைப் பருவத்தில் இது இயற்கையாக, ஆண்களிடத்திலேயும் உண்டு. பெண்களிடத்திலேயும் உண்டு. ஏதோ ஒரு சாராரை மட்டும் நினைத்துவிட முடியாது. இது இரண்டு சாரார் பக்கத்திலும் இருக்கிறது. அழகான ஆண்களைப் பார்த்தால்கூட சில பெண்கள் திரும்பிப் பார்க்கிற பழக்கம் உண்டு. அதுபோல் அழகான பெண்களைப் பார்த்தால் ஆண்கள் திரும்பிப் பார்க்கிற பழக்கமும் உண்டு. இந்த யதார்த்தத்திற்கு மாறாக ஒரு சட்டத்தை நிறைவேற்றுகிறபோது. இரு பக்கத்திற்கும் அந்தச் சட்டம் அமைய வேண்டுமே தவிர, ஒரு பக்கமாக அமைந்துவிடக் கூடாது. அதுபோலதான் ஒருவருக்கு தண்டனை வழங்குகின்ற வகையில், இன்னொருவருக்குத் தேவையற்ற முறையில் ஒரு தண்டனை வழங்கக்கூடிய விதத்தில் இந்தச் சட்டம் அமைந்துவிடக்கூடாது என்பதையே எங்களுடைய கட்சியின் சார்பாக எங்களுடைய

கருத்துக்களாகச் சொல்கிறோம். ஆகையால் ஒன்றும் அவசரமில்லை. ஏதோ ஒரு சம்பவம் நடந்தது என்பதற்காக அவசரமாக ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றவேண்டும் என்பதற்காக இல்லாமல் இந்தச் சட்டத்தை விட்டு, மீண்டும் பரிசீலனை பண்ணி நிறைவேற்றலாம் என்று சொல்லி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்வதற்கான இந்தச் சட்டத்தை, தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக முழுமையாக நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம். தமிழகத்திலே இருக்ககக்கூடிய கட்சிகளுக்கு எல்லாமே ஆண்கள் தலைவர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆனால் ஒரேயொரு கட்சியினுடைய தலைவர் மட்டும்தான் பெண் தலைவியாக இருந்துகொண்டிருக்கிற இயக்கத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் தாமரைக்கனி அவர்கள் இந்த அவையிலே பேசுகிறபோது—முழுக்க முழுக்க இந்த மாமன்றத்தில் நாம் பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர்களாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம். இந்த அவையிலிருந்து புறப்பட்டுப் போகக்கூடிய ஒவ்வொரு சொல்லையும் இந்தத் தமிழ்நாட்டு மக்கள் மிகக் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்—ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறவர் இங்கே விவாதிக்கிறபோது அந்த விவாதத்தை நாம் கேலிக்குரிய வகையில், பெண்களை கேலி செய்யக்கூடாது என்று சொல்லக்கூடிய ஒரு சட்டத்தை இங்கே நிறைவேற்றிவிட்டு, பெண்களை கேலி செய்யக்கூடிய அளவிலே நாமே இந்த அவையிலே பேசிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு முறையாக இது வந்துவிடுமோ என்கிற அச்சம் எனக்கு இருக்கிறது. இதிலே நாம் பொறுப்போடு நடந்துகொள்ளவேண்டுமென்கிற மாதிரி அந்தக் கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் பேசி முடித்துவிட்ட பிறகு நீங்கள் பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** நான் தன்னிலை விளக்கம் சொல்ல வேண்டாமா?





**திரு. சி. ஞானசேகரன்:** நான் இன்னும் என்னுடைய கருத்தை சொல்லி முடிக்கவில்லை. I have not completed my argument so far.

**திரு. இரா. தாமரைக்கனி:** என்னுடைய பெயரை அவர் use பண்ணியிருக்கிறார். அதற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா?

**திரு. சி. ஞானசேகரன்:** நான் இன்னும் முடிக்கவேயில்லை. இன்னும் கூட சொல்லப் போகிறேன். அதையும் சேர்த்துச் சொல்லுங்கள். உங்கள் பெயரை நான் use பண்ண வேண்டியதாக இருக்கிறது.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெண்களைக் கேலி பண்ணுவதைத் தடைசெய்கின்ற இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், அதிலே உள்ள சில குறைபாடுகளைப் போக்க வேண்டும் இரண்டு பக்கத்திலேயும், அதாவது பெண்களும் பாதிக்கப்படக்கூடாது, ஆண்களும் பாதிக்கப்படக்கூடாது. எனவே ஆய்வுக்குழுவுக்கு விடுங்கள் என்று சொல்லியிருக்கிறோம். மேலும், கிண்டல் ஒன்றும் பண்ணவில்லை. அந்தக் காலத்திலே நம்முடைய தமிழர் பண்பாடு எப்படி, இந்தக் காலத்திலே பண்பாடு எப்படி என்று ஒப்பிட்டுப் பேசுவது கேலி, கிண்டல் ஆகுமா? அதுமாதிரி நாங்கள் பேசவில்லை. நீங்கள் தவறான கருத்தை சபைக்கும், நாட்டு மக்களுக்கும் கொடுக்கிறீர்கள். அதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்.

பிற்பகல் 12-35

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சாதாரண மக்கள்கூட ஒரு பெண்ணிடம் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதற்கு முன் உதாரணமாக சட்டமன்ற உறுப்பினர் இருக்க வேண்டும், இந்த அவையும் இருக்க வேண்டும் என்று நான் கருதுகிறேன். இதிலே, இந்த விவாதத்தை நாம் கொண்டு போகிறபோது, இது சிரிப்பு அலையை உருவாக்கக்கூடிய ஒரு விவாதமாக அமைந்து விடக்கூடாது. சரிகா ஷா என்கிற எத்திராஜ் காலேஜினுடைய ஒரு பெண் உயிரை இழந்திருக்கிறாள். ஒரு குடும்பம் இன்றைக்கு எந்த அளவிற்கு பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற உணர்வுகளை எல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான் இந்தச் சட்டத்தை இங்கே இயற்ற இருக்கிறோம். சரிகா ஷா மரணம் ஒன்றுதான் நம் கண்களுக்குப் புலப்பட்டிருக்கிறது, செய்திகளிலே வந்திருக்கிறது. இன்றைக்குக்கூட ஜூனியர் விகடன் பத்திரிகையிலே

ஒரு செய்தி. சேலம் வ.உ.சி. நகரிலே சுதா என்கிற பெண்ணை மூன்று இளைஞர்கள். ஜுனைது, அக்பர். உசேன் கேலி செய்ததன் காரணமாக, 17 வயதுள்ள சுதா என்கிற அந்தப் பெண் தற்கொலை செய்து கொண்டு. அந்தக் குடும்பமே இன்று அழுது கொண்டிருக்கிறது. என்று.

அதுபோல, சைதாப்பேட்டையிலேகூட மோட்டார் சைக்கிளிலே பின்னால் அமர்ந்து கொண்டுபோன ஒரு பெண் போட்டுக்கொண்டிருந்த சுடிதாரின் மேலுள்ள அந்த மார்த் துணியை பின்னால் போகிற ஹீரோ ஹோண்டாக்களில் இருக்கக்கூடிய ஹீரோக்கள் பிடித்து இழுத்ததன் விளைவாக அந்தப் பெண் கீழே விழுந்த செய்தியெல்லாம் இருக்கிறது. ஆகவே, ஒரு சில செய்திகள்தான் நம் கண்களுக்கு புலப்படுகின்றன. பல செய்திகள் நமக்கு வருவதில்லை. நாம் தமிழ் கலாச்சாரத்தைப் பற்றி சொல்லிக்கொண்டிருக்கிறோம். தமிழ் கலாச்சாரத்தைப் பற்றி சொல்லும்போது, தமிழ்ப் பண்பாட்டையும் நாம் காப்பாற்றியாக வேண்டும். இன்றைய இளைஞர்கள் தடம் புரண்டு போய்க்கொண்டிருக்கிறார்கள். தடம் புரண்டு போய்க் கொண்டிருப்பதற்கு எடுத்துகாட்டுத்தான் சரிகா ஷாவினுடைய மரணம். அதேபோல், சேலத்திலே சுதாவினுடைய மரணம். அதுபோல் பல நிகழ்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிற காரணத்தினாலே, என்னைப் பொறுத்த அளவில் நான் சொல்வேன், ஓராண்டு பிளஸ் 10 ஆயிரம் ரூபாய் என்று அபராதம் போட்டிருப்பதை இன்னும் 3 ஆண்டுகள் சிறைத் தண்டனை, இன்னும்கூட அபராதத்தை உயர்த்தலாம். இப்படி ஒரு சட்டத்தைக் கொண்டுவருகிற காரணத்தினாலேதான் அப்படிப்பட்ட குறும்பு கொஞ்சம் அடங்கியிருக்கிறது. இன்னும் அது முடிந்துவிடவில்லை. இன்னும் அதுபோன்ற குறும்புகள் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. செங்கை சிவம் அவர்கள் பேசுகின்றபோது சொன்னார்கள் ராகிங் இல்லை என்று. ராகிங் இல்லை என்ற கருத்தை இப்போது நான் ஒத்துக்கொள்ளத் தயாராக இல்லை. பல கல்லூரிகளிலே அது இன்னும் இருந்து கொண்டிருக்கிறது. புகார்கள்தான் வரவில்லை. சென்னை மருத்துவக் கல்லூரியிலேகூட அது இருந்து கொண்டிருக்கிறது. நான்கூட அந்த Deen-இடம் பேசி. அந்தக் குறை இருப்பதைச் சொன்னேன். தஞ்சை கல்லூரி எதனாலே மூடப்பட்டது? இன்னும் பல கல்லூரிகளிலே அது இருந்துகொண்டுதான் இருக்கிறது.



இந்தச் சட்டம் பற்றி சட்ட அமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது 'Person includes male and female' என்று சொன்னார்கள். பொதுவாக, சட்டத்தை இயற்றுகிறபோது, 'Man includes woman' என்று வரும். இந்தச் சட்டத்தை பொறுத்த அளவில் நீங்கள் ஆங்கிலத்திலே போடுகிறபோது, இது 'Eve-teasing Prohibition Act' என்று வந்துவிடுகிறது. ஆனால் தமிழிலே போடுகிறபோது, பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடை செய்வதற்கான சட்டம் என்று போட்டிருக்கிறீர்கள். இதிலே person என்று போட்டாலும், நிச்சயமாக 'It includes male and female' என்று வரவே வராது. இந்தச் சட்டத்தைப் பொறுத்த அளவிலே பெண்களைப் பாதுகாக்கும் ஒரு சட்டமாக இது இருந்து கொண்டிருக்கிறது. ஆனால், ஆண்களுக்கும் அதுபோன்ற பாதுகாப்பு வேண்டும் என்கிற கருத்தை இன்று பல உறுப்பினர்கள் இங்கே வலியுறுத்தியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கொஞ்ச காலத்திற்குப் பெண்களைப் பாதுகாப்போம். தேவைப்பட்டால் பிறகு ஆண்களைக் காக்க சட்டம் கொண்டு வருவோம். (சிரிப்பு)

**திரு. சி. ஞானசேகரன்:** முதல்வர் அவர்களுடைய கருத்துக்கு நன்றி. இதில் இருந்தே நம்முடைய அப்படி ஒரு சட்டம் வரத்தேவையில்லை. பண்பாடு, தமிழ்ப் பண்பாடு கொஞ்சம் முதிர்ச்சி அடைய வேண்டும். அப்போது நிச்சயமாக இந்தச் சட்டத்திற்கே வேலை இல்லாமல் இருக்கக்கூடிய அளவிற்கு நம்முடைய தமிழ் நாகரிகம், பண்பாடு இருக்க வேண்டும் என்ற கருத்தை நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த Eve-teasing-ஐ பொறுத்தவரையில் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்கு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புவது, இன்னும் மருத்துவக் கல்லூரிகளிலே ராகிங் கொஞ்சம் அதிகமாகவே இருந்து கொண்டிருக்கிறது. ஆண்களை ஆண்களே ராகிங் செய்கிறார்கள். இப்போது மருத்துவக் கல்லூரியில் முதலாண்டு படிக்கும் மாணவனை சீனியராக இருக்கும் மருத்துவக் கல்லூரி மாணவன் எல்லாத் துணிகளையும் அவிழ்த்துப் போட்டுவிட்டு வெறும் ஜட்டியோடு இரவு 2 மணிக்கு எழுப்பி, ஓடடா என்று சொல்கிற கதையும் இருக்கிறது. இன்னும் இதுபோன்ற நிகழ்ச்சிகள் எல்லாம் நடந்து கொண்டிருக்கின்றன. இன்றைக்கு புகார்கள் வரவில்லை. புகார் கொடுத்துவிட்டால், அந்தக் கல்லூரியிலே, அந்தப் பையன் படிக்க முடியாது. அப்படிப்பட்ட ஒரு பய உணர்வோடு இருந்து

கொண்டிருக்கிற காரணத்தினாலே, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கல்லூரி முதல்வர்களை ஒரு நாளைக்கு அழைத்துப் பேச வேண்டும். காரணம். நாளைக்குப் புகார் கொடுக்கிறபோது, அவர்கள்தான் கொடுக்க வேண்டும். ஆனால், புகார் கொடுத்துவிட்டால். அந்தக் கல்லூரியினுடைய பெயர் கெட்டுவிடும் என்பதற்காக, அந்தப் புகாரை அமுக்கி வைத்துவிடுகிறார்கள் என்று சொன்னால், பிறகு நாளைக்கு குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்படாமல் போகும் ஒரு நிலை வந்துவிடும். ஆகவே, இந்தச் சட்டத்தை இயற்றுகிறபோது எச்சரிக்கை தேவைதான்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொல்கின்றபோது, சாதாரணமாக ஒரு ஆளைப் பிடிக்கவில்லை என்றால், அவனை இந்தச் சட்டத்திலே பிடித்து விடுவார்கள். அவன் மாட்டிக்கொண்டு அவஸ்தைப்பட வேண்டியதாக இருக்கும். ஆகவே, இதை ஆய்வுக்குழுவுக்கு அனுப்பலாம் என்று சொன்னார்கள்.

பிற்பகல் 12-40

சாராய வழக்குகளைப் பற்றிச் சொன்னார்கள். சாராய வழக்குகள் என்பது வேறு. ஆனால் இந்த வழக்கு என்கிறபோது புகார் கொடுக்கக் கூடிய, பாதிக்கப்பட்ட ஒரு குடிமகன் வந்து இந்தப் புகாரைக் கொடுத்தால்தான் இந்த வழக்கே வரும். அல்லது நம்முடைய வெங்கடசாமி அவர்கள் சொல்கிறபோது anybody can give complaint என்று சொன்னார்கள். இருந்தாலும்கூட பாதிக்கப்பட்ட பெண்மணி நாளைக்கு சாட்சியாக வந்தாக வேண்டும். ஆகவே மற்ற வழக்குகளைத் தொடுப்பது மிக எளிது. ஆனால் இதுபோன்ற வழக்குகளைத் தொடுப்பது கொஞ்சம் அரிது. ஆகவே இதனை ஆய்வுக்குழுவுக்கு அனுப்ப வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

ஏற்கெனவே இந்தச் சட்டம் ஜூலை மாதத்திலிருந்து அமலுக்கு வந்ததாக நாம் சொல்கிறோம். விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிற்குக்கூட இன்னும் வழக்குகள் பதிவாகவில்லை. ஆங்காங்கே நடப்புகள் நடந்துகொண்டிருக்கின்றன. ஆகவே நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். ஏதோ 2 இடங்களிலே வழக்கு பதிவு செய்யப்பட்டதாக அறிகிறேன். அப்படி வழக்குகள் பதிவு செய்யப்பட்டு தண்டனை அடைந்து மீண்டும் அந்தத் தவறை யாராவது செய்தால் அப்படிப்பட்டவர்களை, குண்டர் சட்டத்திலே போட இந்த அரசு முன்வர வேண்டும் என்பதுதான்





என்னுடைய கருத்து. ஏனென்றால் எங்கே பார்த்தாலும் இப்படி நடக்கிறது. மோட்டார் சைக்கிளிலே பெண்கள் போக முடியவில்லை. மோட்டார் சைக்களிலே போனாலே. பின்னாலே அவர்களைக் கிண்டலும், கேலியும் செய்துகொண்டு ஒரு படை புறப்பட்டுவிடுகிறது. இதை அறவே தடுக்க வேண்டுமென்று சொன்னால் கொஞ்சம் இரும்புக்கரம் கொண்டு அவர்களையெல்லாம் அடக்க வேண்டியது நமது கடமை. மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள்; ஓராண்டு படிப்பு கெடும் என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். மாணவர்கள் மாணவர்களாக இருந்து விட்டால் இதுபோன்ற சட்டத்திற்கே வேலை இருக்காது. ஆகவே, மாணவர்கள் மாணவர்களாக நடந்துகொள்ள வேண்டும். இதிலே குறும்புக்காரர்கள் கொஞ்சம் எல்லையை மீறிப் போகக்கூடாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்கள் இங்கே சொல்கிறபோது பெண்கள் எல்லாம் சரியாக நடந்துகொள்ளவில்லை என்றெல்லாம் யாரையோ நினைத்துச் சொல்கிறார்; ஒரு பெண்மணியை நினைத்துக்கொண்டுதான் அவர் சொல்லிக்கொண்டிருக்கிறார் என்று மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் காஞ்சனா கமலநாதன் அவர்கள்கூட சொன்னார்கள். ஆனால், இதிலே என்னைப் பொறுத்தளவில் பெண்களுக்கும் கொஞ்சம் நெறிமுறைகளைச் சொல்ல வேண்டும். அதாவது, சுடிதார் போடுகிறபோதுகூட மார்புத் துணியைப் போட்டாக வேண்டும் என்கிற ஒரு கட்டாயத்தை வைக்கலாம். அப்படி ஏதாவது கொஞ்சம் செய்ய வேண்டும். சலனம் ஏற்படக்கூடிய ஆடவர்கள் இதிலே சலனப்பட்டுப் போகாத அளவுக்கு பெண்களே கொஞ்சம் நல்ல உடை அணிந்து தங்கள் உடலை மறைக்கக்கூடிய அளவிற்கு நடந்துகொள்ள வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலையை அவர்களே வகுத்துக்கொள்ள வேண்டும்.

உண்மையிலேயே இந்தச் சட்டத்திற்கு வேலை இல்லாமல் போக வேண்டும் என்றுதான் நாங்கள் விரும்புகிறோம். ஆனால், குற்றம் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். அதுதான் எங்கள் கருத்து. ஆகவே, இந்தச் சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் முழுமையாக வரவேற்கிறது. வரவேற்று அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் அடிப்படை நோக்கத்தை நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். அண்மைக்காலத்தில் நாடு பெற்ற சில

அனுபவங்களின் அடிப்படையில் இந்தச் சட்டம் தேவைப்படுகிறது என்பதை யாரும் மறந்துவிட முடியாது. இந்தச் சட்டமுன்வடிவு ஏற்கெனவே அரசு பிறப்பித்த அவசரகாலச் சட்டத்திற்கு சட்ட அந்தஸ்து அளிப்பதற்காகத்தான் அவையில் இன்றைக்குச் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறது. ஜூலை மாதத்திலேயே திடீரென்று நாட்டில் ஏற்பட்ட சில நிலைமைகள் அவசரச் சட்டத்தின் மூலமாகத்தான் உடனடியாக இந்தக் கொடுமையை, இந்தத் தீமையைத் தடுக்க வேண்டும் என்ற நிலையில் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பெற்றது. இன்றைக்கு சட்டமன்றத்தினுடைய ஒப்புதலுக்காக இது சமர்ப்பிக்கப்பட்டு இருக்கிறது. எனவே, நான் இதை ஆதரிக்கிறேன். ஆனால், இதிலே இருக்கக்கூடிய சிக்கல் என்னவென்றால் வழக்குமன்றங்களிலே பணியாற்றக் கூடியவர்களுக்கு நன்றாகத் தெரியும். சில வழக்குகளில் வெற்றி பெறுவது என்பது மிக மிக அபூர்வம். மிக மிகக் கஷ்டம். கற்பழிப்பு வழக்குகள். இந்த மாதிரி சில்மிஷங்களைச் செய்தது தொடர்பாக அரசு போடுகின்ற இந்த வழக்குகளை எல்லாம் நிரூபிப்பது மிக மிகக் கடினம். இன்று இருக்கக்கூடிய Evidence Act மற்றும் வழக்கு மன்றங்களிலே நாம் கடைபிடிக்கக்கூடிய நடைமுறைகள் இவற்றை எல்லாம் வைத்து நாம் நிரூபிப்பது - இந்தக் குற்றம் செய்தான், இந்த சில்மிஷம் செய்தான் என்று ஒருவன்மீது குற்றம் சாட்டப்பட்டால் நிரூபிப்பது - எப்படி நிரூபிப்பது? இது மிக மிகக் கஷ்டம். கற்பழிப்பு வழக்குகளாக இருந்தாலும்கூட - கற்பழிப்பு வழக்கு போடுவது எளிது. - அந்தக் கற்பழிப்பு செய்யப்பட்டது என்று வழக்குமன்றங்களிலே நிரூபணம் செய்வது அனுபவ சாத்தியம் இல்லாதது. அதிலே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன. பல பெண்கள் வழக்குமன்றங்களில் அப்பேற்பட்ட வழக்குகளை எடுத்துக்கொண்டு வந்தால், ஏன் போட்டோம் இந்த வழக்கை, என்ற அளவுக்குத்தான் அவர்கள் ஆளாக்கப்படுவார்கள். பலவற்றை in-camera cases என்று நாம் நடத்துகிறோம். ஆனால் in-camera cases-ஐ வழக்குமன்றங்களில் நடத்துவதுகூட மிக மிகக் கடினம்., நிரூபிப்பது கடினம்.

பிற்பகல் 12-45

அதேநேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சொல்லுக்கு விளக்கம் அளித்தார்கள். அது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிற ஒன்று. ஆனால், அந்த ஒரு சொல் இருக்கும்போது அதையே பயன்படுத்தியிருக்கிலாமே? `man' என்று சொன்னால் man includes woman also என்ற விளக்கத்தை அவர்கள் சொன்னார்கள். அதற்குத் தேவையாக இருக்கும்போது if in any case if it is obliged inevitably





that such a word only should be used and explanation should be made afterwards என்று சொன்னால் போதும்.

**HON. THIRU ALADI ARUNA :** Just I mentioned the general meaning of the word `man'. All men are created equals. It means women also. But in this context the meaning is little different. If you say `person' it will include women. That is why specifically and categorically we have stated `man'. The very purpose of the Act, you know well, is to punish the man who is teasing, but not the woman.

**THIRU M. ABDUL LATHEEF :** When you are having an appropriate word `person', then why should go in for further clarifications and explanations.

**HON. THIRU ALADI ARUNA :** It includes `women'. That is why we have omitted.

**THIRU M. ABDUL LATHEEF:** The stress is laid only upon the man. Man is projected and man is highlighted. Therefore, instead of using that word, what is the difficulty in using the word in practice and convention, i.e. instead of `man' you can use `person' which includes both the sex.

**HON. THIRU ALADI ARUNA:** This is not the object of the Bill. The very purpose of the Bill is to protect the modesty and dignity and decorum of the women and not men.

**THIRU M. ABDUL LATHEEF:** I am afraid, I am unable to accept this stand of the Hon. Minister. Because men also do have, definitely, honour, dignity on par with the women. I cannot say that man does not have . . .

**HON. THIRU ALADI ARUNA:** That is why I mentioned earlier, literally that all men are created equals. It includes women. There is no difference of opinion. As far as the legality of the Bill is concerned, what I would like to say is `man' means `man' alone; `person' means `women'. The very purpose of the Bill is to protect the women and not the men.

**THIRU M. ABDUL LATHEEF:** His explanation is of a general character. Therefore, when you are having a word `person' why should you ignore that word and then include the word `man' and coming out

with further explanations and clarifications. What is the necessity? When you are having a word, `person', include person. What is the use for giving further clarifications and further work to the advocates. I do not understand. Therefore what I said should be taken rightly. Not that I differ. I submit that `person' would be the appropriate word instead of `man'.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டத்தினுடைய மிக முக்கியமான நோக்கம், பெருயபான்மையாக ஆண்களால், இளைஞர்களால், மாணவர்களால் இளம் பெண்கள் பாதிக்கப்படுகிற ஒரு நிலைமை நாட்டில் வளர்ந்து வருகிறது என்பதால், அதைத் தடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலே சட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. இதில் `man' என்ற சொல், பெருமளவுக்கு அந்தக் குறிக்கோளை உணர்த்துகிறது. ஒருவேளை பெண்களும் அதிலே சேர்த்து இப்படிப்பட்ட குற்றச்சாட்டுக்கு ஆளாகிற ஒரு நிலைமை வருமானால், இந்தச் சொல் அதற்குத் தடையாக இருக்காது. இதனுடைய முக்கியமான நோக்கம் ஆண்களால் பெண்கள் பாதிக்கப்படுவதைத் தடுப்பதுதான். பெண்களால் ஆண்கள் பாதிக்கப்படுவது எனபது, நம்முடைய திரு. ஞானசேகரன் போன்றவர்கள் சொல்கிற நிலைமை எப்போதாவது வருமானால், ஒருவேளை அவருக்கு வரலாம். (சிரிப்பு)., அப்படி வந்தால், அதை அவர்கள் தெரிவித்தால், அப்போது அதுபற்றிக் கருதலாம். ஆனால், இந்தச் சட்டத்தினுடைய முதல் நோக்கம் பெண்களுக்கு இழைக்கப்படுகிற அநீதியைத் தடுப்பதுதான்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் அவர்களே, சாதாரணமாக இன்று நாட்டில் பெண்கள்தான் பாதிக்கப்படுகிறார்கள் என்ற உணர்வு பரவலாக இருந்து கொண்டிருக்கிற காரணத்தால்தான் இந்தச் சட்டம் வருகிறதே தவிர, இதற்கு இப்படியெல்லாம் விளக்கம் கொடுத்து, இந்தச் சட்டத்தைக் கொச்சைப்படுந்த வேண்டாம் என்று நம்முடைய சட்டமன்ற உறுப்பினாகளை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

**திரு. ம. அப்துல் லத்தீப் :** மான்புமிகு போவைத் துணைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள்.



**திரு. ம. அப்துல் லத்தீப்:** தயவுசெய்து, நான் தெரிவித்துக்கொள்வது, சட்டமுன்வடிவுகள் எல்லாம் முறையாக ஆய்வு செய்யப்பட வேண்டும். வார்த்தைக்கு வார்த்தை, வாக்கியத்திற்கு வாக்கியம் ஆய்வு செய்யப்படுவதற்காகத்தான் legislature, இங்கே அதற்காகத்தான் legislature கூடியிருக்கிறது. ஆனால், இதைக் கொச்சைப்படுத்த வேண்டும் என்று சொன்னால், கொச்சைப்படுத்துவதற்காக நான் வரவில்லை; இந்த வாதத்தைக் கொச்சைப்படுத்த வேண்டாமென்று நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரைக் கேட்டுக்கொள்கிறேன். இது சரியில்லை, நான் பேசும்போது அவர் எழுந்து கொச்சைப்படுத்த வேண்டாம் என்று சொன்னால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் சீக்கிரம் பேசி முடியுங்கள். இன்னும் பத்து சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாக, நம்முடைய தாய்க்குலத்தின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய இளம்பெண்கள் எல்லாம் எவ்வளவு துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் ஆளாகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நினைத்து இந்தச் சட்டம் வருவதை மக்களெல்லாம் விரும்புகிறார்கள். இங்கேகூட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் நன்றாகச் சொன்னார். இந்தச் சட்டம் வருகிறது என்றவுடனேயே பல இடங்களிலே துன்பங்களும் துயரங்களும் குறைந்துவிட்டன. pick pocket திருட்டுகள் எல்லாம்கூட குறைந்துவிட்டன என்று மிக நன்றாகச் சொன்னார். அதனால்தான் நான் சொன்னேனே தவிர. வேறு ஒன்றுமில்லை. இந்த 'கொச்சை' என்ற வார்த்தையை வேண்டுமானால் தயவுசெய்து எடுத்துவிடலாம் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு திரு. அப்துல் லத்தீப் அவர்கள், இதை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளாமல் இத்தோடு முடித்துக்கொள்ளுமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல லத்தீப்:** எதற்கும் ஒரு வரைமுறை இருக்கிறது. அந்த நிலைமை உருவானால் நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவருடைய விருப்பத்தை, இன்னும் சொல்லப்போனால் அவருடைய ஆணையை ஏற்று நடப்பேன். ஆனால், அவர் 'கொச்சைப்படுத்துகிறேன்' என்று சொன்னார். இது சட்டமன்றம்; அதனாலே அதை வாபஸ் வாங்கிக்கொள்ளுங்கள். அத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். அத்தோடு நிறுத்திக்கொண்டால் எனக்கு மகிழ்ச்சி. நான் உங்களுடைய

வேண்டுகோளை ஏற்றுக்கொள்கிறேன். அத்தோடு முடித்துக் கொள்ளுங்கள் என்று சொன்னால், எனக்கு என்ன வேலை இல்லையா இங்கே? உங்களுடைய விருப்பப்படி பேசுவதுதான் எனக்கு வேலையா? இதெல்லாம் சரியில்லை. இப்போது நான் சொல்லுவது. . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** போதும் உரையை முடியுங்கள். இன்னும் பத்து சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன. ஏற்கெனவே உங்களைப் பேசுகிறீர்களா என்று கேட்டேன். நீங்கள், உங்களுடைய கட்சி உறுப்பினரைக் காட்டினீர்கள். அவர் பேசிய பிறகு, மறுபடியும் நீங்கள் பேசவேண்டும் என்று கேட்கிறீர்கள்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** சட்டமுன்வடிவிலே யார் விரும்பினாலும் தங்களுடைய கருத்துக்களை . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நான் அதற்காகச் சொல்லவில்லை. முதலிலே பேசுகிறீர்களா என்று உங்களைக் கேட்டபோது உங்களுடைய கட்சி உறுப்பினரைக் காட்டினீர்கள். அவர் பேசிய பிறகு திரும்பவும் பேசுகிறேன் என்று கேட்டீர்கள். அதற்கும் அனுமதி கொடுத்திருக்கிறேன். கொஞ்சம் விரைவாகப் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** தேவையில்லாமலா விவாதம் நடக்கிறது இந்தச் சபையிலே . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இன்னும் பத்து சட்டமுன்வடிவுகள் இருக்கின்றன.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் சொல்கிறேன் என்றால் நான் subject-ல் பேசுவதற்கு கையைத் தூக்குகிறேன். இந்தச் சட்டமுன்வடிவை ஆய்வு செய்வதற்காகத்தான் இங்கே legislation நடக்கிறது. This is a piece of legislation. Eventhough it is a small piece of legislation, the object is very laudable and I have to tell about the consequences of the legislation. What is the use of just rising and saying something which does not bring out the real implications of this Bill?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் பேசுவதிலே எனக்கொன்றும் ஆட்சேபணையில்லை. முதலிலேயே உங்களைப் பேசக் கூப்பிட்டேன், அப்போதே பேசியிருக்கலாமே?



**திரு. ம. அப்துல் லத்தீப்:** நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் முடித்துக்கொள்ளுங்கள் என்கிறீர்கள், எதிர்க்கட்சித் தலைவர் இத்தோடு முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதை அருமை நண்பர் திரு. லத்தீப் அவர்கள் தவறாகப் புரிந்து கொண்டார்கள் என்று கருதுகின்றேன். அவர், உங்களுடைய பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. இந்த subject-ல், இந்த 'கொச்சை' என்ற வார்த்தை இருக்கிறதே, அந்த விவகாரத்தை இத்தோடு முடியுங்கள் என்று சொல்லியிருக்கிறாரே தவிர, அவர் உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள் என்று சொல்லவில்லை. அவர் அப்படிச் சொல்லாமல் இருக்கும்போதே இன்னும் நீங்கள் முடிக்காமல் இருக்கிறீர்கள். அதிலிருந்தே அவர் அப்படிச் சொன்னதாக அர்த்தமில்லை.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்டுக்கொள்வது, என்னுடைய பேச்சின் தொடக்கத்திலேயே இதனுடைய நடைமுறைச் சிக்கல்கள், பற்றிச் சொன்னேன். பல சிக்கல்கள் இருக்கின்றன. வழக்குமன்றங்களிலே வியாக்கியானங்கள் வரும்போது நம்முடைய நோக்கம் நிறைவேறாது போகும். எனவே, இதை ஆழ்ந்து சிந்தித்து, இதனுடைய implication. எல்லாம் சிந்தித்துத்தான் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டும். வெளியே போனால், வழக்குமன்றங்களிலே அது வலிவு இல்லாமல் போய்விடக்கூடாது. அதனுடைய நோக்கம் தோற்கடிக்கப்பட்டு விடக்கூடாது. இந்தக் காரியங்களிலே, தீய காரியங்களிலே ஈடுபடக்கூடிய ஆண்களாக இருந்தாலும், பெண்களாக இருந்தாலும் வழக்குமன்றத்தினுடைய நெளிவு சுளிவுகளிலிருந்து தப்பிவிடக்கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்கிறேன். இதைக் கொஞ்சம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும். எனக்குத் தெரியும், இதனுடைய அவசியத்தை முன்னிட்டுத்தான் அவசரச் சட்டமே வெளியிடப்பட்டது. இப்பொழுது இதை மீண்டும் பொறுக்குக் குழுவிற்கு விட்டால் தாமதம் ஆகாதா என்ற கேள்வியும் உண்டு. ஆனால், அதேநேரத்தில் இதைக் கொஞ்சம் உறுதியாகவும், நடைமுறைச் சாத்தியமானதாகவும், இதனால் ஏற்படக்கூடிய விளைவுகளை ஆழச் சிந்தித்தும் நல்ல சட்டமாக நிறைவேற்ற இதைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும். நன்றாக இதைச் சிந்தித்துக் கொண்டு வருவதுதான்

[திரு. ம. அப்துல் லத்தீப்] [1998 நவம்பர் 27

முறையாக இருக்கும் என்ற காரணத்தினாலே பொறுக்குக் குழுவிற்கு விட வேண்டுமென்று நானும் வலியுறுத்துகிறேன்.

பிற்பகல் 12-55

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு சட்டப் பேரவையினுடைய துணைத் தலைவரவர்களே, இந்தச் சட்டத்தின்மீது 11-க்கும் மேற்பட்ட மாண்புமிகு உறுப்பினர்கள் பங்கு கொண்டு நல்ல அரிய கருத்துக்களை இங்கே கூறியிருக்கின்றார்கள். அவர்கள் கருத்துக்களிலே மிக மையமாகக் கொண்டது இந்தச் சட்டத்தைப் பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டும், மீண்டும் இதைப்பற்றித் தீவிரமாக ஆராய வேண்டும் என்ற கருத்தோடு தங்களுடைய வாதத்தை இந்த மாமன்றத்திலே வைத்திருக்கின்றார்கள். நான் அவர்களுக்கெல்லாம் தெளிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்தச் சட்டம் நல்ல முறையிலே ஆய்வு செய்யப்பட்டு, பரிசீலிக்கப்பட்டு, நிலைமைகளையெல்லாம் உணர்ந்து அதன் அடிப்படையில்தான் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழ்நாட்டில், இப்பொழுது பெண்களைக் குறும்பு செய்கிற பழக்கம், அவர்களைப் புண்படுத்துவது, அவமதிப்பது என்பது நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. 31-7-1998 வரை இந்த Eve-teasing அதாவது புண்படுத்துதல், குறும்பு செய்தல், கேலி செய்தல், கிண்டல் பண்ணுதல் என்று அவர்களை அவமதிக்கின்ற வழக்குகள் மட்டும் 2141 பதிவு ஆகியது.

எத்திராஜ் கல்லூரி மாணவி சரிகா ஷா அவர்கள் எப்படி மரணம் அடைந்தார் என்பதும் இந்த மாமன்றத்திற்குத் தெரியும். இத்தனைக்குப் பிறகும் ஒரு அரசாங்கம், ஒரு சட்டத்தின் மூலம் இந்தக் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காவிட்டால் அரசாங்கம் தன்னுடைய கடமையைச் செய்யவில்லை என்ற குற்றச்சாட்டிற்கு ஆளாகி விடும். எனவேதான், 31-7-1998 அன்றே ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பித்து விட்டோம். அந்த அவசரச் சட்டம், ordinance என்பதற்குத் தமிழாக்கத்தில் அவசரச் சட்டம் என்று சொல்லுகிறோம் பழக்கத்திலே அப்படியிருக்கிற காரணத்தால். அதனாலே அது அவசர அவசரமாகக் கொண்டு வரப்பட்ட சட்டம் என்றோ ஆராயாமல் கொண்டு வரப்பட்ட சட்டம் என்றோ பரிசீலிக்காமல் கொண்டு வரப்பட்ட சட்டம் என்றோ பொருள் அல்ல. பேரவைக் கூட்டம்



1998 நவம்பர் 27] [திரு. ஆலடி அருணா]

நடக்காதபொழுது கொண்டு வரப்பட்ட சட்டம். அந்த ordinance என்ற வார்த்தைக்குக்கூட நம்முடைய பேராசிரியர், தமிழ்க்குடிமகன் போன்றவர்கள் இன்னும் நல்ல தமிழ்ச் சொல்லைக் கண்டுபிடிக்கலாம்.

ordinanceஐ அதாவது அவசரச் சட்டம் என்று சொன்னதனாலேயே ஆத்திரத்தோடு, அவசரத்தோடு கொண்டுவரப்பட்ட சட்டம் என்று யாரும் பொருள் கொண்டு விடக்கூடாது. சட்டத்தை ஆணையாகப் போடுகிறோம். அதனாலே அதற்கு ordinance என்று சொல்லுகிறோம் ஆங்கிலத்தில். அந்தச் சட்டத்தைப் போட்ட பிறகு, இப்பொழுது நிலைமை என்னவென்றால், 217 வழக்குகள்தான், நிகழ்ச்சிகள்தான் நடந்திருக்கின்றன. 2141-இலேயிருந்து கீழே சரிந்து விழுந்து 217 வந்திருக்கிறது. இந்தச் சட்டம் எவ்வளவு பெரிய பயனைத் தந்திருக்கிறது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

பொறுக்குக் குழுவிற்கு அனுப்ப வேண்டியதற்கு என்ன அவசியம் இருக்கிறது என்பதையும் நாம் பரிசீலிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஒரு வாதத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொன்னார்கள். இங்கே man என்று சொல்லப்பட்டிருக்கிறது, person என்று சொல்லப்பட்டிருக்கிறது, இரண்டு வார்த்தைகளும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால், man என்று சொல்லப்பட்டிருக்கின்ற இடத்தில் "eve-teasing" means any indecent conduct or act by a man which causes or is likely to cause intimidation, fear, shame or embarrassment to a woman.." என்று சொல்லிவிட்டு "including abusing or causing hurt or nuisance to, or assault, use of force, on a woman." என்று வருகிறது. எனவே, இந்த woman என்று நாம் திட்டவட்டமாக இதிலே சொல்லிவிட்ட காரணத்தால் அந்த இடத்திலே man என்பது it does not include woman. General sense-லே வராது. அதை நான் திட்டவட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இரண்டாவது பிரிவிலே இருக்கிறது" . . . . Any person who fails to take action" என்று இருக்கிறது. அதிலே, யார் என்றால் அது அதிகாரியைக் குறிப்பிடுகிறது. அந்த அதிகாரி ஆணாகவும் இருக்கலாம், பெண்ணாகவும் இருக்கலாம். எனவே, அவர்கள் நடவடிக்கை எடுக்கத் தவறக்கூடாது என்பதைச் சுட்டிக்காட்டுவதற்காக அதிலே person என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டிருக்கிறது. எனவே, ஒவ்வொரு சொல்லும் ஆழமாகச் சிந்தித்து, பரிசீலித்துத்தான் அதன் அடிப்படையில்தான் இந்தச் சட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[திரு. ஆலடி அருணா] [1998 நவம்பர் 27

இதை யார் வேண்டுமானாலும், தவறாகப் பயன்படுத்துவதற்கு இடமளிக்கும்; நம்முடைய திரு. தாமரைக்கனி அவர்கள் சொன்னார்கள்; நாளைக்கு என்னைக்கூட கடற்கரையிலே யாராவது பிடித்துவிடக்கூடும் என்றெல்லாம் ஒரு சந்தேகத்தைச் சொன்னார்கள். அப்படி யாரும் பிடிக்க முடியாது. காரணம், பாதிக்கப்பட்டவர்கள் புகார் சொன்னால்தான் அதன் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 1-00

5ஆவது பிரிவு, உட்பிரிவு 6-லே `On a complaint made by an aggrieved person, give information to the police about the eve-teasing'. அதாவது 'அவர் சொன்னால்தான்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்கள் சொல்லவில்லையென்றால், திரு. தாமரைக்கனியை விட்டுவிட்டால் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபனை இல்லை. அதனால் யாராவது புகார் கொடுத்தால்தான் நடவடிக்கையே தவிர, புகார் இல்லாமல் எந்த நடவடிக்கையும் நிச்சயமாகக் கிடையாது. அதேநேரத்தில் எந்தச் சட்டத்தையும் தவறாகப் பயன்படுத்திகொள்ளலாம். ஆனால், இந்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் பெண்களுடைய பாதுகாப்பு நம்முடைய தலையாயப் பொறுப்பு, கடமை. பெண்களுடைய பாதுகாப்புக்காக எத்தனையோ நல்ல சட்டங்களையெல்லாம் நாம் நிறைவேற்றியிருக்கிறோம். அந்தச் சட்டங்கள் எல்லாம் நாம் எதிர்பார்த்த அளவுக்கு வெற்றியை அளித்திருக்கிறதா என்றால் இல்லை. அதனால்தான் அதிகச் சட்டங்களை நாம் போட வேண்டிய அவசியம் வந்தது. Dowry-ஐ ஒழிப்பதற்காக Dowry Prohibition Act- என்ற சட்டத்தைக் கொண்டு வந்தோம். அது நாம் எதிர்பார்த்த வெற்றியைத் தந்து விடவில்லை. Indecent Presentation of Women Prohibition Act என்று மத்திய சர்க்கார் ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. அதுகூட நாம் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை. Medical Termination of Pregnancy Act என்று கொண்டு வந்தார்கள். அதுவும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை.

பல சட்டங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. அவை பலன்களைத் தரவில்லை என்பதாலேயே, சட்டங்களைக் கொண்டுவராமல் இருக்க முடியாது. தமிழ்நாட்டிலே நாம் பெண்களுக்காக, தாய்மார்களுக்காக, அவர்களுடைய மரியாதையை, கௌரவத்தைக் காப்பாற்றுவதற்காக பாதுகாப்புத் தர வேண்டியது



1998 நவம்பர் 27] [திரு. ஆலடி அருணா]

அரசின் கடமை. அந்தக் கடமையைத்தான் நாம் இன்றைக்குச் செய்து கொண்டிருக்கிறோம்.

ஆண்களை கேலி செய்தால் என்ன ஆயிற்று, எங்களை அவர்கள் அவமதிக்கவில்லையா என்று அவர்கள் கேட்கலாம். இப்படிப்பட்ட ஒரு புகார் அரசாங்கத்திற்கு இதுவரை வரவில்லை. யாராவது வந்து, இந்தப் பெண் என்னை tease' பண்ணினாள், அசிங்கப்படுத்தினாள் என்று இதுவரையில் எந்த ஆணும் புகார் சொல்லவில்லை. அப்படிச் சொல்கிற ஒரு காலகட்டம் வந்தால், அப்போது குற்றத்தினுடைய எண்ணிக்கை அதிகரித்தால், ஒரு வேளை 'Prevention of atrocities against Adam Act' என்று அப்படி ஒரு சட்டத்தை நாம்கூட கொண்டு வருகிற காலகட்டம் வரலாம். அப்படி வராது என்பது நிச்சயமா? இன்றைக்கு மக்களிடத்திலே பெண்கள் மத்தியிலே, தாய்மார்களிடத்திலே, இயற்கையிலேயே சரிகாவுடைய மரணத்திற்குப் பிறகு ஒரு பெரிய அதிர்ச்சி இருக்கிறது. அதைப் போக்கியாக வேண்டும். அதற்காகத்தான் இந்தச் சட்டத்தை வேக வேகமாக, அவசரச் சட்டமாகக் கொண்டு வந்து, இப்போது இந்த மாமன்றத்தின் ஒப்புதலுக்காக வைத்திருக்கிறோம். எனவே, இதற்கு நீங்களெல்லாம் பூரணமாக ஒத்துழைத்து, ஆதரவு தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதில் சொல்லப்பட்டிருக்கின்ற தண்டனைகளெல்லாம் பெரிய தண்டனைகளல்ல. ஏனென்றால் இப்படி ஒரு தண்டனை இருக்கிறது என்று தெரிந்தால்தான் தவறு செய்யமாட்டார்கள் ஓராண்டு வரைக்கும் சிறை என்றால் ஒரு வருடம் சிறையில் போட்டுவிடுவார்கள் என்று அர்த்தம் அல்ல. அது நீதிபதியினுடைய விருப்பத்தைப் பொறுத்தது. அந்தக் குற்றத்தின் தன்மையைப் பொறுத்துத்தான் அது இருக்கிறது. ஆகவே ஓராண்டு என்று சொன்னாலே ஓராண்டு சிறையில் போட்டுவிடுவார்கள் என்றல்ல. 10,000 ரூபாய் அபராதம் போட்டுவிடுவார்கள் என்று அர்த்தம் அல்ல. அப்படி எடுத்துக்கொள்ள வேண்டிய அவசியமில்லை. மகளிருடைய நலனைக்கருதி இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். இதற்கு இந்த மாமன்றம் நல்ல முறையிலே ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நல்ல முறையில் சிந்தித்து ஆய்வு செய்து, அந்த அடிப்படையில்தான் இது வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. எனவே இந்தச் சட்டமுன் வடிவிற்கு இந்த மாமன்றம் ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 10 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



1998 நவம்பர் 27] [திரு. ஆலடி அருணா]

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு பெண்களிடம் குறும்பு செய்வதைத் தடைசெய்தல் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 53/1998) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(எ) தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 24-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[பேரவைத் தலைவர்] [1998 நவம்பர் 27

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிற்பகல் 1-05

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 ,சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



1998 நவம்பர் 27] [திரு. ஆலடி அருணா]

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்ற (தகுதியிழத்தலைத் தடுத்தல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 54/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஏ) தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998)**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/1998), மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/1998) (@) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டத்திற்கு ஒரு திருத்தம் கொண்டு வந்து, இந்த மதுவிலக்குச் சட்டத்தின்படி குற்றம்

(@) 26-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

இழைக்கக்கூடியவர்களுக்கு கொஞ்சம் அதிகபட்சத் தண்டனையை வழங்குவதற்காகக் கொண்டு வந்த இந்தச் சட்டமுன்வடிவினைத் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தர்மபுரி மாவட்டத்தில் ஓசூருக்கு அருகே உள்ள சூளகிரி என்கிற பகுதியில் விஷச் சாராயத்தை அருந்தி கிட்டத்தட்ட 49 பேர் தங்களுடைய உயிரை இழந்துவிட்ட காரணத்தினாலே இந்த அவசரச் சட்டம் உடனடியாகப் பிறப்பிக்கப்பட்டு, இதுபோன்ற தண்டனையை அதிகரிக்க வேண்டுமென்ற சூழ்நிலை இப்போது உருவாகி இருக்கிறது. மதுவிலக்குச் சட்டத்தை அமல்படுத்துவதற்கு அரசாங்கம் எவ்வளவு முயற்சி எடுத்தாலும் தமிழகத்திலே பல்வேறு மாவட்டங்களில் சாராயம் ஆங்காங்கு திருட்டுத்தனமாக விற்கப்படுவது குறையவில்லை என்பதை நான் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏற்கெனவே எடுத்துவிட்ட Prohibition Enforcement Wing – மதுவிலக்குப் பிரிவை இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறார்கள். அதுகுறித்து ஒரு முறை நான் இந்த மாமன்றத்திலே சொல்லி—மதுவிலக்கு பிரிவை ஒருமுறை நாம் எடுத்தோம்; ஏனென்றால், சாராயம் விற்பவர்கள் சட்டம் ஒழுங்குப் பிரிவுக்கு ஒரு மாமூல், Prohibition Enforcement Wing-ற்கு ஒரு மாமூல் என்று இரண்டு மாமூல் கொடுத்துவிட்டு, சாராய விலையை ஏற்றி விடுகிறார்கள்; ஆகவே, அது தேவையற்ற ஒன்று என்று சொல்லி எடுத்தோம்; பிறகு, மீண்டும் அது சரிவரவில்லை என்று சொல்லி மாண்புமிகு முதல்வர் அவர்கள் புகுத்தி இருக்கிறார்கள். இருந்தாலும்கூட, மாண்புமிகு முதல்வர் அவர்கள் இன்னும் கொஞ்சம் கடுமையாக நடவடிக்கை எடுத்து, தமிழகம் பூராவும் முழுக்க முழுக்க கள்ளச் சாராயத்தைத் தடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதற்காக ஒரு ஆலோசனையை நான் பல முறை, 1991 ஆம் ஆண்டு நான் தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து சொல்லிக்கொண்டு வந்திருக்கிறேன். ஆனால், அப்போதைய முதல்வர் அதைக் காதில் போட்டுக்கொள்ளவில்லை. இப்போதைய முதல்வர் அதை எப்படியாவது எடுத்துக்கொள்ளவேண்டும். பொதுவாக, சாராயச் சட்டத்தில், குற்றம் இழைக்கக்கூடியவர்களைப் பற்றி நாம் சொன்னால், அவர்களைப் பிடித்துக்கொண்டு போகிறார்கள். அவர்கள் காவல் நிலையத்திற்குப் போய் 250 ரூபாயோ, 300 ரூபாயோ fine கட்டிவிட்டு அன்று மாலையே தங்களுடைய கடையைத் திறந்துவிடுகிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமை இருக்கிற காரணத்தினால், அவர்களை





எவ்வளவுதான் போலீசார் ஓடி ஓடிப் பிடித்தாலும், அவர்கள் அபராதத்தைக் கட்டிவிட்டு உடனடியாக சாராயக் கடையைத் தொடங்கிவிடுகிறார்கள். பிறகு எப்படி இதை நாம் கட்டுப்படுத்தப் போகிறோம். ஆகவே, நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், இதுபோன்ற குற்றங்களை, அதாவது சாராயத்தை விற்றாலும் சரி, வைத்துக்கொண்டு இருந்தாலும் சரி, அவர்களை ஜாமீனில் விடக்கூடாத குற்றங்களாக மாற்றுங்கள் என்று அப்போதிருந்து நான் சொல்கிறேன். ஆனால், அப்போதிருந்த அரசு அதை ஏற்றுக்கொள்ளவில்லை. இப்போது மாண்புமிகு முதல்வர் அவர்களாவது உடனடியாக நடவடிக்கை எடுத்து, இதை non-bailable என்று, அதாவது ஜாமீனில் விடக்கூடாத குற்றமாக நீங்கள் வைத்தால்தான் இந்தக் குற்றத்தையே தடுக்க முடியும். அப்போதுதான் அவர்கள் 7 நாட்களுக்காவது உள்ளே இருப்பார்கள். அப்போதும்கூட அவர்களை ஜாமீனில் விடாமல் இருந்துவிடுவது இல்லை. எப்படியும் Public proscuter-க்கு நோட்டீஸ் கொடுத்து, Assistant Public proscuter-க்கு நோட்டீஸ் கொடுத்து பிறகு அவர்கள் வெளியே வருவதற்கு 7, 8 நாட்கள் ஆகும். அந்தக் காலகட்டத்தில் ஜெயிலில் இருந்த உணர்வாவது இருக்கும். அவர்களுடைய குடும்பத்தில் இருப்பவர்கள்கூட, 7 நாட்கள் அவன் ஜெயிலில் இருந்துவிட்டான், வீட்டில் ஆள் இல்லை; ஆகவே, இதுபோன்ற குற்றத்தைச் செய்யாதே என்று சொல்வதற்காவது ஒரு மனப்பக்குவம் அவர்களுக்கு உருவாகும். இல்லாவிட்டால் காலையிலே பிடிக்கப்பட்டவர்கள் மாலையிலே வெளியே வந்துவிடுகிறார்கள்; இந்தச் சாராயத்தை விற்றால் தங்களுக்கு நிறைய பணம் கிடைக்கிறது என்கிற உணர்வோடு விற்பனையைக் கொஞ்சம் அதிகமாக அவர்கள் தொடங்கிவிடுகிறார்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதை ஜாமீனில் விடக்கூடாத குற்றமாக முதலில் மாற்றுவதற்கு நீங்கள் சட்டத் திருத்தத்தை அடுத்தக் கூட்டத் தொடரிலாவது கொண்டு வரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-10

உயிரிழந்திருக்கக்கூடிய 49 பேருக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் கருணைத் தொகை வழங்கியிருக்கிறீர்கள். எங்களுடைய கட்சியின் சார்பாக நானும் முன்னாள் அமைச்சருமான பூவராகவன் அவர்களும், மக்கள் தலைவர் ஐயா மூப்பனார் அவர்களும் சொல்லி அனுப்பி, எங்கள் கட்சியின் சார்பாகவும் சிலவற்றைக் கொடுத்தோம். இதுபோன்ற குற்றங்களில் அதிகமாக ஈடுபட்டு சாராய செல்வம் என்ற பெயரை

வைத்துக்கொண்டு சூளகிரி பகுதியில் ஒருவர் இருக்கிறார். பெயரே சாராய செல்வம். ஆனால் இதுவரை அவர் பெயரிலே ஒரு சாராய வழக்குகூட போடப்படவில்லை. அவர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர். அவர் ஒன்றியக் குழு உறுப்பினராக வேறு தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். சாராய செல்வம் என்று பெயர் வைத்திருப்பவர்மீது ஒரு சாராய வழக்குகூட இல்லையென்று சொன்னால், இதற்கு என்ன பொருள் என்று எனக்கு விளங்கவில்லை. இதுபோன்ற செல்வங்களுக்கெல்லாம் எந்த ஆட்சி வந்தாலும் அவர்களைச் சரிக்கட்டி விடலாம் என்ற நிலைமை இருந்துகொண்டு இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இப்பொழுது முதலமைச்சர் அவர்கள் முதன்முறையாக அவரைக் கைது செய்திருக்கிறார். குண்டர் சட்டத்திலும் போட்டிருக்கிறார். கட்சி வித்தியாசமின்றி யார் குற்றம் செய்தாலும் குண்டர் சட்டத்தில் போட்டிருக்கிறார்கள். அதுபோன்று எல்லா மாவட்டங்களிலும் கட்சி வித்தியாசம் இல்லாமல் நடவடிக்கை எடுத்து யார் குற்றம் செய்தாலும், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இரும்புக் கரம் கொண்டு அடக்கி, கள்ளச் சாராயத்தை ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Deputy Speaker Sir, I welcome the Tamil Nadu Prohibition Amendment Bill. In my constituency 47 persons died and 2 persons became blind due to in take of spurious liquor. At that time, I have made a request to the Hon. Chief Minister to help the family members of the deceased. Generally, we should not encourage such people. But the very next day, I got the message that our Hon. Chief Minister has sanctioned a sum of Rs. 5 lakhs to the people who have lost their family heads. I thank the Hon. Chief Minister for granting the solatium. Actually, I have written to the Prime Minister for some more amount but it was negatived. I am very happy that our Hon. Chief Minster is having kind heart and he has given some compensation.

I learnt that some persons have been arrested under the Goondas Act. As our friend was telling just now, if the authorities caught the





culprit in the morning, definitely they come out in the evening, and then they are selling the arrck in the very same place. Even now it is happening. How are we going to manage these things? As our friend was telling stringent action should be taken against these sellers, drunkards and manufacturers of spurious liquor. They should be booked under non-bailable sections. Otherwise we cannot definitely control them. So, I request our Hon. Chief Minister to take stringent action under all sections which are possible to eradicate spurious arrack. As the persons who are involved in selling spurious arrack are getting huge income, we cannot change them and I request our Hon. Chief Minister to see that some rehabilitation is done to these arrack vendors.

Thank you very much, Sir.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கள்ளச் சாராயம் காய்ச்சுதல், கடத்தல், விற்றல், வைத்தல் அதுபோன்று, போலி மதுவைக் காய்ச்சுதல், வைத்தல், விற்றல் போன்றவற்றைத் தடுக்க வேண்டுமென்பதில் இந்த மாமன்றத்திலே ஒருமித்த கருத்து இருப்பதற்காக நான் என்னுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தச் சட்டத்தை மேலும் வலிமையுள்ளதாக ஆக்க வேண்டும். மீண்டும் கூர்மை உள்ளதாக ஆக்க வேண்டும். தண்டனை கடுமையாக இருக்க வேண்டும். எந்தக் கால கட்டத்திலும் அவர்களுக்கு bail இருக்கக்கூடாது என்ற கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள்.

பிற்பகல் 1-15

கடந்த காலத்தில் இருந்த சட்டத்தையும். இப்போது திருத்தப்பட்டிருப்பதையும் நீங்கள் பார்த்தால் இந்த அரசாங்கம் கள்ளச் சாராயததை ஒழித்துக் கட்டுவதில், போலி மதுவைக் கடத்தி விற்பதை ஒழித்துக் கட்டுவதில் எவ்வளவு ஆர்வம் காட்டுகிறது என்பதை இந்த மாமன்றம் உணர முடியும்.

கடந்த காலத்தில் 4(1) (a) (b) (c) (d) (e) (f) என்று (k) வரை எந்தக் குற்றங்களாக இருந்தாலும் சரி, கள்ளச்சாராயத்தை வண்டியில்

ஏற்றினாலும் சரி, வைத்திருந்தாலும் சரி, கடத்தினாலும் சரி, அது 5 லிட்டராக இருந்தாலும் சரி, 500 லிட்டராக இருந்தாலும் சரி, லாரிக் கணக்கில் ஏற்றினாலும் சரி, எந்தக் குற்றமாக இருந்தாலும், அதற்குக் கொடுக்கப்பட்ட தண்டனை ஆயிரம் ரூபாய் அபராதம். 3 மாதம் ஜெயில் தண்டனை மட்டும்தான். இதுதான் கடந்த காலத்தில் இருந்த நிலைமை. இந்தச் சட்டமுன்வடிவு அமலுக்கு வருகின்ற வரையிலும் இருக்கின்ற நிலைமை இதுதான். ஆனால், இன்றைக்கு இதில் ஒரு பெரிய தீவிரமான மாற்றத்தைச் செய்திருக்கிறோம்.

இப்படி 3 மாத சிறைத் தண்டனை, ஆயிரம் ரூபாய் அபராதம் என்பது மட்டுமல்ல. அதிகாரிகளோடு பேசி ஒரு உடன்பாடே செய்து கொள்ளலாம்; அதாவது இணக்கமான முடிவுக்கே வந்துவிடலாம். ஒரு இடத்திலே போலீசார் கைது செய்து 100 லிட்டர், 1,000 லிட்டர் கள்ளச் சாராயத்தை எடுத்தால், நாங்கள் அபராதத்தைத் தந்து விடுகிறோம் என்று குற்றவாளிகள் ஒத்துக்கொண்டால், அதை ஏற்றுக்கொண்டு அவர்களை விட்டுவிடலாம் என்று பழைய சட்டம் சொல்லுகிறது. இப்போது அதுபோல் எல்லாம் compound செய்வதற்கு, இணக்க முறையிலே தங்களை விடுவித்துக் கொள்வதற்கு எந்தவித வழியும் இல்லாமல் தடுத்திருக்கிறோம்.

இப்போதைய திருத்தத்தை நீங்கள் எடுத்துக் கொண்டால் 50 லிட்டர் வரையிலும் கடத்தி வைப்பதற்குத்தான் பழைய நிலை. 50 லிட்டருக்கு மேல் 100 லிட்டருக்கு மேல் கடத்தி வைப்பதற்கான தண்டனையை அதிகரித்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். நான் அவருக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, பலவற்றுக்கு நாங்கள் 3 ஆண்டு தண்டனையைக் கொண்டு வந்திருக்கிறோம். என்றைக்கு 3 ஆண்டு தண்டனை என்று சொல்லிவிட்டோமோ it becomes a cognizable offence. அப்படி cognizable offence ஆக வந்த பிறகு நீதிமன்றத்திற்குச் சென்றால் எளிதில் bail கிடைக்காது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் சொல்லும்போது. cognizable offence என்று சொன்னார்கள். சாராயச் சட்டத்தில் எல்லாமே cognizable offence தான். Non-cognizable என்பது I.P.C.-யில் எதாவது Private case போடுவதுதான் or Dowry Act-ல் the aggrieved party should give complaint என்கின்ற போதுதான். சாராயச் சட்டத்தில்



எல்லாமே cognizableதான். 50 லிட்டர், அதற்கு மேலே போனால்தான் ஜாமீனில் விடக்கூடாத குற்றம் என்று தண்டனை கொடுக்கிறீர்கள். அதற்குக் கீழே இருந்தால் அவர்களை விட்டுவிடலாம் என்றுதானே அர்த்தம்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** அதைத்தான் நான் சொல்கிறேன். A non-cognizable case means a case in which the Police Officer has no authority to arrest without warrant.

**திரு. சி. ஞானசேகரன்:** சாராயச் சட்டத்தில் non-cognizable என்று எதுவுமே கிடையாது. எல்லாமே cognizableதான். warrant இல்லாமல் பிடிக்கலாம். warrant தேவை என்பதே இதற்குக் கிடையாது. அவ்வளவுதான் வரும்மே தவிர, சாராயச் சட்டத்தில் non-cognizable என்பதற்கே இடமில்லை. எல்லாமே cognizableதான். Non-bailable warrant can be issued only if any person is absent in the Court.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** இந்தச் சட்டத்தில் செய்யப்பட்டிருக்கின்ற திருத்தம் என்னவென்றால், 3 வருட தண்டனை என்று சொன்னதற்குப் பிறகு, எளிதில் அவர்கள் bail-ல் வர முடியாது. Court மூலமாகத்தான் வர முடியும். அதிகாரி தானாகவே விட்டுவிட முடியாது. வழக்கில் compound செய்து கொள்வதற்கு இடம் கிடையாது. அதிகாரியே பேசி முடிப்பதற்கு இடம் கிடையாது. அந்தப் பிரிவை நாங்கள் எடுத்துவிட்டோம். அதுபற்றித் தெளிவாக இதிலே சொல்லியிருக்கிறோம். 'Offences under Section 4(1-A), (aaa), (b), (f), (h) to be out of purview of this compounding' என்பதை எடுத்துவிட்டோம். ஆகவே, அரசு இதில் தீவிரம் காட்டியிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

The offences punishable with rigorous imprisonment for a term, which may extend to three years and upwards shall be non-bailable and the provisions of the Code of Criminal Procedure, 1973 (Central Act 2 of 1994) with respect to non-bailable offences shall apply to those offences என்று மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். தமிழ்நாடு Prohition சட்டத்திலே, பிரிவு 15-C-இல் தெளிவாகச் சொல்லியிருக்கிறோம். இதையும் மாண்புமிகு உறுப்பினர் கவனத்தில் கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். எனவே, தீவிரம்

காட்டியிருக்கிறோம். இதற்கு மேலும் தீவிரம் வேண்டுமென்று சொன்னால், ஒரு படி அதிகமாகச் செய்திருக்கிறோம். இதை நடைமுறைப்படுத்தும்போது, இதற்குப் பிறகு என்ன வருகிறது என்று பார்த்து, இதற்கு மேலும் தீவிரம் தேவை என்று சொன்னால், இந்த மாமன்றத்தின் அனுமதியோடு இந்தச் சட்டத்தை மேலும் தீவிரப்படுத்துவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கிறது. நமக்கு, கள்ளச் சாராயம் ஒழிந்தாக வேண்டும்; போலி மதுபானங்கள் ஒழிந்தாக வேண்டும். அரசாங்கத்திற்கு ஒழுங்காக Wine shops மூலமாக வருமானம் வர வேண்டும்; அதிலே நாம் ஒரே குறியாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

**திரு. பி. ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இந்தச் சட்டமுன்வடிவிலே இப்பொழுது என்ன கேட்கப் போகிறீர்கள்? பேசுகிறீர்களா என்று முதலிலே கேட்டபோது நீங்கள் ஒன்றும் பேசவில்லை. அமைதியாக இருந்து விட்டீர்கள். அமைச்சரின பதிலுரைக்குப்பின் விவாதம் கிடையாது. உட்காருங்கள். இன்னும் 7, 8 சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும், உட்காருங்கள்.

விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 9 முடிய திருத்தங்கள் இல்லை.



பிரிவுகள் 2 முதல் 9 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 58/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஐ) தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1998), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2. திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 23-11-1998-ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்தங்கள் (நிலத்தின் மீதான உச்சவரம்பினை நிர்ணயித்தல்) மூன்றாவது திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 45/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

[1998 நவம்பர் 27

## 10. அரசினர் தீர்மானம்

### விதி 32-ஐத் தளர்த்தல்

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்-விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32-ஐ, 28-11-1998 அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்காக எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை வினாக்கள்—விடைகள் நேரம் இல்லை.

பிற்பகல் 1-25

## 8. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)-தொடர்ச்சி

### (ஒ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை



1998 நவம்பர் 27] [பேரவைத் துணைத் தலைவர்]

சட்டமுன்வடிவு எண் 46/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 23-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 46/1998) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (ஓ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை



சட்டமுன்வடிவு எண் 47/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1998) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 23-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்குதல் மற்றும் கழிவு நீரகற்றுதல் (மூன்றாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 47/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஔ) தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து வரும் இரு சட்டமுன்வடிவுகளும் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய துறையைச் சார்ந்தவை. கருத்துக்களைக் கூற விரும்பும் உறுப்பினர்கள் மூன்று சட்டமுன்வடிவுகள் குறித்தும் பேசலாம். திரு. சி. ஞானசேகரன், சுருக்கமாகப் பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** துணைத் தலைவரவர்களே, மதுரை மாவட்டத்தில், கீரிப்பட்டி, பாப்பாபட்டி, மருதன்குடி ஆகிய மூன்று சிற்றூராட்சிகளுக்கு இதுவரை தேர்தலை நடத்தவில்லை. பல்வேறு காரணங்களால் நடத்தவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். என்ன காரணங்கள் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தல் அறிவிக்கப்படுகிறது. ஆனால் வேட்பு மனுக்களை யாரும் தாக்கல் செய்யவில்லை. ஆகையினால் தேர்தல் நடைபெறவில்லை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

---

@ 23-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (ஐந்தாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 48/1998), நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.





மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

### (அ.அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1998.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, 1998-ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1998). மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1998)-ஐ இங்கு கொண்டு வந்ததை, தமிழ் மாநிலக் காங்கிரஸ் சார்பாக வரவேற்கிறேன். 1998ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 23 ஆம் நாள் உள்ளிட்டு, அதற்குப் பின் எந்த இடத்திலும் யாரும் விளம்பரப் பலகைகளை வைக்கக்கூடாது என்று

@ 24-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆனால், பேசின தேதிக்கு முன்பாக விளம்பரப் பலகைகளை இதுவரை அமைத்திருந்தால், அதை முறைப்படுத்திக் கொள்ள 30 நாட்கள் அவகாசம் என்ற அளவுக்கு அவர்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது இந்த அவகாசம் அவ்வளவு எளிதாக வழங்கப்பட்டிருக்கக் கூடாது என்பது என்னுடைய கருத்தாகும். ஏனென்றால், முறைப்படுத்தப்படாத விளம்பரப் பலகைகள் நகரெங்கும் புற்றீசல்போல் எழுந்து பொது மக்களுக்கு இடையூறாக இருந்துகொண்டிருக்கிறது. குறிப்பாக, சென்ற ஆண்டிலே மழைக் காலத்திலே கன்னிமாரா ஓட்டலுக்குப் பக்கத்திலே இருந்த விளம்பரப் பலகை புயல், மழையின் காரணமாக விழுந்து அங்கு வந்த கார் சேதமுற்று, அதிலேயிருந்த நண்பர்கள் எல்லாம் ஆபத்துக்குள்ளாயினர். ஆகவே, அத்தகைய விளம்பரப் பலகைகளை அமைக்கும்போது, அவற்றின் ஸ்திரத் தன்மை, அதனுடைய அளவு மற்றும் பல்வேறு structural stability போன்றவற்றையெல்லாம் பார்த்து, உரியம் வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், விளம்பரப் பலகைக்கு அனுமதி அளிக்கிறபோது, அதிலே வரக்கூடிய contents என்ன என்பதை ஆராய்ந்து அனுமதியளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், தகாத பொருளில், தகாத வார்த்தைகளை வரைந்து, மக்களுடைய கவனத்தை திசை திருப்பி, அதனால் பல விபத்துக்களுக்கு வாய்ப்பு உண்டாக்கக்கூடிய வகையில் அந்த விளம்பரப் பலகைகள் அமைந்து விடுவதை நாம் கண்கூடாகக் காண்கிறோம். ஆகவே, விளம்பரப் பலகைகளுக்கு முதலில் அனுமதியளிக்கும்போது, அதனுடைய contents-ஐ ஆராய்ந்து பார்த்து, அதன்பின் அதற்கு அனுமதி தரவேண்டுமென்ற திருத்தம் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொதுவாக, பல்வேறு விளம்பரப் பலகைகள் அமைக்கப்படுகிறபோது, சில பிரச்சினைகளும் அங்கே வந்துவிடுகின்றன. குறிப்பாக, புகழ்பெற்ற தலைவர்களுடைய சிலைகளை மறைக்கும் வண்ணம் சில பலகைகள் அமைக்கப்படுகின்றன என்றுகூட புகார்கள் வருகின்றன. ஆகவே, அவற்றையும் ஆராய்ந்து பார்த்து, இடம் பொருள் பார்த்து, அவற்றிற்கு அனுமதி வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் பேசி முடிக்கிறேன்.





அதேபோல், சினிமா விளம்பரங்களைப் பொறுத்தவரையில், சாரங்களைப் போட்டு, மிகப் பெரிய அளவிலே cut-outs வைத்து, பல்வேறு இடங்களிலே இடையூறுகளை ஏற்படுத்துகிறார்கள். அவ்வாறு சினிமா தட்டிகள் வைப்பதற்கான வரையறை என்ன என்று இந்த சட்டத்திருத்தத்திலே கூறப்படவில்லை. ஆகவே, மரச் சாரங்களை வைத்து அமைக்கின்ற விளம்பரத் தட்டிகளை தடை செய்து, நிரந்தரமாக இருக்கக்கூடிய இடங்களிலே அவற்றைப் பயன்படுத்தலாம் என்று திருத்தம் அமைக்கப்பட வேண்டும். குறிப்பாக, சினிமா விளம்பரங்களைப் பொறுத்தவரையில் இத்தகைய நிலைமை ஏற்படக்கூடும் என்பதற்காகத்தான் குறிப்பாக இதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல் விளம்பரப் பலகைகள் அமைக்கும்போது, அவை எத்தகைய விளம்பரப் பலகைகள் என்பதையும், ஆலோசித்து அனுமதி அளிக்க வேண்டும். நியான் விளக்குகள் பொருத்தப்படுவது—பல்வேறு வகைகளிலே இப்போது electronic posts எல்லாம் வந்திருக்கின்றன—அவற்றினுடைய வகைகளை உணர்ந்து, அதற்குரிய வரிகளையும் கட்டணத்தையும் நிர்ணயித்து இதை முறைப்படுத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம் சட்டத்தை இயற்றுகின்றபோது, நீதிமன்றங்கள் அவற்றை நிராகரிக்காத அளவுக்குச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்பது நியதி. அந்த அடிப்படையில், இதுபோன்ற சட்டங்களை மிகவும் கூர்மையாக ஆராய்ந்து, ஏற்கெனவே அவசரச் சட்டம் இயற்றியதால் ஏற்பட்ட அனுபவங்களையொட்டி, மாண்புமிகு உறுப்பினர் கூறிய மேற்கண்ட விவரங்கள் அத்தனையையும் உள்ளடக்கி, அவை அனைத்திற்கும் அரசுக்கு அதிகாரம் இருக்கத்தக்க வகையில்தான் உருவாக்கப்படுகின்றன என்பதைத் தெளிவாகத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டம் என்பதோடுமட்டுமல்ல; அதையொட்டி விதிகள் என்று வருகிறபோது, இவையனைத்தும் அதிலே இடம்பெறும் என்பதையும் தெளிவாக நான் தெரிவித்துக்கொண்டு, அதற்காகத்தான் இந்தச் சட்டமே வருகிறது என்பதையும் தெரிவித்து, இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்

பிற்பகல் 1-35

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான இந்தச் சட்டமுன்வடிவிலே ஒருசில கருத்துக்களை நான் இங்கே வலியுறுத்த விரும்புகிறேன். இன்றைக்கு அனுமதி இல்லாமல் இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விளம்பரப் பெயர்ப் பலகைகள் சென்னை மாநகரத்திலே, முக்கியமான இடங்களிலே போக்குவரத்திற்கு இடையூறு செய்கிற வகையிலே இருந்து கொண்டிருக்கின்றன. இதனாலே அரசுக்கு எந்தவிதமான வருவாயும் கிடையாது. 640 விளம்பரப் பெயர்ப் பலகைகள் மட்டுமே அனுமதி பெற்றவையாக இருக்கின்றன. 1985 ஆம் ஆண்டிலிருந்து இவை இருந்து கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே அனுமதி பெறாமல இருக்கக்கூடிய இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட விளம்பரப் பெயர்ப் பலகைகளை உடனடியாக நாம் தடை செய்ய வேண்டும். இதிலே செய்யப்பட்டிருக்கிற அந்தத் திருத்தத்திலே முறைப்படுத்துவதற்காக காணப்படுகிற வழிமுறைகள் அப்படிப்பட்ட அனுமதி பெறாமல் வைக்கப்பட்டிருக்கிற விளம்பரப் பெயர்ப் பலகைகளை ஊக்கப்படுத்துவது போல இருக்கின்றன. எனவே அவற்றை முறைப்படுத்துகிறபோது அவர்களுக்கு அனுமதியை மறுத்துவிடுங்கள். புதிதாக வேண்டுமானால் அவர்கள் விண்ணப்பிக்கட்டும். அரசுக்கு வருவாய் தரக்கூடிய அளவுக்கு இதைச் செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில் இந்தக் கட்டணம் மூன்று மடங்காக உயர்த்தப்பட்டிருக்கிறது. விளம்பரப் பெயர்ப் பலகைத் தொழிலிலே ஏராளமான குடும்பங்கள், ஏழைக் குடும்பங்கள், தொழிலாள குடும்பங்கள் எல்லாம் ஈடுபட்டிருக்கின்றன. வரியை அதிகப்படுத்துகிறபோது 80 சதவிகிதத்திற்கு மிகாமல் பார்த்துக் கொண்டால் நலமாக இருக்கும். அந்தக் கூலித் தொழிலாளர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். அனுமதி பெறாமல் வைக்கப்பட்டிருக்கிற அந்த விளம்பரப் பெயர்ப் பலகைகளைத் தடை செய்ய வேண்டும். அவர்கள் வேண்டுமானால் புதிதாக விண்ணப்பிக்கட்டும். அரசின் வருவாயை உயர்த்தக்கூடிய அளவுக்கு இதில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று நான் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல போக்குவரத்திற்கு இடையூறாகவும், தீய சக்திகளைத் தூண்டுகிற



அளவிலும் விளம்பரப் பெயர்ப் பலகைகள் இருந்தால் அவற்றை தடைசெய்வதற்கும் இன்னும் அனுமதி பெறாமல் வைக்கப் பட்டிருக்கிறவற்றை நீக்குவதற்காகவும்தான் இந்தச் சட்டமே வருகிறது என்பதை நான் தெரிவித்துகொள்கிறேன். இந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது அப்படிப்பட்ட நீங்குகள் களையப்படும் என்ற உறுதியை இந்த அவையில் தருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 12 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்றும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

[1998 நவம்பர் 27

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 55/1998) நிறைவேற்றப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

**(ஆ.ஆ) தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு, 1998**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/1998), மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/1998)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

@ 24-11-1998 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



1998 நவம்பர் 27]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் படுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்

பிற்பகல் 1-40

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"1998 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (மூன்றாம் திருத்தம் மற்றும் செல்லத்தக்கதாக்குதல்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 56/1998), நிறைவேற்றப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

எஞ்சியுள்ள சட்டமுன்வடிவுகள் நாளை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-11-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-41 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

53. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி விதிகளில் திருத்தம் செய்தது குறித்து வணிக வரிகள் துறையின் 23-6-1998 ஆம் நாளிட்ட 165 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்



(தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

61. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்து நான்காவது அறிக்கை, 1998-99.

62. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தைந்தாவது அறிக்கை, 1998-99.

63. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தாறாவது அறிக்கை, 1998-99.

64. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தேழாவது அறிக்கை, 1998-99.

65. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தெட்டாவது அறிக்கை, 1998-99.

66. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று நாற்பத்தொன்பதாவது அறிக்கை, 1998-99.

67. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பதாவது அறிக்கை, 1998-99.

68. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

69. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்திரண்டாவது அறிக்கை, 1998-99.

70. பொதுக் கணக்குக் குழுவின் நூற்று ஐம்பத்து மூன்றாவது அறிக்கை, 1998-99.

71. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபதாவது அறிக்கை, 1998-99.

72. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்தொன்றாவது அறிக்கை, 1998-99.

73. பொது நிறுவனங்கள் குழுவின் எழுபத்திரண்டாவது அறிக்கை, 1998-99.

219403

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.